# 1.பிரெஞ்சுப் புரட்சி (1789)

உலக வரலாற்றில் இடம் பெற்றுள்ள குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளில் ஒன்று பிரெஞ்சுப் புரட்சி ஆகும். மன்னராட்சியை முடிவிற்குக் கொண்டு வந்து நவீன யுகத்திற்கு ஏற்ற ஆட்சி மக்களாட்சியே என்ற உண்மையை உணர்த்திய முன்னோடி நிகழ்ச்சி இப்புரட்சி ஆகும். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் பிரான்சில் ஏற்பட்ட இப்புரட்சி அந்நாட்டு வரலாற்றில் மட்டுமல்லாது ஐரோப்பாவின் பிற நாடுகளிலும் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற முற்போக்குக் கருத்துக்கள் இப்புரட்சியின் விளைவாய் மலர்ந்தன. பிரான்சில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதாரச் சூழ்நிலைகள் இப்புரட்சிக்கு வித்திட்டன. அரசியலில் ஆள்பவருக்கும், ஆளப்படுபவருக்குமிடையே இணக்கமான உறவு காணப்படவில்லை. சமுதாயத்தில் குடியானவர்கள், பிரபுக்கள், மத குருமார்கள் என்ற ஒன்றோடொன்று தொடர்பற்ற மூன்று பிரிவுகள் நிலவின. பொருளாதார அடிப்படையில் ஏழை, பணக்காரர்களிடையே பெரிய அளவில் ஏற்றத் தாழ்வு நிலவியது. இப்பிரச்சினைகள் நேற்றுப் பெய்த மழையில் இன்று பூத்த காளான்கள் போன்றவை அல்ல. நீண்ட காலமாய்ப் புரையோடிப் போனவையாகும். எனவே அவற்றைச் சரிசெய்ய பெரிய அளவில் நடைபெற்ற அறுவை சிகிச்சையே பிரெஞ்சுப் புரட்சியாகும். மேல்தட்டு மக்களின் அதிகார வலிமையையும் ஆணவப் போக்கினையும் எதிர்த்துக் கீழ்த்தட்டு மக்களால் புரட்சி என்னும் ஆயுதம் பயன்படுத்தப்பட்டது. உலக நாகரீகம் தனது ஏடுகளில் பதிவு செய்த முதல் பெரும் புரட்சி இதுவே.

## காரணங்கள்

### 1.அரசியல் காரணங்கள்

### 1.பார்போன் வம்ச அரசர்களின் வல்லாட்சி

பிரான்சில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த பார்போன் வம்ச அரசர்கள் வல்லாட்சியாளர்களாகயிருந்தனர். தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். பதினான்காம் லூயி "தானே அரசு" (I am the State) என்று கூறிக் கொண்டார். மக்கள் நலனைப் பேணவும், மேம்படுத்தவும் அத்தகைய வல்லாட்சியை 14.ஆம் லூயி பயன்படுத்தினார். எனவே ஒளி பொருந்திய வல்லாட்சியாளர் எனப்பட்டார். ஆனால் அவரைத் தொடர்ந்து அரியணை ஏறிய 15.ஆம் லூயி அரசு அதிகாரங்களைத் தமது சுயலாபத்திற்காகப்

பயன்படுத்தினார். அடுத்துப் பதவியேற்ற 16ஆம் லூயி தனது மனைவி மேரி அண்டாய்னெட்டின் கைப்பாவையாகச் செயல்பட்டார். ஆடம்பர வாழ்க்கையில் நிதியையும் நேரத்தையும் வீணாக்கினார். 14ஆம் லூயி காலத்தில் நடைபெற்ற போர்களினால் ஏற்கனவே ஆட்டம் காணத் தொடங்கிய நாட்டின் நிதிநிலை 15, 16ஆம் லூயி மன்னர்களின் காலத்தில் சரியத் தொடங்கியது. தேசியக் கடன் 1786ல் 6,00,000,000 டாலராக இருந்தது.

## 2. நிர்வாகச் சீர்கேடுகள்

மைய அரசிடம் அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருந்தன. தல ஆட்சி நிறுவனங்கள் பார்பான் மன்னர்களால் முடக்கப்பட்டன. வெர்செய்ல்சின் அரசர் குழுவே சிறிய மற்றும் பெரிய விஷயங்கள் பற்றி முடிவெடுத்தது. மத்திய அரசின் பணிப்பழு அதிகரித்தது. அதன் திறமையின் தரம் கணிசமாகக் குறைந்தது. நாடு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை கவர்னர்களால் ஆளப்பட்டன. ஆனால் சீரான ஒரே மாதிரியான நிர்வாக அமைப்பு முறையின் கீழ் அவை இயங்கவில்லை. சிலவற்றில் பாராளுமன்றம் அல்லது எஸ்டேட் என்ற அமைப்பு இயங்கியது. ரிச்செல்யூவின் காலத்தில் மாநிலங்கள் இன்டென்டாண்டுகளாகப் பிரிக்கப்பட்டன. அவை நீதித்துறை மாவட்டங்கள், சமயத்துறை மாவட்டங்கள், கல்வி மாவட்டங்கள் எனவும் பிரிக்கப்பட்டிருந்தன. நகரங்களில் நகரக் கவுன்சில்கள் காணப்பட்டன. ஆனால் அவற்றின் அமைப்பும் பணிகளும் நகரத்திற்கு நகரம் மாறுபட்டுக் காணப்பட்டது. இத்தகைய குழப்பமான நிர்வாக அமைப்பு முறை சீரான நிர்வாகத்திற்குச் சவாலாக அமைந்தது.

## 3. சட்டம் மற்றும் நீதித்துறைச் சீர்கேடுகள்

நாட்டில் ஒரே மாதிரியான சட்டமுறை புழக்கத்தில் இல்லை. சட்டங்கள் தொகுக்கப்படவில்லை. நாடு முழுமையுமாக சுமார் 400 வகையான சட்ட முறைகள் நடைமுறையில் இருந்தன. சட்டங்கள் இலத்தீன் மொழியில் காணப்பட்டதால் பாமர மக்கள் அவற்றைப் புரிந்து கொள்ள இயலாது போயிற்று. தண்டனை பொதுவாகக் கடுமையானதாயிருந்தது. செல்வந்தர்களும், உயர் குடியினரும் சட்டங்களைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு ஏழை எளியோரைத் துன்புறுத்தும் அவலநிலை காணப்பட்டது. அரசு நீதிமன்றங்கள், இராணுவ நீதிமன்றங்கள், திருச்சபை நீதிமன்றங்கள், நிதித்துறை நீதிமன்றங்கள் எனப் பலவகையான நீதிமன்றங்கள் பிரான்சில் செயல்பட்டன. இவை மக்களை மேலும் குழப்புவதாயிருந்தது. நீதியின் ஊற்றாய்த் திகழ வேண்டிய நீதிபதிகள் ஊழலின் ஊற்றாய்த் திகழ்ந்தனர்.

## 4. மன்னர்களின் திறமையின்மை

14ஆம் லூயி திறமையுடையவராய இருந்த போதிலும் பிரான்சின் பொருளாதார நிலையை ஆட்டம் காணச் செய்தார். 1667லிருந்து 1713 வரையிலான காலகட்டத்தில் நான்கு போர்களில் ஈடுபட்டதால் அரசின் பணம் விரயமானது. 15ஆம் லூயி நிலமையைச் சீர்படுத்தத் தவறினார். 1733லிருந்து 1763 வரை மூன்று பெரும் போர்களில் ஈடுபட்டார். லொரைன், கார்சிகா ஆகிய பகுதிகளை மட்டுமே இப்போர்களின் முடிவில் பிரான்ஸ் பெற்றது. கடல் வலிமையைப் பொறுத்த அளவில் இரண்டாம் தர நாடாகியது. அமெரிக்காவிலும் இந்தியாவிலும் தனது குடியேற்றங்களை முழுமையுமாக இழந்தது. மேலும் 15ஆம் லூயி காலத்தில் பாம்படோர் அம்மையார், டூ பாரி அம்மையார் (Du Barry) ஆகியோரின் அரசியல் தலையீடுகள் சிக்கல்களை அதிகரித்தன. 'பெட்டிகோட் அரசு' எனப்பட்ட அவ்வரசு திறமையற்றதாயிருந்தது. 15ஆம் லூயி வெர்செய்ல்ஸ் அரண்மனையில் ஆடம்பரக் களியாட்டங்களில் தமது நேரத்தைச் செலவிட்டார். மக்களிடையே அரசரின் செல்வாக்கு வெகுவாகச் சரிந்தது. அவரைத் தொடர்ந்து பதவியேற்ற அவரது பேரனான 16ஆம் லூயி அலங்கார பொம்மையாகச் செயல்பட்டார். அவரது மனைவி மேரி அன்டாய்னெட் நாட்டின் நிலமை மேலும் சீர்கெடக் காரணமானார். ஆஸ்திரிய இளவரசியான அவர் தன்னை ஒருபோதும் பிரெஞ்சு மக்களின் அங்கமாக மாற்றிக் கொள்ளவில்லை. எனவே பிரெஞ்சு மக்களும் அவரை அன்னியராகவே கருதினர். ஏழாண்டுப் போரில் பிரான்ஸ் தோற்றமைக்கான முக்கிய காரணமானவர் அவரே எனவும் எண்ணினர். முற்போக்குக் கருத்துக்களுக்கு முட்டுக்கட்டையாய் அவரது அரசியல் தலையீடுகள் அமைந்தன. மக்களின் உணர்வுகளோ, நாட்டின் பொருளாதார நிலையோ அவரால் அறியப்படவில்லை. அரசியல் அதிகாரத்தை தன்வசப்படுத்தியிருந்த அவரால் மக்கள் நலன் புறக்கணிக்கப்பட்டது. இத்தகைய சூழல் புரட்சிக்கு வழி வழிவகுத்தது.

## 5. முறையற்ற வரிவிதிப்பு முறை

பிரெஞ்சு அரசின் வரிவிதிப்பு முறை ஒழுங்கற்றதாய்க் காணப்பட்டது. வரி வசூலிக்கும் உரிமை ஏலத்தின் அடிப்படையில் தனி நபர்களுக்கு வழங்கப்பட்டது. அரசாங்கத்திற்குக் குறிப்பிட்ட தொகையை செலுத்திவிட்டு வரி வசூலிக்கும் உரிமை பெற்றவர்கள் மக்களின் வரிப் பணத்தைத் தாங்களே அனுபவித்தனர். பிரான்சில் வரி செலுத்தக் கடமைப்பட்டவர்கள் ஏழை விவசாயிகளே. செல்வந்தர்களான பிரபுக்களும், மத குருமார்களும் வரி விலக்குப் பெற்ற பிரிவினராயிருந்தனர். ஏழை விவசாயிகள் மீது கடுமையான வரி விதிக்கப்பட்டது. ஆனால் அரசுக் கருவூலத்திற்குக் குறைந்த அளவு பணமே வருவாயாகக் கிடைத்தது.

### 6. சந்தை ஒழுங்குமுறைச் சீர்கேடுகள்

சந்தைகளில் புழக்கத்திலிருந்த எடை மற்றும் அளவுகளில் வேறுபாடுகள் நிலவின. செலவாணி வரி உள்நாட்டுச் சுங்கம் ஆகிய அனைத்தும் இடத்திற்கு இடம் வேறுபட்டதாயிருந்தது. வணிக வளர்ச்சி பாதிக்கப்பட்டது. மக்களிடையே குழப்பம் நிலவியது.

## II. சமூக, சமயக் காரணங்கள்

### 1. சமுதாயப் பிரிவுகள்

பிரெஞ்சு சமுதாயத்தில் மூன்று முக்கிய பிரிவினர் காணப்பட்டனர். மத குருமார்கள், பிரபுக்கள், குடியானவர்கள் எனப்பட்ட அப்பிரிவினரிடையே ஏற்றத் தாழ்வுகள் காணப்பட்டன. நாட்டு மக்கள் தொகையில் 10 சதவிகித இடத்தைப் பெற்றிருந்த மத குருமார்கள், பிரபுக்கள் என்ற இரண்டு பிரிவினரிடம் சுமார் 40 சதவிகித சொத்துக்கள் இருந்தன. அவ்விரு பிரிவினரும் வரி விலக்குப் பெற்றிருந்தனர். அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக பல்வேறு சலுகைகளைப் பெற்றிருந்தனர். குடியானவர்களின் நிலைமை பரிதாபகரமானதாயிருந்தது. அந்தி முதல் சந்தி வரை பண்ணையில் கடுமையாக உழைத்த அவன் பண்ணை முதலாளியால் சுரண்டப்பட்டான். வரிக் கொடுமையால் வாடினான். பண்ணை முதலாளிகளின் கெடுபிடி நடவடிக்கைகளால் அடிமை போல வாழ்ந்தான். தானியங்களை நிலப் பிரபுவின் அரவை ஆலயத்தில் தான் அரைக்க வேண்டும். பண்ணையில் கூலியின்றி பணிபுரிய வேண்டும். தனது நிலத்தை விற்றால் ஒரு பங்கு பணத்தைக் கொடுக்க வேண்டும். தனது இல்ல விழாக்களின் போதும் சன்மானம் தரவேண்டும் போன்ற கட்டுப்பாடுகள் குடியானவன் மீது சுமத்தப்பட்டன. உடலால் உழைத்து உள்ளத்தால் ஓய்ந்து உண்ண உணவின்றி அப்பிரிவினர் தவித்தனர்.

### 2. குடியானவர் மீதான வரிகள்

திருச்சபைக்கும் அரசிற்கும் பல்வேறு வரிகளைக் குடியானவர் செலுத்த வேண்டியதிருந்தது. அவையாவன

**டைத் (Tithe)**

குடியானவன் தனது நிலத்திலிருந்து பெற்ற விளைச்சலில் 1/12 பங்கு அல்லது 1/13 பங்கினை ஒவ்வொரு ஆண்டும் திருச்சபைக்கு வழங்கினான்.

**நிலவரி (Taille)**

குடியானவர்களின் வீடுகள் நிலங்கள் போன்ற அசையாச் சொத்துக்களின் மீது இவ்வரி விதிக்கப்பட்டது.

### 6. சந்தை ஒழுங்குமுறைச் சீர்கேடுகள்

சந்தைகளில் புழக்கத்திலிருந்த எடை மற்றும் அளவுகளில் வேறுபாடுகள் நிலவின. செலவாணி வரி உள்நாட்டுச் சுங்கம் ஆகிய அனைத்தும் இடத்திற்கு இடம் வேறுபட்டதாயிருந்தது. வணிக வளர்ச்சி பாதிக்கப்பட்டது. மக்களிடையே குழப்பம் நிலவியது.

## II. சமூக, சமயக் காரணங்கள்

### 1. சமுதாயப் பிரிவுகள்

பிரெஞ்சு சமுதாயத்தில் மூன்று முக்கிய பிரிவினர் காணப்பட்டனர். மத குருமார்கள், பிரபுக்கள், குடியானவர்கள் எனப்பட்ட அப்பிரிவினரிடையே ஏற்றத் தாழ்வுகள் காணப்பட்டன. நாட்டு மக்கள் தொகையில் 10 சதவிகித இடத்தைப் பெற்றிருந்த மத குருமார்கள், பிரபுக்கள் என்ற இரண்டு பிரிவினரிடம் சுமார் 40 சதவிகித சொத்துக்கள் இருந்தன. அவ்விரு பிரிவினரும் வரி விலக்குப் பெற்றிருந்தனர். அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக பல்வேறு சலுகைகளைப் பெற்றிருந்தனர். குடியானவர்களின் நிலைமை பரிதாபகரமானதாயிருந்தது. அந்தி முதல் சந்தி வரை பண்ணையில் கடுமையாக உழைத்த அவன் பண்ணை முதலாளியால் சுரண்டப்பட்டான். வரிக் கொடுமையால் வாடினான். பண்ணை முதலாளிகளின் கெடுபிடி நடவடிக்கைகளால் அடிமை போல வாழ்ந்தான். தானியங்களை நிலப் பிரபுவின் அரவை ஆலயத்தில் தான் அரைக்க வேண்டும். பண்ணையில் கூலியின்றி பணிபுரிய வேண்டும். தனது நிலத்தை விற்றால் ஒரு பங்கு பணத்தைக் கொடுக்க வேண்டும். தனது இல்ல விழாக்களின் போதும் சன்மானம் தரவேண்டும் போன்ற கட்டுப்பாடுகள் குடியானவன் மீது சுமத்தப்பட்டன. உடலால் உழைத்து உள்ளத்தால் ஓய்ந்து உண்ண உணவின்றி அப்பிரிவினர் தவித்தனர்.

### 2. குடியானவர் மீதான வரிகள்

திருச்சபைக்கும் அரசிற்கும் பல்வேறு வரிகளைக் குடியானவர் செலுத்த வேண்டியதிருந்தது. அவையாவன:

**டைத் (Tithe)**

i) குடியானவன் தனது நிலத்திலிருந்து பெற்ற விளைச்சலில் 1/12 பங்கு அல்லது 1/13 பங்கினை ஒவ்வொரு ஆண்டும் திருச்சபைக்கு வழங்கினான்.

**நிலவரி (Taille)**

குடியானவர்களின் வீடுகள், நிலங்கள் போன்ற அசையாச் சொத்துக்களின் மீது இவ்வரி விதிக்கப்பட்டது.

## வருமான வரி (Vingtieme)

குடியானவர்கள் தங்களது வருமானத்தில் 5 சதவிகிதத்தை வருமான வரியாகச் செலுத்தினர்.

## உப்பு வரி (Gabelle)

உப்பு தயாரிக்கும் முழு உரிமையும் அரசு தக்க வைத்துக் கொண்டது. ஏழு வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் ஏழு பவுண்டு என்ற கணக்கில் குடியானவர்கள் உப்பினை கட்டாயமாக வாங்க வேண்டும். மக்கள் நல அரசாக பார்பான் அரசு இல்லாதிருந்தது. எனவே உப்பின் விலை மிக அதிகமானதாக அரசால் நிர்ணயம் செய்யப்பட்டது. அடிப்படைத் தேவையான உப்பின் மீதான கடுமையான வரியிலிருந்து குடியானவர்கள் தப்பிக்க இயலாது தவித்தனர்.

## சாலை வரி (Corvee)

பொதுப் பணித் துறைப் பணிகளான புதிய சாலைகள் போடுவதும் செப்பனிடுவதும் குடியானவர்களின் இலவசக் கட்டாயச் சேவையாக அரசால் விதிக்கப்பட்டிருந்தது. தங்களது உழைப்பினை அதிக நாட்கள் இக்கடமையைச் செய்வதில் குடியானவன் செலவிட்டான்.

## தலைக்கட்டு வரி (Pol Tax or Head Tax)

இதுவும் ஏழ்மையில் சிக்கி வரிச் சுமையால் அல்லல்பட்டு வாழ்ந்த குடியானவர்கள் மீது சுமத்தப்பட்ட வரியாகும்.

இவை தவிர ஏற்றுமதி வரி, சுங்க வரி, இறக்குமதி வரி, உரிமம் வரி போன்ற பல்வேறு வரிகளும் குடியானவர்களால் செலுத்தப்பட வேண்டியதிருந்தது. இவற்றுள் நிலவரி, தலைக்கட்டு வரி, வருமான வரி தவிர பிற வரிகள் மறைமுக வரிகளாகும். தங்களது மொத்த வருவாயில் சுமார் 60 சதவிகிதத்தை குடியானவர்கள் வரிகளாகச் செலுத்த வேண்டியதிருந்தது. வரி வசூலிக்கும் உரிமத்தினை ஏலம் வாயிலாக அரசிடமிருந்து பெற்றிருந்த 'வரி வேளாண்மைதாரர்கள்' (Farmers of the Taxes) பின்பற்றிய வரி வசூலிப்பு முறை குடியானவர்களை மேலும் துன்புறுத்துவதாய் அமைந்திருந்தது.

## 3. குடியானவர்களின் நிலை

சமுதாயத்தின் அடிமட்ட நிலையிலிருந்த குடியானவர்கள் பசி மற்றும் பட்டினியால் வாடினர். உழைக்கும் வர்க்கத்தவரான அவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வருடத்தின் மூன்றில் ஒரு பகுதி நாட்கள் தரமான உணவின்றி வாடியதாக கார்லைல் தமது 'பிரெஞ்சுப் புரட்சி' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

கிழங்குகள் கோரைப் புற்கள் போன்றவையே அவர்களது உணவாக அமைந்தன. அவர்களது துயர் துடைக்கும் பணியினை அரசு மேற்கொள்ளவில்லை.

### 4. மத்தியதர மக்களின் நிலை

கற்றறிந்தோர், வணிகர்கள், வங்கியாளர்கள், வரி வசூலிப்பவர்கள் ஆகியோரும் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களாய் வாழ்ந்தனர். உரிமை மறுக்கப்பட்ட நிலையில் அவர்களது திறமையும் அனுபவமும் சேவையும் நாட்டு வளர்ச்சிக்குக் கிட்டாத ஒன்றாயிருந்தது. சிறகொடிந்த பறவைகள் திக்குத் தெரியாத காட்டில் வாழ்ந்தது போன்று அப்பிரிவினர் வாழ்ந்தனர்.

### 5. திருச்சபை

ஆன்மீகப் பணியினை விடத் திருச்சபை ஊழியர்கள் அரசியல் பணியினைக் கூடுதலாக மேற்கொண்டனர். மத குருமார்களின் அடிப்படைத் தகுதிகளான எளிமை, கருணை, சேவை மனப்பான்மை ஆகியவை அவர்களிடம் காணப்படவில்லை. அவற்றின் எதிர்மறைப் பண்புகளே மிகுதியாகக் காணப்பட்டது. திருச்சபையின் உயர் பதவிகளை பிரபுக்களே பெற்றனர். ஆடம்பரமான கேளிக்கை மையங்களாகத் திருச்சபை அமைப்புக்கள் திகழ்ந்தன. பார்போன் மன்னர்களின் வல்லாட்சிக்குத் திருச்சபை ஆதரவாக நின்றது. அரசுக்குள் ஒரு அரசு போன்று திருச்சபை செயல்பட்டது.

### 6. பிரபுக்கள்

மொத்த மக்கள் தொகையில் 1 சதவிகிதத்திற்கும் குறைவானவர் களாயிருந்த பிரபுக்கள் நாட்டின் செல்வத்தில் 20 சதவிகிதத்தை அனுபவித்தனர். கோட்டை கொத்தளங்கள் கட்டிக் கொண்டு பண்ணை வீடுகளில் சிற்றரசர்கள் போன்று வாழ்ந்து வந்தனர். தமது பண்ணையாட்களின் உழைப்பை உறிஞ்சி வாழ்ந்த ஒட்டுண்ணிகளான இவர்கள் வரி விதிப்பு, கட்டாய இராணுவப் பயிற்சி மற்றும் இலவசப் பொதுப் பணிகளிலிருந்தும் விலக்குப் பெற்று நாட்டிற்குச் சுமையாக வாழ்ந்தனர்.

## III.பொருளாதாரக் காரணங்கள்

14ஆம் லூயியின் காலத்தில் தொடங்கிய நிதிநிலைச் சரிவு 16ஆம் லூயியின் காலத்தில் உச்ச நிலையை எட்டியது. தேசியக் கடன் மிகுந்து காணப்பட்டது. செலவைக் குறைக்கவோ வருவாயை அதிகரிக்கவோ வழியின்றி அரசு இயந்திரம் திணறியது. நிதி அமைச்சர்கள் பலர் நிலைமையைச் சீர்செய்ய முயற்சித்தனர்

## டர்கோ (Turgot)

16ஆம் லூயி மன்னரால் 1774ல் நிதி அமைச்சராய் நியமனம் பெற்ற டர்கோ சிந்தனையாளர் வால்டேரின் சிறந்த நண்பராவார். கலைக் களஞ்சியத்தைத் தயாரித்தவர் என்ற பெருமைக்குரியவர். மெய்யறிவுக் கொள்கையில் நம்பிக்கை கொண்ட மிகச் சிறந்த எழுத்தாளருமாவார். பிரபுக்கள் மத குருமார்கள் ஆகியோரின் சிறப்புரிமைகளை நீக்கவும் அரசு இயந்திரத்தை வலிமை மிக்கதாக்கவும் திட்டங்கள் தீட்டினார். ஆனால் மேரி அன்டாய்னெட்டின் அரசியல் செல்வாக்கு அவற்றைச் செயலிழக்கச் செய்தது. அரசரின் நம்பிக்கையை இழந்தார். பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

## ஜாக்குவஸ் நெக்கர் (Jacques Necker) (1778 - 1781)

ஜெனிவா நாட்டைச் சேர்ந்த வங்கியாளரான நெக்கர் அடுத்த நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். புராடஸ்டண்டு மதத்தவரான நெக்கர் மிகச் சிறந்த நிதியாளராவார். அவரது நியமனம் தொடர்பாக அரசியல் சிக்கல்கள் எழுந்தன. எனினும் நான்கு ஆண்டு காலம் நிதி அமைச்சராக இருந்தார். வணிக நோக்குடையவரான இவரது நிதிச் சீர்திருத்த உத்திகளும் வணிக முறையில் அமைந்திருந்தன. தமது நண்பர்களாயிருந்த வங்கியாளர்களிடமிருந்து கடன் பெற்றார். வரி வசூலிப்பு முறையைச் சீரமைத்தார். கணக்குகளைத் தணிக்கை செய்யும் முறையை அறிமுகப்படுத்தினார். அரசின் வரவு செலவு அறிக்கையை முதன் முறையாக அனைவரும் அறியும்படி வெளியிட்டார். இதனால் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. 1781ல் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.

## கலோன் (Calonne)

நிதி அமைச்சராக கலோன் நியமிக்கப்பட்டார். ஏழாண்டுப் போரினால் ஏற்கெனவே கடன் சுமையில் சிக்கித் தவித்த பிரான்ஸ், அமெரிக்க விடுதலைப் போரிலும் ஈடுபட்டு நிதி நெருக்கடியைத் தேடிக் கொண்டது. கலோன் சுமார் 300 மில்லியன் டாலர் தொகையைக் கடனாக வசூலித்தார். ஆனால் அவற்றைத் திருப்பித் தர வழியின்றி 1786 ஆகஸ்ட் மாத வாக்கில் அரசுக் கருவூலம் காலியாயிற்று.

புதிய கடன்கள் பெற வழியின்றி முடிவில் அரசர் 1787ல் நாட்டின் முக்கிய பிரமுகர்கள் 145 பேர்களடங்கிய சபையைக் (Assembly of Notables) கூட்டினார். இதுகாலம் வரை வரிச் சலுகை பெற்று வாழும் பிரிவினரின் ஒத்துழைப்பினைப் பெற வேண்டுமென்பதே அரசர் இச்சபையைக் கூட்டியமைக்கான முக்கிய நோக்கமாகும். ஆனால் சுயநலமிகளான அவர்கள் நாட்டு நலனை முன்னிருத்தித் தங்களது சலுகைகள் எதனையும் விட்டுக் கொடுக்க ஒப்பவில்லை. கலோனுக்கு எதிர்ப்பு வலுவடைந்தது. அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

## கார்டினல் பிரெய்னி (Cardinal Brienne)

கலோனை அடுத்து நிதி அமைச்சரான பிரெய்னியும் முந்தய நிதி அமைச்சர்கள் போன்றே மத குருமார்கள் மற்றும் பிரபுக்களின் வரி விலக்கு சலுகை விலக்கப்பட வேண்டும் என்று திட்டமிட்டார். எனவே அவரும் பதவியை விட்டு விலக்கப்பட்டார். நெக்கர் மீண்டும் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

மன்னர் புதிய வரிகளை விதித்து ஆணை பிறப்பித்தார். மன்னரின் ஆணையைப் பதிவு செய்ய பாரிஸ் மன்றம் மறுத்தது. எனவே நெக்கரின் ஆலோசனைப்படி மக்கள் மன்றத்தைக் கூட்ட மன்னர் முன்வந்தார். 1614லிருந்து 175 ஆண்டு காலமாக கூட்டப்படாதிருந்த மக்கள் மன்றம் 1789ல் கூட்டப்பட்டது. இந்நிகழ்ச்சி புரட்சியின் துவக்கமாக அமைந்தது. கூண்டிலிருந்து விடுபட்ட சிறுத்தையின் போக்கு போன்று மக்களின் போக்கு அமைந்தது.

# IV.சிந்தனையாளர்களின் பங்கு

முற்போக்கான தாராளக் கருத்துக்களை உலகிற்கு வழங்கிய பெருமைக்குரிய பிரெஞ்சுப் புரட்சி ஏற்படுவதற்கு முற்போக்குச் சிந்தனையாளர் கள் மற்றும் எழுத்தாளர்கள் பின்புலமாய் இருந்தனர். தங்களது எழுத்துக்கள் மற்றும் பேச்சுக்களால் கூர்மழுங்கிக் கிடந்த மக்களின் சிந்தையை கூர் பெறச் செய்தனர். நல்லாட்சி அமைப்பது மக்களின் உரிமை என்பதனை உணரச் செய்தனர். மன்னன் மக்களின் காவலனாகச் செயல்பட வேண்டுமே அன்றி உயிர் குடிக்கும் காலனாய் அல்ல என்பதை அறியச் செய்தனர். மான்டெஸ்க்யூ, வால்டேர், ரூசோ ஆகியோர் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

## மான்டெஸ்க்யூ (Montesquie) (1689 - 1755)

அரசியல் தத்துவ வல்லுனரான மான்டெஸ்க்யூ சிறந்த வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார். இத்தாலி, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா, ஹாலந்து, இங்கிலாந்து ஆகிய பல ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அந்தந்த நாடுகளில் இயங்கி வரும் அரசாட்சி முறைகளின் செயல்பாட்டினைக் கூர்ந்து ஆராய்ந்தார். இங்கிலாந்து மக்களே கூடுதலான உரிமைகளுடன் வாழ்வதாகக் கருதினார். அரசியலமைப்பிற்கு உட்பட்ட முடியாட்சி என்ற இங்கிலாந்தின் அரசு அமைப்பு முறை அவரை வெகுவாக ஈர்த்தது. பிரான்சில் மக்கள், உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழக் காரணமான சூழ்நிலைகளை ஆராய்ந்தார். “பாரசீக மடல்கள்” (Persian Letters) என்ற நூலில் திருச்சபை மற்றும் ஆட்சித் துறையின் ஊழல் மிக்க போக்கினைச் சுட்டிக் காட்டினார்.

## சட்டங்களின் கருப்பொருள் (The Sprit of Laws)

மான்டெஸ்க்யூவின் எழுத்துப் படைப்புக்களில் மிகச் சிறந்த படைப்பாகக் கருதப்படுவது 'சட்டங்களின் கருப்பொருள்' என்ற நூலாகும். இருபது ஆண்டு கால உழைப்பின் முடிவில் 1748ல் இந்நூலை அவர் வெளியிட்டார். அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டினை மையக் கருவாகக் கொண்டு இந்நூல் வடிக்கப்பட்டது. அரசாங்கத்தின் முக்கிய அங்கங்களான சட்டத்துறை, ஆட்சித் துறை, நீதித்துறை ஆகியவை தனித் தனியே செயல்பட வேண்டும். ஒருவரிடமோ அல்லது ஒரு குழுவிடமோ ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளின் அதிகாரங்கள் ஒப்படைக்கப்படுமானால், அது வல்லாட்சிக்கு வழிவகுக்கும். அத்தகைய ஆட்சியில் மக்களின் உரிமைகள் மறுக்கப்படும். எனவே மக்கள் இறைமையுடன் வாழவும், வல்லாட்சியற்ற நல்லாட்சி பெறவும் மேற்கூறிய மூன்று துறைகளிடையே அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும். இத்துறைகள் ஒன்றையொன்று கட்டுப்படுத்தவும் தங்கள் அதிகார எல்லைக்குள் இயங்கி அதிகாரச் சமநிலையை நிலைநிறுத்தும் வகையிலும் அரசியலமைப்பு முறை வகை செய்ய வேண்டுமென இந்நூல் வலியுறுத்தியது. பலவகையான அரசியலமைப்பு முறைகளின் நன்மை தீமைகளை இந்நூல் சுட்டிக் காட்டியது. தங்களுக்கு உகந்த அரசாட்சி முறை எது என்பதை பிரெஞ்சு மக்கள் அறிந்து கொள்ளவும் இந்நூல் வழிவகுத்தது. புரட்சிக்கான வித்தினை இது தாங்கி நின்றது. மக்களிடையே பெரும் ஆதரவினைப் பெற்றது. பதினெட்டு மாதங்களில் இந்நூலின் 22 பதிப்புக்கள் வெளியாயின.

## வால்டேர் (Voltaire) (1694 - 1778)

பிராங்காய் அரோயத் (Francois Arouet) என்ற இயற்பெயர் கொண்டவர். பின்னாளில் பிராங்காய் டி வால்டேர் என்று தம்மை அழைத்துக் கொண்டார். மிகச் சிறந்த எழுத்தாளர். கவிதை, கட்டுரை, நாடகம் போன்ற பல வகையில் இவரது படைப்புக்கள் அமைந்தன. இவரைச் சட்ட வல்லுநராக்க வேண்டுமென்பது இவரது தந்தையின் கனவாக இருந்தது. ஆனால் சிறுவயதிலேயே இவர் கவிதை எழுதுவதில் நாட்டமுடையவராக இருந்தார். உயர் அதிகாரிகள், பிரபுக்கள், மதகுருமார்கள் ஆகியோரின் ஊழல் நிறைந்த வாழ்க்கையைத் தமது எழுத்துக்களின் வாயிலாகச் சாடினார். எனவே அடிக்கடி நாடு கடத்தப்பட்டார். நாடு கடத்தப்பட்ட காலத்தில் இங்கிலாந்தில் தத்துவ ஞானிகள் மற்றும் அறிவியல் அறிஞர்களின் தொடர்பினைப் பெற்றார்.

பகுத்தறிவுச் செய்திகளைத் தாங்கி மூட நம்பிக்கைகளுக்கு எதிரான வாதத்துடன் அமைந்தன இவரது படைப்புக்கள். வஞ்சப் புகழ்ச்சி அணியில் அமைந்த அவை சமுதாய மற்றும் அரசியல் சீர்கேடுகளை எள்ளி நகையாடின. ஒளி பொருந்திய வல்லாட்சியை இவர் ஆதரித்தார். நூறு எலிகள் கூடி

ஆள்வதை விட சிங்கம் ஒன்று ஆள்வதே சாலச் சிறந்தது என்றார். பிரஷ்ய மன்னர் பிரெடரிக்கின் நண்பராக நீண்ட காலம் அவரது அரசவையில் இவரது காலம் கழிந்தது. ரஷ்ய அரசியார் மகாகாதரினும் வால்டேரின் ஆதரவாளராயினர். குறைபாடுகளுடன் அமைந்த எந்த ஒரு நிறுவனமும் வால்டேரின் தாக்குதலிலிருந்து தப்பவில்லை.

"ஐம்பதின்மர் செய்திகள்" (Sermon of the Fifty) என்ற நூல் திருச்சபையின் ஊழல் போக்கினைச் சுட்டிக் காட்டியது. ஒடிப் (Oedipe) என்ற நூல் பிரான்சின் அரசாட்சியின் குறைகளைச் சுட்டிக் காட்டியது. சமயப் பொறையுடைமையின் அத்தியாவசியத்தினை 'சையர்' (Zaire) என்ற நாடகத்தின் மூலம் அறிவுறுத்தினார். இங்கிலாந்தின் அரசியல் மற்றும் சமயத் துறை நிறுவனங்களின் சீர்கேடுகளை 'இருபத்து நான்கு மடல்கள்' என்ற தமது நூலில் சுட்டிக் காட்டினார். இவரது முற்போக்குச் சிந்தனைகளின் தொகுப்பாக கேண்டிட் (Candide), ஜபாடா (Zapata) ஆகிய இவரது படைப்புக்கள் அமைந்தன. இயற்கையை வணங்குதலை ஊக்குவித்தார். கத்தோலிக்க புராட்டஸ்டாண்டு மதப்பிரிவுகளின் மீது அவநம்பிக்கை கொண்டவராயிருந்தார். குவேக்கர்கள் பால் வால்டேர் கருணை மிகக் கொண்டவராயிருந்தார். இவரது படைப்புக்கள் புரட்சிக் கருத்துக்களை மக்களிடையே ஆழமாக வேரூன்றச் செய்தன.

## ஜீன் ஜேக்குவஸ் ரூசோ (Jean Jacques Rousseau) (1712 - 1778)

ஜெனிவாவில் பிறந்து பிரான்சில் வாழ்ந்த மிகப் பெரிய சிந்தனையாளர் ரூசோ ஆவார். இவர் தனது தனிப்பட்ட வாழ்க்கையில் சீரான பண்புகள் கொண்டவர் அல்ல. பணியாளராய், ஆசிரியராய், செயலராய், இசைப் பதிவாளராய் பல்வேறு பணிகள் புரிந்தார். எனினும் எப்பணியிலும் வெற்றி பெறவில்லை. ஜெனிவா, டூரின், பாரிஸ், வியன்னா, இலண்டன் போன்ற பல நகரங்களில் அலைந்து திரிந்தார். தனது குழந்தைகளைக் கூட அனாதை இல்லத்தில் சேர்த்தார். தனது வாழ்வைச் செம்மைப்படுத்தும் வழி அறியாதவராய் இருந்தாரெனினும் பிறரது வாழ்வில் தமது முற்போக்குக் கருத்துக்கள் மூலம் வியத்தகு செல்வாக்கினைச் செலுத்தினார்.

இயற்கையை ரசிக்கும் தன்மை கொண்டிருந்தார். இவரது முதல் கட்டுரைப் படைப்பாவது "கலை மற்றும் அறிவியல் வெளிப்பாடு" (Discourse on Arts and Science) (1749). ஆதிமனிதனின் இயற்கையோடு இணைந்த வாழ்வே சிறந்ததென சுட்டிக் காட்டினார். அனைவரும் சுதந்திரமாகவும் சம உரிமைகளுடனும் வாழ வேண்டும் என அறிவுறுத்தினார். 1753ல் தமது இரண்டாவது கட்டுரையான "மனிதர்களிடையே சமத்துவமின்மையின் தொடக்கம்" (Origin of inequality among men) என்பதை வெளியிட்டார். வலிமையுள்ளவன் எளியோனை அடக்கி சமத்துவத்தை முறித்து ஏற்றத் தாழ்வு ஏற்படக் காரணமானதை இக்கட்டுரையில் வன்மையாகக் கண்டித்தார்.

1761ல் அவரது அரசியல் சிந்தனைகள் அடங்கிய நூலாக "சமூக ஒப்பந்தம்" வெளியாகியது. லாக்கேயின் கருத்துக்களின் அடிப்படையில் ரூசோவின் கருத்தும் அமைந்திருந்தது. மக்களின் இறைமைக் கோட்பாடு இதன் அடிப்படைக் கருத்தாக அமைந்தது. அரசு என்ற நிறுவனம் ஆள்பவர் மற்றும் ஆளப்படுபவர் ஆகியோர் வாழும் சமுதாயத்தில் அவ்விருசாராருக்கிடையே ஏற்படும் ஒப்பந்தத்தின் படி தோற்றுவிக்கப்பட்ட ஒன்று. ஆள்பவரிடம் ஆளப்படுபவர்கள் தங்கள் இறைமையின்படி அதிகாரங்களை வழங்குகின்றனர். ஆள்பவர் நல்லாட்சி வழங்க வேண்டுமென்பது அவ்வதிகாரங்களைப் பெறுவதால் ஆள்பவரின் கடமையாகிறது. ஆள்பவர் தம் கடமையிலிருந்து பிறழ்ந்து நல்லாட்சியை வழங்காது போகும் பட்சத்தில் அதனை ஒப்பந்த மீறல் எனக் கொள்ளலாம். அத்தகு நிலையில் ஆளப்படுபவர்கள் ஆள்பவரை நீக்கி விட்டு நல்லாட்சி வழங்கும் நல்லோரிடம் அரசினை ஒப்படைக்கலாம் என்பதே சமூக ஒப்பந்தம் வழங்கிய கருத்துக்களாகும். தெய்வீக உரிமைக் கோட்பாட்டின் படி பார்பான் மன்னர்களை எதிர்ப்பதென்பது இறைவனை எதிப்பது போன்றது என்ற கருத்தை ரூசோவின் கோட்பாடு தகர்த்தெறிய வைத்து புரட்சியை நியாயமானதாகக் காட்டியது.

ரூசோவின் கருத்துக்கள் மக்களிடையே செல்வாக்கு பெற்றது. இவரது நாவலான எமிலி 'Emile' 1762ல் வெளியிடப்பட்டது. இது குறிப்பிட்ட சிறார்களின் கல்வித் தரம் பற்றிய இவரது கருத்து மக்களிடையே வரவேற்கப்பட்டது. கிறித்துவர்களாலும் வால்டேர் போன்ற பகுத்தறிவாளர்களாலும் இவர் கடுமையாக விமர்சிக்கப்பட்ட போதிலும் 'இயற்கைக்குத் திரும்புங்கள்' (Back to Nature) என்ற இவரது அழைப்பு பலரால் கைக்கொள்ளப்பட்டது. செல்வந்தர்கள் பலர் இவரது கருத்துக்களால் ஈர்க்கப்பட்டனர். டேவிட் ஹியூம், தாமஸ் பெயின், ஹெர்டன், கான்ட் ஆகியோர் ரூசோவின் ஆதரவாளர்களாவர். பிரெஞ்சு மக்களிடையே புரட்சிக் கருத்துக்கள் பரவ இவரது படைப்புக்கள் காரணமாயின. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், மக்கள் இறைமை, மக்களாட்சி, குடியாட்சி போன்ற புரட்சிக் கருத்துக்கள் அனைத்தும் ரூசோவின் சிந்தனை வெளிப்பாடுகளேயாகும். "பிறக்கும் போது மனிதன் சுதந்திரத்துடன் பிறக்கிறான். ஆனால் பின்னர் அடிமைத் தளையில் சிக்கித் தவிக்கிறான்" என்ற இவரது கருத்து மக்களிடையே புரட்சிக்கான எழுச்சியைத் தோற்றுவித்தது.

## திதரோ (Diderot)

கலைக் களஞ்சியத்தின் காரணகர்த்தா என்ற பெருமைக்குரியவர் திதரோ ஆவார். பல எழுத்தாளர்களின் கருத்துக்களிலிருந்து 17 பாகங்களுடனான கலைக் களஞ்சியத்தை உருவாக்கித் தந்தார். அரசியலமைப்பிற்குட்பட்ட முடியாட்சியே சிறந்த வகை அரசு என்ற கருத்தினை வலியுறுத்தினார். தமது எண்ணங்களை எளிய நடையில் எழுதி மக்களின் முற்போக்குச் சிந்தனையைத் தூண்டுவதில் பெரும் வெற்றி கண்டார்.

## ஹெல்விஷியஸ் (Helvetius)

இவரது மிகச் சிறந்த படைப்பாவது 1758ல் வெளியான ஆன் த சோல் (On the Soul) என்பதாகும். மனிதனுக்கும் விலங்குகளுக்கும் வேறுபாடு கிடையாது என்றும் நல்லவற்றையோ தீமையானதையோ தெரிந்தெடுக்கும் உரிமை யாவருக்கும் இல்லை. நன்னடத்தையின் மூலம் நன்மை பெற இயலும் என்ற கருத்துக்களை இவர் வெளியிட்டார்.

## ஹால்பக் (Holbach)

கலைக் களஞ்சியத் தயாரிப்பிற்குத் தமது பங்கினை அளித்த ஹால்பக் கல்விக்கும் கடின உழைப்பிற்கும் மக்கள் கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றார். தமது படைப்புக்களான கிறிஸ்துவ மத வெளிப்பாடு (Christianity unveiled) (1761) மற்றும் இயற்கை முறை (System of Nature) (1770) ஆகியவற்றில் கிறிஸ்துவ மதத்தின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினார். மக்கள் தங்களது நிலையை சீர்படுத்திக் கொள்ள புரட்சி ஒன்றே வழி என்பதை உணரச் செய்தார்.

## கேனே (Quesnay) 1694 - 1744

15ஆம் லூயியின் அரசவை மருத்துவராயிருந்த கேனே பொருளாதார வல்லுனராகவும் திகழ்ந்தார். நாட்டின் செல்வமாவது வேளாண்மை மற்றும் சுரங்கங்கள் வாயிலாக மட்டுமே பெறப்படுகிறது. உற்பத்தியாளர்களும் வணிகர்களும் செல்வத்தினை இடம் மாற்றம் செய்யும் பணியினைச் செய்பவர்களேயன்றி செல்வத்தினை உருவாக்குபவர்கள் அல்லர் என்றும் தடையில்லா வாணிபமே உகந்ததென்றும் வலியுறுத்தினார். சிறப்புரிமைகள் தகர்க்கப்பட வேண்டுமென்ற கருத்தினை வலியுறுத்தினார். ஹார்வேயின் கண்டுபிடிப்பான மனித உடலில் இரத்த ஓட்டம் போன்று நாட்டின் பொருளாதார செயல்பாட்டிற்கு செல்வச் சுழற்சி தேவை என்று அறிவுறுத்தினார் இவரது கருத்துக்கள் புரட்சிக்குத் தூண்டுகோலாய் அமைந்தன

## டி' ஆலம்பர்ட் (D'Alambert)

கலைக் களஞ்சியத் தயாரிப்பில் குறிப்பிடத்தக்க பங்காற்றிய இவர் வல்லாட்சியில் மக்கள் படும் இன்னல்களைத் தெளிவுபடுத்தினார். புரட்சியின் மூலமே வல்லாட்சிக்கு முடிவு கட்ட இயலும் என்ற இவரது கருத்து மக்களிடையே செல்வாக்கினைப் பெற்றது.

சிந்தனையாளர்களின் முற்போக்குக் கருத்துக்களும் புரட்சி நியாயமான ஆயுதமே என்ற வாதமும் பிரெஞ்சுப் புரட்சியை விரைவு படுத்தின என்பதை மறுப்பதற்கில்லை. மாலட்டின் (Mallet) 'பிரெஞ்சுப் புரட்சி' என்ற நூலும் இக்கருத்தினை உறுதிப்படுத்தியது

## V. அமெரிக்க விடுதலைப் போர்

1776ல் அமெரிக்க குடியேற்ற நாடுகள் தொடங்கிய விடுதலைப் போர் பிரெஞ்சுப் புரட்சிக்குக் காரணமாக அமைந்தது. ஏழாண்டுப் போரில் பிரிட்டனிடம் தோற்றமைக்குப் பழி தீர்க்கும் வண்ணம் பிரிட்டனுக்கு எதிரான அமெரிக்கக் குடியேற்றங்களின் விடுதலைப் போரில் அமெரிக்கர்களுக்கு பிரான்ஸ் நிதி மற்றும் இராணுவ உதவியை வழங்கியது. வணிக வரிகளுக்கு எதிராக அமெரிக்கர் மேற்கொண்ட விடுதலைப் போர், கடுமையான வரிச் சுமை, ஏழ்மை நிலை, வல்லாட்சி ஆகியவற்றால் இன்னல்களின் எல்லைக்கே சென்று விட்ட பிரெஞ்சு மக்களின் புரட்சி வேட்கையைத் தூண்டியது.

## VI. உடனடிக் காரணம்

கடுமையான நிதி நெருக்கடியில் 16ஆம் லூயியின் அரசு சிக்கித் தவித்தது. நாட்டு நலனை முன்னிறுத்தித் தங்கள் சலுகைகள் எதனையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லாத செல்வந்தர் கூட்டம் ஒரு புறம். உண்ண உணவின்றியும் அரசின் கடுமையான வரிச் சுமையைச் சுமந்தும் கடனாளிகளாய் நின்ற குடியானவர் கூட்டம் ஒரு புறம். சிந்தனையாளர்களின் தாராளக் கொள்கையால் புரட்சி நியாயமான வகையிலான போராட்டமே என்ற தீர்மானத்திற்கு வந்த மக்கள் ஒரு புறம். டர்கோ தொடங்கி பிரைன் வரை பல நிதி அமைச்சர்களின் முயற்சிகளும் பலனளிக்காது போகவே இரண்டாம் முறையாக நெக்கரை 1788ல் நிதி அமைச்சராக்கித் தனது நிதிச் சிக்கலுக்குத் தீர்வு காண விழைந்த மன்னர் ஒரு புறம். தனது வரி விதிப்பு ஆணைகளை பாரிஸ் பாராளுமன்றம் பதிவு செய்ய மறுக்கவே வேறு வழியின்றி நெக்கரின் ஆலோசனைப்படி 1788 மே மாதம் எஸ்டேட்ஸ் ஜெனரல் என்ற தேசிய மன்றத்தினை 16ஆம் லூயி கூட்டினார். அடக்கி ஆளப்பட்ட மக்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்த தேசிய மன்றம் களமாக அமைந்தது.

### தேசிய மன்றம்

1302ல் பிலிப் மன்னரால் முதன் முறையாகக் கூட்டப்பட்ட தேசிய மன்றம் 1614க்குப் பின்னர் 175 ஆண்டுக் காலமாகக் கூட்டப்படாதிருந்தது. என்ற போதிலும் பிரெஞ்சு அரசின் சட்டபூர்வமான அமைப்பாக அனைவரின் அங்கீகாரத்தையும் பெற்றிருந்தது. தேசிய மன்றத்தில் சமுதாயத்தின் மூன்று பிரிவினரும் அங்கம் வகித்தனர். அது மூன்று சபையாக இயங்கியது. இவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை சம அளவினதாக இருந்தது.

பண்டைய வழக்கின்படியே 1788-89ல் தேசிய மன்றத்திற்கான தேர்தல் நடைபெற்றது. மூன்று பிரிவைச் சார்ந்த வாக்காளர்களும் தங்களது குறைகள் மற்றும் கோரிக்கைகள் அடங்கிய அறிக்கைகளைத் தயாரித்தனர்.

அவ்வறிக்கைகள் கேகயர்கள் (Cahiers) எனப்பட்டன. அவை அனைத்தும் பொதுவாக ஒரே வகையிலான கருத்துக்களைச் சுமந்திருந்தன. தேசிய மன்றம் சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு வெளிப்பட்டது. அரசன் மீதான பக்திப் பற்றினை வெளிப்படுத்துவதாகவும் அமைந்தது. மாபெரும் வன்முறை பற்றியோ வன்மையான மாற்றம் பற்றியோ எச்சரிக்கையோ சிறிதும் அவற்றில் காணப்படவில்லை. ஆனால் அக்கால மாறிவரும் அரசியல் சிந்தனையின் பாதிப்பு அவற்றில் காணப்பட்டது. குடியானவர் அடங்கிய மூன்றாம் பிரிவினரின் கேகயர் அறிக்கை சமுதாய சமத்துவத்தையும், தேசிய ஒற்றுமையையும் கோருவதாய் அமைந்திருந்தது. அப்பிரிவின்ரில் மூன்றில் இரண்டு பங்கினர் வழக்கறிஞர்கள், நீதிபதிகள், அறிஞர்கள் ஆகியோர் இருந்தனர். முதல் இரண்டு பிரிவில் முறையே 300 உறுப்பினர்கள் இருந்தனர். மூன்றாம் பிரிவில் 600 உறுப்பினர்கள் 16ஆம் லூயியால் அனுமதிக்கப்பட்டிருந்தனர். மூன்றாம் பிரிவில் மிகச் சிறந்த திறமைசாலிகளான மிராபு (Mirabeau)வும், சீயெசும் (Sieyes) இடம் பெற்றிருந்தனர். செல்வந்தர் குடும்பத்தில் பிறந்திருந்த போதிலும் இருவரும் மூன்றாம் பிரிவினரின் பிரதிநிதிகளாய்ப் பணிபுரிவதை விரும்பினர். சிறு வயதில் துடுக்குத் தனமான செயல்களால் பலமுறை கேசட் கடிதங்கள் (Letters of Cachet) என்ற குற்றப் பத்திரிக்கைகளினால் சிறை சென்றவர் மிராபு. 1789ல் அரசியலமைப்பு சார்ந்த அரசாங்க முறையிலுள்ள தனது ஆழ்ந்த பற்றினை வெளிப்படுத்தினார். 1791ல் மறையும் வரை பிரெஞ்சு அரசியலில் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்தார். கொள்கைப் பிடிப்பு மிக்க பாதிரியாரான சீயெஸ் மூன்றாவது பிரிவினரின் சரியான வழிகாட்டியாகச் செயலாற்றினார். இதுகாறும் அரசியலில் புறக்கணிக்கப்பட்டோராய் வாழ்ந்த மூன்றாம் பிரிவினருக்கு உரிய பங்கினைப் பெற்றுத் தருவதைத் தமது நோக்கமாகக் கொண்டார்.

## புரட்சியின் போக்கு

முந்தய கூட்டங்களில் மூன்று பிரிவினரின் பிரதிநிதிகளும் தனித் தனிச் சபையாகக் கூடி தீர்மானங்களை நிறைவேற்றுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மூன்று சபைகளிலும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அரசரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டன. ஒவ்வொரு சபைக்கும் ஒரு வாக்கு என்ற விகிதத்தில் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே எண்ணிக்கையில் அதிகமாயுள்ள மூன்றாம் பிரிவினரின் தீர்மானங்கள் முதல் இரண்டு பிரிவினரின் கூட்டு முயற்சியால் முறியடிக்கப்படும் நிலை நிலவியது. எனவே 1789ல் தேசிய மன்றம் கூடிய போது மூன்றாம் பிரிவினர், அனைவரும் ஒரே சபையாகக் கூட வேண்டுமென்றும் தீர்மானங்கள் பொதுவான வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு உறுப்பினர்களின் பெரும்பான்மை கருத்துப்படி முடிவு செய்யப்பட வேண்டுமென்று கோரினர். லபாயத் (Lafayette) மற்றும் மத குருமார்கள் பலரும் இக்கோரிக்கைக்கு ஆதரவாயிருந்தனர். மக்களின் பொதுக் கருத்தும் அத்தகைய

நிலைப்பாட்டினை வரவேற்றது. எனினும் சலுகைகளை விட்டுக் கொடுக்க விரும்பாத பிரபுக்கள் கூட்டத்தின் கைப்பாவையாகத் திகழ்ந்த 16ஆம் லூயி அக்கோரிக்கைக்கு இணங்க மறுத்தார்

## தேசியப் பேரவை (National Assembly)

அரசரின் இணக்கமற்ற போக்கினால் தேசிய மன்றத்தின் மூன்றாம் பிரிவினர் 1789 ஜுன் 17ல் தங்களை தேசியப் பேரவை என்று பெயரிட்டு தனியாகச் செயல்படத் தொடங்கினர். பிற இரண்டு பிரிவினரும் விரும்பினால் தங்களுடன் இணைந்து தேசியச் சீர்திருத்தப் பணியில் பங்கேற்கலாம் என்றும் அழைப்பு விடுத்தனர். மூன்று நாட்கள் கழித்து வெர்செய்ல்ஸ் மாளிகையில் தங்கள் பிரிவினர் கூடுவதற்கென வழக்கமாய் ஒதுக்கப்பட்டுள்ள அரங்கத்தில் கூடுவதெனக் குவிந்தனர். ஆனால் அவ்வரங்கத்தில் சீரமைப்புப் பணி நடைபெறுவதாகக் குறிப்பு காணப்பட்டது. கதவுகள் மூடப்பட்ட நிலையில் ஆயுதம் தாங்கிய இராணுவ வீரர்கள் அவ்வரங்கில் காவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## டென்னிஸ் மைதான உறுதிமொழி

அதிருப்தியாலும் மன்னர் மேல் கொண்ட அவநம்பிக்கையினாலும் அதிர்ச்சியடைந்த தேசியப் பேரவை உறுப்பினர்கள் மிராபு, சீயெஸ் ஆகியோரின் தலைமையில் அரண்மனைக்கு அருகிலிருந்த அரசு டென்னிஸ் மைதானத்தில் ஒன்று கூடினர். அரசியலமைப்பினை உருவாக்கும் வரை பிரிந்து செல்வதில்லை என்று மிதமிஞ்சிய ஆர்வத்துடன் கைகளை உயர்த்தி ஆவேசமான உறுதிமொழியினை எடுத்துக் கொண்டனர். இந்த டென்னிஸ் மைதான உறுதிமொழியே பிரெஞ்சுப் புரட்சியின் தொடக்கமாக அமைந்தது. வல்லாட்சியின் முடிவையும் மக்கள் இறைமையின் தொடக்கத்தையும் பறை சாற்றுவதாய் அமைந்தது

பெருந்திரளான மக்களின் கொந்தளிப்பான நிலைமையைப் புரிந்து கொண்ட 16ஆம் லூயி தேசியப் பேரவையுடன் அனுசரித்துச் செல்ல முடிவெடுத்தார். டென்னிஸ் உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்ட ஜுன் 20லிருந்து ஒரு வார காலத்தில் தனது முந்தைய ஆணைகளை விலக்கிக் கொண்டார். தேசிய மன்றத்தின் மூன்று பிரிவினரும் ஒன்றாகக் கூடி எண்ணிக்கை அடிப்படையில் பெரும்பான்மை மூலம் முடிவெடுக்கவும் சம்மதம் வழங்கினார். கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்த 16ஆம் லூயி தேசிய மன்றம் கூட்டப்பட்டால் மட்டுமே நிதி ஆதாரத்தைப் பெற இயலும் என்ற இக்கட்டான நிலையில் இருந்ததால், வேறுவழியின்றி அனுசரிக்கும் மனப்பாங்குடன் செயல்பட்டார். எனினும் தனது வெறுப்பினை வெளிப்படுத்தும் முகமாக மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த நிதி அமைச்சர் நெக்கரைப் பதவியிலிருந்து நீக்கினார்

## பாஸ்டல் சிறைச்சாலை தாக்கப்படல் (ஜூலை 14, 1789)

1789 ஜூன் வாக்கில் நிலைமை கட்டுக்குள் இருந்தது. எஸ்டேட்ஸ் ஜெனரல் எனப்பட்ட தேசிய மன்றம் தேசிய அரசியலமைப்பு மன்றம் என்ற பெயரில் செயல்பட்டது. மூன்று பிரிவினரும் ஒருங்கே கூட்டங்களில் கலந்து கொண்டனர். ஆனால் அது தனது பணிகளைச் செய்யத் துவங்கும் முன்னரே 16ஆம் லூயியின் நடவடிக்கை பொதுமக்களை ஆத்திரமூட்டுவதாய் அமைந்தது. 1789 ஜூலையில் அரசு இராணுவத்தைக் கிழக்கு எல்லையிலிருந்து பாரிஸ் மற்றும் வெர்செய்ல்சின் சுற்றுப் புறங்களுக்கு இடம் பெயர்ந்து வர ஆணையிட்டார். அரசியலமைப்பு மன்றத்தின் பணிகள் புரட்சிகரமானதான நடவடிக்கைகளில் ஈடுபடும் பட்சத்தில் இராணுவத்தின் வலிமை கொண்டு அடக்கி ஒடுக்க அரசர் மேற்கொள்ளும் முயற்சியாக அது அமைந்தது. தேசிய மன்றம் இராணுவத்தைப் பழைய இடங்களுக்குத் திருப்பி அனுப்பும்படி முன்வைத்த கோரிக்கை மன்னரால் புறக்கணிக்கப்பட்டது. நெக்கரின் பதவி நீக்கத்தினால் ஏற்கனவே அதிருப்தி கொண்டிருந்த மன்ற உறுப்பினர்கள் அரசரின் அடாவடிப் போக்கினால் ஆத்திரம் அடைந்தனர்.

இளைஞரும் பத்திரிக்கையாளருமான காமைல் டெமோவினின் (Camille Desmoulins) கனல் தெறிக்கும் புரட்சிகரமான பேச்சினால் உந்தப்பட்ட பாரிஸ் மக்கள் அரசுக்கு எதிரான வன்முறையில் இறங்கினர். மூன்று நாட்கள் பாரிஸ் நகரம் வன்முறையாளர்களின் களமாகியது. கடைகள் சூறையாடப்பட்டன. அரசு அதிகாரிகள் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். வணிகம் ஸ்தம்பித்தது. மூன்றாம் நாள் ஜூலை 14, 1789ல் பார்போன் மன்னர்களின் வல்லாட்சிச் சின்னமாகக் கருதப்பட்ட பாஸ்டைல் சிறைச்சாலை நோக்கி வன்முறையாளர்கள் முன்னேறினர். பாரிஸ் நகரின் கிழக்கு எல்லையில் அமைந்திருந்த அச்சிறைச்சாலை சில மணி நேரங்களில் வன்முறையாளர்களின் கட்டுப்பாட்டில் வந்தது. அதனைக் காத்து வந்த சுவிஸ் நாட்டுக் கூலிப்படையினர் வெட்டிச் சாய்க்கப்பட்டனர். பிரெஞ்சுப் புரட்சியில் முதல் வன்முறை நிகழ்ச்சி பாஸ்டைல் வீழ்ச்சியாகும். மக்கன் தேசிய மன்றத்தைத்தான் ஆதரிக்கின்றனர் என்பதை இந்நிகழ்ச்சி தெளிவுபடுத்தியது. இந்நிகழ்ச்சியின் பின்னர் பாரிஸ் நகரம் முழுமையும் சுதந்திரமாக இயங்கியது. நகரின் முக்கிய பிரமுகர்கள் தங்கள் அரசுகளையும் இராணுவத்தையும் அமைத்துக் கொண்டனர் அத்தகைய தல ஆட்சி அமைப்புக்கள் கம்யூன்கள் (Commune) எனப்பட்டன. புரட்சிக் களம் வெர்செய்ல்சிலிருந்து பாரிசுக்கு மாறியது.

பாஸ்டைல் வீழ்ச்சியின் பின்னர் 16ஆம் லூயியின் போக்கில் சற்றே மாற்றம் ஏற்பட்டது. இராணுவத்தைத் திரும்பப் பெற்றார். நெக்கரை மீண்டும் நிதி அமைச்சராக்கினார். லஃபாயத்தை தேசியப் பாதுகாப்புப் படையின் தளபதி என அங்கீகரித்தார். புரட்சியாளர்களின் மூவர்ணக் கொடியை தேசியக்

கொடியாக அங்கீகரித்தார். இன்றளவும் பிரெஞ்சு மக்கள் ஜூலை 14 ஆம் நாளை அதாவது பாஸ்டைல் வீழ்ச்சியடைந்த நாளை பிரெஞ்சு நாட்டின் விடுதலை நாளாகக் கொண்டாடுகின்றனர்.

## பாரிசிலிருந்து வெர்செய்ல்ஸ் வரை சென்ற பெண்கள் பேரணி (அக்டோபர் 5, 1789)

பிரபுக்கள் மற்றும் மனைவி மேரி அண்டாய்னெட்டின் தூண்டுதலால் மன்னர் பிளாண்டர்ஸ் நகரிலிருந்து மீண்டும் இராணுவத்தை அழைத்தார். புரட்சியின் சின்னங்களான தேசிய அரசியலமைப்பு மன்றம், கம்யூன்கள், தேசிய பாதுகாப்புப் படை ஆகியவற்றிற்கு எதிரான இராணுவ வலிமையை பயன்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி பாரிஸ் மக்களை ஆத்திரமடையச் செய்தது. வெர்செய்ல்சில் அரச குடும்பத்தவர், இராணுவ வீரர்கள் ஆகியோர் உண்டு களித்து ஆனந்தக் களியாட்டங்களில் ஈடுபட்டனர். அதே சமயம் பாரிஸ் மக்கள் உண்ண உணவின்றித் திண்டாடினர். எனவே 1789 அக்டோபர் 5ல், பாரிஸ் நகரைச் சேர்ந்த ஏழைப் பெண்கள் கூட்டம் கைகளில் ஆயுதங்களுடன் ரொட்டி வேண்டும் எனக் கோஷமிட்டுக் கொண்டு 12 மைல் தூர நெடுஞ்சாலையில் பேரணியாகச் சென்று வெர்செய்ல்ஸ் அடைந்தனர். மாளிகையைச் சூழ்ந்து கொண்டு "ரொட்டி அல்லது குருதி வேண்டும்" எனக் கோஷமிட்டனர். வன்முறையில் ஈடுபட்ட பெண்களை அடக்க லஃபாயத் மேற்கொண்ட முயற்சி பயனளிக்கவில்லை. அன்று இரவு மாளிகையில் நுழைந்த மக்கள் கூட்டம் அரச குடும்பத்தவரின் பாதுகாப்புப் படையினர் பலரை அடித்துக் கொன்றது.

மறுநாள் அக்டோபர் 6 அதிகாலை புரட்சியாளர்களுடன் தனது குடும்பத்தவருடன் பாரிசுக்கு மன்னர் பயணப்பட சம்மதித்தார். முந்தைய நாள் நடைபெற்ற ஊர்வலத்தின் எதிர்த் திசையில் பயணப்பட்ட இந்த ஊர்வலம் பிரெஞ்சு வரலாற்றின் அவமானச் சின்னமாகும். அன்று வெர்செய்ல்ஸ் அரண்மனையிலிருந்து பயணப்பட்ட அரச குடும்பத்தவர் மீண்டும் செர்செய்ல்ஸ் வர இயலாது போயிற்று. மன்னன் மீதிருந்த வெறுப்பின் வெளிப்பாடாக "ரொட்டி சுடுபவன்; அவன் மனைவி மற்றும் மகனும் வருகின்றனர். இனி நமக்கு ரொட்டி கிடைக்கும்" என்று மக்கள் கோஷமிட்டனர்.

மன்னரும் அவரைச் சேர்ந்தோரும் டியூலரீஸ் (Tuileries) அரண்மனையில் சிறைப்படுத்தப்பட்டனர். பாரிஸ் பிரெஞ்சு அரசின் மைய இடமாகச் செயல்படத் தொடங்கியது.

### நகர்ப்புறங்களில் வன்முறை

பாரிசில் வன்முறை வலுவடைந்தது. அரசு நிறுவனம் ஸ்தம்பித்தது. செல்வந்தர்கள் மற்றும் மத குருமார்கள் ஆகியோரின் சொத்துக்களை

வன்முறைக் கும்பல் கொள்ளையடித்தது. அவர்கள் அவமானப்படுத்தப் பட்டனர். பலர் உயிர் தப்பி வெளிநாடுகளுக்கு ஓடினர். நீதிமன்றங்கள் செயலிழந்தன. வன்முறைக் கொடுமை பிற நகரங்களுக்கும் பரவியது குழப்பமும் கொடுமைகளும் நிறைந்த காலமாக 1789 ஆண்டின் கோடைக்காலம் கழிந்தது.

## தேசிய அரசியலமைப்பு மன்றத்தின் பணிகள் (1789 - 1791)

அரசியல் குழப்பமும், ஸ்திரமற்ற தன்மையும் நிலவிய காலகட்டத்தில் நாட்டு நிர்வாகப் பணியினை தேசிய அரசியலமைப்பு மன்றம் திறமையுடன் நடத்தியது. 1789 - 1791 கால்கட்டத்தில் அது மேற்கொண்ட பணிகளாவன:

1. நிலமானிய முறையையும், அடிமை முறையையும் சட்டபூர்வமாக ஒழித்தது.

2. சமுதாய சமத்துவத்திற்குத் தடையாக இருந்த குறிப்பிட்ட சில வர்க்கத்தினருக்கான சிறப்புச் சலுகைகள் ஒழிக்கப்பட்டன.

3. மேனர் நீதிமன்றங்கள் ஒழிக்கப்பட்டன.

4. டைத் மற்றும் பிற சமயம் சார்ந்த சலுகைகள் நீக்கப்பட்டன. மேற்கூறிய சீர்திருத்தங்கள் அனைத்தும் ஆகஸ்ட் மாதவாக்கில் மேற்கொள்ளப்பட்டன. எனவே அக்காலக் கட்டம் "ஆகஸ்ட் தினங்கள்" (August Days) என்றழைக்கப்பட்டன.

5. தனி மனித உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டன. "மனிதன் மற்றும் குடிமகனின் உரிமைகள் பிரகடனம்" (Declaration of the Rights of Man and of the Citizen") என்று அவை குறிப்பிடப்பட்டன. ரூஸோவின் கருத்துக்களைத் தழுவியதாய் அது அமைந்தது. சமத்துவம், சுதந்திரம், சொத்துரிமை, பாதுகாப்பு, அடக்கு முறைக்கு எதிர்ப்பு ஆகிய கருத்துக்களை உள்ளடக்கியதாயிருந்தது. சட்டம் என்பது பொது விருப்பத்தின் வெளிப்பாடு; அதனைத் தயாரிப்பதில் ஒவ்வொரு குடிமகனும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பங்கேற்க உரிமை பெற்றவன். சட்டத்தின் முன் அனைவரும் சமம். சமயச் சகிப்பு, பேச்சுரிமை, எழுத்துரிமை ஆகியவை உறுதி செய்யப் பட்டன. நாட்டின் நிதியைக் கட்டுப்படுத்தும் உரிமை மக்களுக்கு உண்டென்றும், அரசு அதிகாரிகள் மக்களுக்குப் பொறுப்பளிக்கக் கடமைப்பட்டவர்கள் ஆகிய முற்போக்குக் கருத்துக்கள் இப்பிரகடனத்தில் இடம் பெற்றன.

6. பிரான்சில் ஒரே மாதிரியான புதிய அரசாங்க அமைப்பு முறையை உருவாக்கித் தந்தது. நாடு முழுமையும் எண்பத்து மூன்று டிபார்ட்மெண்ட்டு களாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு டிபார்ட்மென்ட்டும் மாவட்டங்களாகவும்

கம்யூன்களாகவும் பிரிக்கப்பட்டன. தல ஆட்சி நிறுவனங்களின் தலைவர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வகை செய்யப்பட்டது. புதிய நீதிமன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன. நீதிபதிகளும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

7. தேசிய ஒற்றுமைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. தேசியக் கல்வி முறை மற்றும் இராணுவ முறை ஆகியவை தேசிய ஒற்றுமையைப் பேணும் வண்ணம் வடிவமைக்கப்பட்டன. மக்களிடையே தேசீய உணர்வைத் தூண்டும் முயற்சியாக 1790 ஜூலை 14ஆம் நாள் பிரெஞ்சு தேசிய நாளர்க் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

8. மக்கள் தங்கள் ஆட்சி முறையைத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் உரிமை பெற்றவர்கள் என அறிவித்தது. அதன்படி ரோன் (Rhone River) நதிக் கரையிலுள்ள ஆவிக்னானில் மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. போப்பின் எதிர்ப்பையும் மீறி நடைபெற்ற வாக்கெடுப்பில் பெரும்பாலான மக்கள் பிரெஞ்சு தேசிய மன்றத்துடன் இணைவதை ஆதரித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

9. நிதி நிலையைச் செம்மைப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டது. முந்தைய கால நேரடி வரிகள் ரத்துச் செய்யப்பட்டன. நாட்டின் ஐந்தில் ஒரு பகுதி நிலம் திருச்சபையின் உடமையாயிருந்தது. எனவே அவை பறிமுதல் செய்யப்பட்டன. அச்சொத்துக்களின் மதிப்பிற்கு இணையாக ஆசிக்னாட்ஸ் (Assignats) என்ற காகிதப்பணம் வெளியிடப்பட்டது. திருச்சபைகளுக்கு இழப்பீடாக இனிவரும் காலங்களில் திருச்சபை ஊழியர்களின் ஊதியத்தை அரசு வழங்க ஏற்பாடாயிற்று.

10. 1790 பிப்ரவரியில் மடாலயங்களும் பிற சமய நிறுவனங்களும் ஒழிக்கப்பட்டன. 1790 ஜூலையில் "மத குருமார்களுக்கான பிரத்யேக சிவில் சட்ட அமைப்பு" (Civil Consitution of the Clergy) தயாரிக்கப்பட்டது. அதன்படி மதகுருமார்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படவும் அரசால் ஊதியம் பெறவும் வழி செய்யப்பட்டது. போப் மற்றும் சமயத் துறையினரின் கடும் எதிர்ப்பையும் மீறி இவ்வரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது. டாலிராண்டு பிஷப் முதலில் இதனை ஏற்றுக் கொண்டார்.

11. பிரான்சின் புதிய அரசியலமைப்பு எழுதப்பட்டது. 1791ல் அரசரின் கையொப்பத்தினை அது பெற்றது. அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் அடிப்படையில் அது அமைந்திருந்தது. 'சட்டப் பேரவை' என்ற பெயருடைய ஒரு சபைப் பாராளுமன்றத்தை அது வழங்கியது. மறைமுகத் தேர்தல் முறை பரிந்துரைக்கப்பட்டது. அரசரைப் பெயரளவுத் தலைவராய் உருவாக்கியது. வலுவிழந்த நிலையில் அரச பதவி அமைக்கப்பட்டது. மறுப்பாணை (Suspensive) அதிகாரம் மட்டும் அவருக்கு வழங்கப்பட்டது.

## புதிய சட்டமன்றம்

பிரான்சின் புதிய சட்டமன்றம் 1791 அக்டோபர் முதல் நாளன்று பாரிசில் கூடியது. அதில் 745 பிரதிநிதிகள் இருந்தனர். சட்டமன்றத்தின் பணிகள் பற்றிய எதிர்பார்ப்பு மக்களிடையே கூடுதலாகியது. புரட்சிக் கருத்துக்களை நடைமுறைப் படுத்துவதில் ஆர்வமுள்ளவர்கள் அடங்கிய அரசியல் சங்கங்கள் பல பிரான்சில் பிறந்தன. அவற்றுள் மிகத் தீவிரவாதப் போக்குடையதாய்த் திகழ்ந்தவை கார்டிலியர் மற்றும் ஜகோபின் சங்கங்களாகும்.

## கார்டிலியர் சங்கம் (Cordelier Club)

'மனித உரிமைகளுக்கான நண்பர்களின் சங்கம்'' (Society of the friends of the rights of man and of the citizen) என்ற பெயரில் தொடங்கப்பட்டது. பாரிஸ் நகரின் குறிப்பிடத்தக்க புரட்சியாளர்கள் இதன் உறுப்பினராயிருந்தனர். திருச்சபையிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட மடாலயங்களில் ஒன்றான 'கார்டிலியர்' மடாலத்தில் இதன் கூட்டங்கள் நடத்தப்பட்டதால் கார்டிலியர் சங்கம் என்றழைக்கப்பட்டது. முடியாட்சியை முடிவிற்குக் கொண்டு வந்து குடியாட்சியை பிரான்சில் நிலைபெறச் செய்வதை இச்சங்கத்தினர் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். டான்டன் இதன் தலைவராயிருந்தார்.

## ஜகோபியர் சங்கம் (Jacrbin Club)

'அரசியலமைப்புக்கான நண்பர்கள் சங்கம்' (Society of the Friends of the Constitution") கார்டிலியர் சங்கம் போன்று தீவிரவாதிகளடங்கிய சங்கமாகும். எனினும் மிராபு, சீயெஸ், லஃபாயத் ஆகியோர் இச்சங்கத்தின் தொடக்க கால அங்கத்தினர்களாயிருந்தனர். பின்னாளில் ராபர்ஸ்பியர் (Robespierre) இதன் தலைவரானார். அவரது தலைமையின் கீழ் இச்சங்கமும் கார்டிலியர் சங்கம் போன்றே மிகத் தீவிரவாத அமைப்பாக மாறியது. பறிமுதல் செய்யப்பட்ட மடாலயமான ஜகோபியர் மடாலயத்தில் இதன் கூட்டங்கள் நடைபெற்றதால் ஜகோபியர் சங்கம் என்றழைக்கப்பட்டது. இதன் கிளைகள் நாட்டின் பல இடங்களிலும் தோன்றியது. துண்டுப் பிரசுரங்கள் செய்திப் பத்திரிக்கைகள் வாயிலாகப் புரட்சிக் கருத்துக்கள் பரப்பப்பட்டன. கிளைச் சங்கங்களுடன் பாரிசிலிருந்த மைய அமைப்பு நிரந்தரத் தொடர்பினைக் கொண்டிருந்தது. பொதுவாகத் தீவிரவாதிகள் என்றால் ஜகோபியர்கள் என்று அறியப்பட்டனர். இச்சங்கத்தின் குறிப்பிடத்தக்க உறுப்பினர்களாயிருந்தவர்கள் மாரட், டான்டன் ஆகியோருமாவர்.

இச்சங்கங்களின் தீவிரவாதப் போக்கு புரட்சிப் புயலைத் தீவிரப் படுத்தியது. புதிய சட்டமன்றத்தின் பணிகள் சிக்கல் மிகுந்ததாயிருந்தது. அரசியலமைப்பை வடித்துத் தந்த சபையின் உறுப்பினர்கள் எவரும் தேர்தலில்

போட்டியிடப் போவதில்லை என்று சுய-மறுப்புத் தீர்மானத்தினை நிறைவேற்றினர். எனவே புதிய சட்டசபை உறுப்பினர்களில் பெரும்பாலோர் பாராளுமன்ற நடைமுறைகள் பற்றி அறியாதவர்களாயிருந்தனர். அவர்களிடையே இணக்கமற்ற போக்கு நிலவியது. அரசருடனும் சுமுக உறவு நிலவவில்லை. அத்தோடு மக்கள் கிளர்ச்சிகளையும் சமாளிக்க வேண்டியதாயிற்று. லா வென்டி (La Vendee)யில் விவசாயிகள் கலகத்தில் ஈடுபட்டனர். நாடு முழுவதும் குழப்பமான நிலவியது.

## புரட்சிக்கு எதிராக அயலவர் எதிர்ப்பு

பிரெஞ்சுப் புரட்சியின் பாதிப்பு பிற ஐரோப்பிய நாடுகளிலும் காணப்பட்டது. வரம்பில்லா முடியாட்சி அமைப்பில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த இங்கிலாந்து நீங்கலான பிற ஐரோப்பிய நாடுகள் தங்கள் நாடுகளிலும் புரட்சித் தீ பரவி விடுமோ என அஞ்சின. பார்போன் வம்சத்தவரின் உறவினர்களான ஸ்பானிய பார்பான் மற்றும் சிசிலி அரச குடும்பத்தவரும், ஆஸ்திரிய ஹாப்ஸ்பர்க் வம்சத்தவரும் பிரெஞ்சுப் புரட்சிக்கு எதிராகச் செயல்பட விழைந்தனர். மேரி அன்டாய்னட்டின் சகோதரரும் புனித ரோமப் பேரரசின் அரசருமான இரண்டாம் லியோபால்டு, ரஷ்ய மன்னர் இரண்டாம் பிரடெரிக் வில்லியத்துடன் இணைந்து 1791 ஆகஸ்டில் ‘பில்னிட்ஸ் பிரகடனம்’ என்ற ஒன்றினை வெளியிட்டார். பிரெஞ்சு அரச குடும்பத்தவருக்கு ஆதரவாய் அமைந்த இக்கூட்டிணைவு பிரெஞ்சுப் புரட்சியாளர்களால் வெறுக்கப்பட்டது. தங்கள் தேசியத்திற்கு விடப்பட்ட சவாலாக பிரெஞ்சு சட்ட மன்றம் கருதியது.

## சட்டமன்றத்தின் நிலைப்பாடு

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சிக்கல்களைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பினை வகித்த சட்ட மன்றத்தில் கருத்து ஒற்றுமை இல்லாதிருந்தது. மொத்த உறுப்பினரான 750 பேரில் 350 பேர் தங்கள் எண்ணம் போல் தீர்மானங்களின் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொண்டனர். எஞ்சியோர் பியூலன்ட்டுகள் (Feuillants) மற்றும் ஜிரோண்டியர்கள் (Girondists) என்ற இரண்டு பிரிவினராய்க் காணப்பட்டனர். பியூலன்ட்டுகள் பழமைவாதிகள். 1791ன் அரசியலமைப்பின்படி அரசு நடைபெற வேண்டும் என்று வாதிட்டனர். ஜிரோண்டியர்கள் தீவிரவாதிகளாவர். இப்பிரிவைச் சார்ந்த பலர் ஜிரோன்டி என்ற ஆட்சித் துறைப் பிரிவிலிருந்து (Department) தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதால் ஜிரோன்டியர்கள் என்றழைக்கப்பட்டனர். அவர்கள் உண்மையான தேசிய வாதிகளாகயிருந்தனர். பண்டைய கிரேக்க ரோமானிய குடியரசுகளின் அடிப்படைப் பண்புகளின்பால் ஆழ்ந்த பற்றுக் கொண்டிருந்தனர். 16ஆம் லூயியைப் பதவியிலிருந்து நீக்கி விட்டு குடியரசு உருவாக்கப்பட விரும்பினர். பாரிஸ் நகரைச் சார்ந்த வழக்கறிஞரான பிரிசாட் (Brissot) அவர்களை வழிநடத்திய

தலைவராவார். வெர்னியாட் (Vergniaud), கன்டார்செட் (Condorcet), டுமோரிசு (Dumouriez), மேடம் ரோலண்டு (Madame Roland) ஆகியோர் ஜிரோண்டியர்களின் பிற குறிப்பிடத்தக்க தலைவர்களாவர்.

## ஆஸ்திரியா, பிரஷ்யாவிற்கு எதிரான போர்

உள்நாட்டுச் சிக்கல்களைத் தீர்ப்பதைப் பொறுத்த அளவில் பிரெஞ்சு சட்டசபை உறுப்பினரிடையே கருத்து ஒற்றுமை ஏற்படாத போதிலும் வெளிநாட்டுப் பகைவர்களை எதிர்ப்பதில் இணைந்து செயல்பட்டனர். ஜிரோண்டியர்களின் செல்வாக்கு உயர்ந்து காணப்பட்டது. பிரெஞ்சு எல்லையில் நிறுத்தப்பட்டுள்ள ஆஸ்திரியப் படைகளைத் திரும்பவும் அழைத்துக் கொள்ளும்படியும், பிரான்சிலிருந்து இடம் பெயர்ந்தவர்களைத் திரும்ப அனுப்பிவிடும்படியும் ஆஸ்திரிய அரசரை பிரெஞ்சு அரசு கேட்டுக் கொண்டது. இவ்வேண்டுகோளுக்கு ஆஸ்திரியா இணங்காது போகவே, ஜிரோண்டியர்கள் 1792 ஏப்ரலில் ஆஸ்திரியாவுடனான போர் அறிவிப்பை வெளியிடுமாறு 16ஆம் லூயியைக் கட்டாயப்படுத்தினர். லபாஃபயத் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

தேசிய உணர்வினால் உந்தப்பட்ட பிரெஞ்சு மக்கள் போரில் ஆவேசத்துடன் ஈடுபட்டனர். சுதந்திரம், சமத்துவம், தேசியம் ஆகிய உயர் கொள்கைகளுக்காகப் போராடுவதாய்க் கருதினர். ரோகட்டி லிஸ்லி (Rouget Lelisle) பிரெஞ்சு சிப்பாய்களை உற்சாகப்படுத்த ஸ்ட்ராஸ்பர்க்கில் இயற்றிய பாடல் மார்சிலெய்ஸ் (Marseillaise) இராணுவ வீரர்களால் இசைக்கப்பட்டது. அப்பாடலே பின்னாளில் பிரான்சின் தேசிய கீதமானது.

போரிட தேசிய எண்ணமும், ஆர்வமும், வெறியும் மட்டுமே போதுமானவை அல்ல என்பதைத் தொடக்க கால போர் நிகழ்ச்சிகள் சுட்டின. பயிற்சியோ, போதுமான ஆயுதமோ, கோட்டை கொத்தளப் பாதுகாப்பு அம்சங்களோ இல்லாத நிலையில் பிரெஞ்சுப் படைகள் தோல்வியைச் சந்தித்தன. பிரெஞ்சு அரசர் எதிரிகளுடன் சேர்ந்து சதி செய்து இராணுவ நடவடிக்கைகள் பற்றிய இரகசியத் தகவல்களை எதிரிகளுக்குத் தருவதாக சந்தேகிக்கப்பட்டது. எனவே ஜூன் 20, 1792ல் கோபம் கொண்ட பெண்கள், கைவினைஞர்கள், உழைப்பாளிகள் அடங்கிய கும்பல் அரச குடும்பத்தவரின் மாளிகையில் நுழைந்து அவர்களைக் கடுமையாய் எச்சரித்தது

1792 ஜூலை 25ல் எதிரிப் படைத் தளபதியான பிரன்ஸ்விக் டியூக் பிரெஞ்சு மக்களுக்கு வெளியிட்ட பிரகடனம் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது போல் அமைந்தது. பிரெஞ்சு மன்னனை மறுபடி சட்டபூர்வமான வல்லாட்சியாளராக நியமிக்க பிரெஞ்சு மக்கள் தவறும் பட்சத்தில் பாரிஸ் நகரம் சூறையாடப்படும் என்றும் பிரெஞ்சு மக்களுக்கு சரியான பாடம் கற்பிக்கப்படும்

என்றும் அப்பிரகடனம் எச்சரிக்கைத் தொனியில் இருந்தது. எனவே 16ஆம் லூயி எதிரியுடன் கொண்ட உறவு பற்றிய சந்தேகம் உண்மை என்பது தெளிவாயிற்று.

## ஜகோபியர்களின் வெற்றி

வெகுண்டெழுந்த பாரிஸ் மக்கள் 1792 ஆகஸ்ட் 9-10 நாட்களில் அரசியலமைப்பு சார்ந்த முடியாட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர். புரட்சி அமைப்பு ஒன்றினை டான்டன் தலைமையில் நிறுவினர். அரச மாளிகையைக் கைப்பற்றினர். அரசரும் அரசியும் தப்பியோடி சட்டமன்றத்தில் தஞ்சம் புகுந்தனர். ஆகஸ்ட் 10ஆம் நாள் அரசரைப் பதவியிலிருந்து நீக்குவதாக சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. பிரான்சிற்கான புதியதோர் அரசியலமைப்பினை வடித்திட வயது வந்த ஆண்கள் வாக்குரிமையின் அடிப்படையில் உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட ஏற்பாடுகளைச் செய்தது.

## செப்டம்பர் படுகொலை

1792 ஆகஸ்ட் 10 லிருந்து 20 வரையிலான கால கட்டத்தில் பிரான்சில் அரசு நிறுவனம் இல்லாத நிலை காணப்பட்டது. லஃபாயத் எதிரிகளின் கூட்டுப் படையில் இணைந்து கொண்டார். டுமோரியசு பிரெஞ்சு இராணுவத் தலைவரானார். பிரெஞ்சு மக்களிடையே பீதி நிலவியது. புரட்சிக் குழுக்களின் கரங்களில் தலைமைப் பொறுப்பு வந்தது. டான்டன் தலைவராயிருந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். தைரியம் ஒன்றே பிரான்சை எதிரிகளிடமிருந்து காப்பாற்றும் என்று அரைகூவல் விடுத்தார். செப்டம்பர் 2ஆம் நாள் எதிரிகளால் வெர்டுன் கைப்பற்றப்பட்ட செய்தி பிரான்சில் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது. டான்டனின் தூண்டுதலின் பேரில் அரசு சார்பாளர்கள் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்பட்டனர். 5 நாட்கள் அத்தகைய படுகொலைகள் நடைபெற்றன. பெண்கள், குழந்தைகள், பிரபுக்கள், நீதிபதிகள், மதகுருமார்கள் உள்பட சுமார் 2000 பேர் கொலை செய்யப்பட்டனர்.

## பிரான்சின் முதல் குடியரசு (1792 - 1795)

போரில் ஒரு திருப்பமாக செப்டம்பர் 20ல் கூட்டுப் படைகள் வால்மி (Valmy) போர்க்களத்தில் டான்டனின் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. இச்செய்தி புதியதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய அரசியல் நிர்ணயப் பேரவை (National Convention) உறுப்பினர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. 1792 செப்டம்பர் 22 ஆம் நாளில் முதல் குடியரசு செயல்பாட்டிற்கு வருவதாக அறிவிக்கப்பட்டது. பிரான்சை விட்டு வெளியேறியவர்கள் மீண்டும் பிரான்சிற்குள் நுழைந்து குடியேற நிரந்தரத் தடையினை இச்சபை விதித்தது. மேலும் அரசரை விசாரணைக்கு சபை முன் நிறுத்தவும் முடிவு செய்தது.

## தேசிய நிர்ணய சபை எதிர்கொண்ட சிக்கல்கள்

சிக்கலான காலக்கட்டத்தில் பதவியேற்ற இப்புதிய சபை பல சிக்கல்களையும் சவால்களையும் எதிர் கொண்டது. அவையாவன:

1. பதவி நீக்கம் செய்யப்பட்டு சிறைக் கைதியாக உள்ள அரசர் தொடர்பான முடிவினை மேற்கொள்ளுதல்.

2. அயலவரைத் தோற்கடித்து நாட்டினைப் பாதுகாத்தல்.

3. உள்நாட்டுக் கிளர்ச்சிகளை நசுக்குதல்.

4. நாட்டிற்கு வலுவான ஆட்சியை வழங்குதல்.

5. புரட்சியின் தொடக்க காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சமுதாயச் சீர்திருத்த நடவடிக்கைகளைப் பூரணத்துவம் பெறச் செய்தல்.

6. புதிய அரசியலமைப்பினை வடித்து நிரந்தரமான குடியரசை உருவாக்குதல்.

### மன்னர் தண்டிக்கப்படல்

அயலவருடன் சதி செய்து புரட்சியை ஒடுக்க மேற்கொண்ட முயற்சிகள் மற்றும் தேசிய சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கையூட்டு வழங்க முயன்றமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் ஆகியவை 16ஆம் லூயி மீது சுமத்தப்பட்டு தேசிய அரசியல் நிர்ணய சபையில் 1792 டிசம்பர் முதல் நாள் விசாரணை மேற்கொள்ளப் பட்டது. போதிய ஆதாரங்கள் தாக்கல் செய்யப்பட்டன. பின்னர் நடைபெற்ற வாக்கெடுப்பில் 387 பேர் எதிராகவும், 334 பேர் மன்னருக்கு ஆதரவாகவும் வாக்களித்தனர். 1793 ஜனவரி 21ஆம் நாள் டிலா ரெவலூஷன் **(De la Revolution)** எனுமிடத்தில் காலை பத்தரை மணியளவில் மன்னர் சிரம் துண்டிக்கப்பட்டார். அந்த இடம் தற்போது டிலா கன்கார்டு **(De la Concorde)** என்றழைக்கப்படுகிறது.

## தேசிய நிர்ணய சபையின் பணிகள்

### அயல் நாட்டுக் கொள்கை

மன்னர் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டமை ஐரோப்பிய அரசர்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது. புரட்சியின் போக்கினைக் கண்டு அச்சமுற்ற ஆஸ்திரியா, பிரஷ்யா, ஹாலந்து, ஸ்பெயின், சார்டினியா ஆகிய நாடுகள் கூட்டிணைவினை ஏற்படுத்தின. அத்தகைய வலிமையான எதிர்ப்பினை எதிர்கொள்ள கர்னாட் (Carnot) தலைமையில் ஜகோபியர்களின் உந்துதலுடன் பிரான்ஸ் தயாரானது. புதிய வரிகள் போடப்பட்டன. கட்டாய

இராணுவ சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. அரசு துரோகிகள் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் கில்லட்டினுக்கு இரையாக்கப் பட்டனர். மொரியு (Moreau), பிச்குரு (Pichegru), ஜோர்டான் (Jourdan) போன்ற இளைஞர்கள் திறமையான தளபதிகளாகக் களமிறங்கினர். நாடு முழுமையும் ஆயுதம் தாங்கியது போலாயிற்று. நெதர்லாந்து, சவாய், ரைன், பிரனீஸ் பகுதிகளில் போர் தொடர்ந்தது. கர்னாட் வெற்றிகளைத் தொடர்ந்து பெற்றார். 'பாதுகாப்பின் அமைப்பாளர்' என்று முதலில் பெயர் பெற்ற கர்னாட் பின்னர் 'வெற்றிகளின் அமைப்பாளர்' என்று பெருமைப்படுத்தப்பட்டார். 1795 வரை தொடர்ந்த இப்போர் கூட்டிணைவின் சிதைவுடன் முடிவடைந்தது. ஸ்பானிய அரசர் நான்காம் சார்லஸ் பிரெஞ்சு குடியர்சுடன் சமாதானம் செய்து கொண்டார். பிரஷ்யாவின் இரண்டாம் பிரடெரிக் வில்லியம் பேசல் உடன்படிக்கை (Treaty of Basel) செய்து கொண்டு ரைன் பகுதியை பிரான்சிற்கு விட்டுக் கொடுத்தார். இங்கிலாந்து, ஆஸ்திரியா, சார்டினியா ஆகியவை மட்டுமே பிரெஞ்சுக் குடியரசை அங்கீகரிக்கவில்லை.

அயலவருடனான போரில் தேசிய நிர்ணய சபை பெற்ற வெற்றி மகத்தானது. எனினும் அதற்கு பின்பற்றப்பட்ட முறைகள் அதிருப்தி அளிப்பதாய் அமைந்தது. கட்டாய இராணுவ சேவை எதிர்ப்பினை சந்தித்தது. கர்னாட் விமர்சிக்கப்பட்டார். லா வென்டி விவசாயிகள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். எனவே உள்நாட்டுக் கிளர்ச்சிகளையும் வன்மையான கரம் கொண்டு இச்சபை அடக்கியது. அதுவே பயங்கர ஆட்சிக்கு வழிவகுத்தது.

## உள்நாட்டுக் கொள்கை / சாதனைகள்

1. தேசிய அரசியல் நிர்ணய சபை உள் நாட்டுப் பணிகளை ஏற்று நடத்தும் பொறுப்பினை பொது நலக் குழுவிடம் (Committee of General Safety) ஒப்படைத்தது. அக்குழு உறுப்பினர்களில் ரோபஸ்பியர், கர்னாட், செயின்ட் ஜஸ்ட் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அதன் பணியில் துணைபுரிய ஒரு பொது பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டது. புரட்சி நீதிமன்றம் ஒன்றும் நிறுவப்பட்டு சந்தேகிக்கப் பட்டவர்கள் தண்டிக்கப்பட்டனர். இத்தகைய கெடுபிடியும் பயங்கரமும் நிறைந்த காலம் பயங்கர ஆட்சிக் காலம் எனக் குறிக்கப்படுகிறது.

2. தேசியம் புத்துயிர் பெற்றது. கட்டாய இராணுவ சேவை ஒற்றுமை உணர்வினைத் தூண்டுவதாய் அமைந்தது.

3. பிரெஞ்சு மொழியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது.

4. சட்டங்கள் தொகுக்கப்பட்டன. சிவில் சட்ட முறை மாற்றியமைக்கப் பட்டது.

5. மெட்ரிக் அளவு முறை நடைமுறைக்கு வந்தது. சமயப் பொறையுடைமை வலுப்பெற்றது.

6. 12 மாதங்கள் கொண்ட காலண்டர் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. வாரம் ஒன்றிற்கு 10 நாட்கள் என்றும் மூன்று வாரங்கள் ஒரு மாதம் என்றும் கணக்கிடப்பட்டது. 1792 செப்டம்பல் 2 ஆம் நாள் புதிய வருட முறை அறிமுகமானது.

7. நாட்டை விட்டுத் தப்பியோடியவர்களின் சொத்துக்கள் அரசுடமையாக்கப்பட்டன.

8. புதிய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி இயக்குனர்களின் ஆட்சி ஏற்பட்டது.

9.கல்விப் பணிகளை மேற்கொண்டது. தொழிற் கல்விக் கூடங்கள், லுவ்ரே அருங்காட்சியகம், தேசிய நூலகம், பிரெஞ்சு அகெடமி ஆகியவை நிறுவப்பட்டன.

10. பெண்களின் சொத்துரிமை உறுதி செய்யப்பட்டது.

11. முதல் மகனுக்கே சொத்துரிமை என்ற முறை நீக்கப்பட்டது.

## பயங்கர ஆட்சி (Reign of Terror) 1793 - 1794

பிரான்சில் ஏற்பட்ட அரசியல் மற்றும் சமுதாயப் புரட்சியில் வேண்டத் தகாத அம்சமாக நிகழ்ந்து விட்ட ஒன்று பயங்கர ஆட்சியாகும். அன்னியரின் அச்சுறுத்தலிலிருந்து நாட்டைக் காக்க அடிப்படைத் தேவையான ஒருமைப்பாட்டினைப் பெற அச்சுறுத்தலை ஆயுதமாகக் கொண்டு தேசியத் தலைவர்கள் செயல்பட்டதன் விளைவே பயங்கர ஆட்சியாகும்.

தேசிய நிர்ணய சபையினால் உருவாக்கப்பட்ட பொதுநலக் குழுவின் செயல்பாடுகள் கடுமையாய் அமைந்தன. 1793 கோடைகாலம் முதல் 1794 கோடை காலம் வரை பிரான்சின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கை முடிவுகள் இக்குழுவால் செயல்படுத்தப்பட்டன. இக்குழுவிற்குத் துணைபுரிய பொதுப் பாதுகாப்புக் குழுவும், புரட்சி நீதிமன்றமும் நிறுவப்பட்டன. பொதுப் பாதுகாப்புக் குழு உள்நாட்டில் ஒழுங்கு அமைதியை நிலைநாட்டும் காவல் துறைப் பணியினை மேற்கொண்டது. புரட்சி நீதிமன்றம் குடியரசுக்கு எதிரானவர்கள் என்று சந்தேகிக்கப்பட்டவர்களை விசாரித்துத் தண்டனை வழங்கும் பணியினை மேற்கொண்டது. இவை இரண்டும் பொது நலக் குழுவிற்குப் பொறுப்பளிக்கக் கடமைப்பட்டவைகளாகும். சந்தேகிக்கப்படுபவர் சட்டம் (Law of Suspects) ஒன்றினை தேசிய நிர்ணய சபை இயற்றியது. அதன்படி, பிரபுக்கள் புரட்சிக்கு

முன்னர் அரசு அதிகாரிகளாய்ப் பணியாற்றியோர், நாடு கடந்து சென்றவர்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் குடியுரிமைச் சான்றிதழ் இல்லாதோர் ஆகியோர் எவரையும் சிறைப்பிடிக்கலாம்.

இச்சட்டம் என்ற வன்மையான ஆயுதம் மூலம் ஏராளமானோர் தண்டனை பெற்றனர். கில்லடின் (Guillotine) என்ற புதியதோர் ஆயுதம் தண்டனை நிறைவேற்றப்படுவதைத் துரிதப்படுத்தியது. இப்பயங்கர ஆட்சியின் போது பாரிஸ் நகரில் சுமார் 5,000 பேர் சிரச்சேதம் செய்யப்பட்டதாக மதிப்பிடப்படுகிறது. இப்பயங்கரம் பிற மாநிலங்களிலும் நடைபெற்றது. லியான் நகரம் புரட்சி அரசை எதிர்க்கும் முயற்சிக்கு ஆயத்தமானதால், முழுமையாகத் தரைமட்டமாக்கப் பட்டது. அங்கு வாழ்ந்த மக்கள் அனைவரும் கொல்லப் பட்டனர். நான்டே மாவட்டத்தில் (Nantes) ஜகோபியனான காரியர் (Carrier) என்பவனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15,000 ஆகும்.

பயங்கர ஆட்சியின் போது புரட்சியாளர்களிடையே நிலவிய பகைமையினால் தீவிரவாதக் குழுக்கள் ஒன்றை ஒன்று வெட்டிச் சாய்த்தன. ஜிரோண்டியர்கள் ஜகோபியர்களுடன் மோதினர். ஜிரோண்டியரான கார்டே (Corday) என்பவரால் மாரட் கொல்லப்பட்டார். சிறிது மிதவாதப் போக்குக் கொண்டதால் டான்டனும், டெஸ்மோலினும் கொல்லப்பட்டனர். பயங்கர ஆட்சியின் தலைவரான ராபஸ்பியரும், தூய ஜஸ்ட்டும் 1794 ஜுலை 28 ஆம் நாள் கில்லாடினுக்கு இரையாயினர்.

ராபஸ்பியரின் மறைவு பயங்கர ஆட்சியையும் முடிவிற்குக் கொண்டு வந்தது. பயங்கர ஆட்சியின் நோக்கங்களான உள்நாட்டில் குடியரசு; வெளிநாட்டில் வெற்றி என்ற இலக்குகள் ஏற்கனவே எட்டப்பட்டு விட்டன. பயங்கர ஆட்சியின் முடிவு தெர்மிடோரியன் ரிஆக்ஷன் (Thermidorian Reaction) என்றும் அறியப்படுகிறது. சந்தேகிக்கப்படுவோர் சட்டம் விலக்கப்பட்டது. புரட்சி நீதிமன்றம் ஒழிக்கப்பட்டது. தேசிய அரசியல் நிர்ணய சபையில் தீவிரவாதிகளின் செல்வாக்கு மறைந்து மிதவாதிகளின் செல்வாக்கு மலர்ந்தது. புதிய அரசியலமைப்பு 1795ல் செயல்படத் தொடங்கியது.

## புதிய அரசியலமைப்பின் அம்சங்கள்

1. இருசபை கொண்ட பாராளுமன்றம் உருவாக்கப்பட்டது. மறைமுகத் தேர்தல் மூலம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வகை செய்யப்பட்டது. கீழ்ச்சபை 500 உறுப்பினர்களையும், மேல்சபை 250 உறுப்பினர்களையும் கொண்டதாய் அமைந்தது. கீழ்ச்சபையால் கொண்டு வரப்படும் மசோதாக்கள் மேல் சபையில் ஆராயப்பட்டு இயற்றப்பட்டன.

2. ஆட்சித் துறை அதிகாரங்கள் ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய இயக்குனர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் பாராளுமன்றத்தால்

தேர்ந்தெடுக்கப்பட்டனர். அச்சபை மந்திரி சபையை உருவாக்கியது. சட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

## குடியரசு இராணுவ வல்லாட்சியாக மாற்றம்

1792ல் பிரகடனப்படுத்தப்பட்ட பிரெஞ்சு குடியரசு 1795ல் அரசியலமைப்பினை வடித்துச் செயல்படுத்தியது. அவ்வரசியலமைப்பு பெயரளவில் 1804 வரை செயல்பாட்டிலிருந்தது. ஆனால் இயக்குனர்களின் ஆட்சி 1799 வரை மட்டுமே நடைபெற்றது. நெப்போலியனின் எழுச்சி இயக்குனர் ஆட்சியை முடிவிற்குக் கொண்டு வந்தது.

இயக்குனர் அவை உறுப்பினர்களின் அனுபவமின்மையும், அவர்களிடையே நிலவிய ஆதிக்கப் போட்டியும் பொறாமையும் அதன் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணங்களாய் அமைந்தன. அதன் முக்கிய உறுப்பினர்களாய் இருந்தவர்கள் கர்னாட், லெட்டோரேனர் (Letourneur), லார்வேலியர் (Larevelliere), ரீவ்பெல் (Rewbell), பர்ராஸ் (Barras) ஆகியோராவர். ஐவரும் ஜகோபிய சங்கத்தவர்களேயாவர்.

சதிகளும் சூழ்ச்சிகளும் நிறைந்த காலகட்டமாக இயக்குனர் அவையின் ஆட்சிக் காலம் அமைந்தது. பாபேப் (Babeaf) என்ற பாரிஸ் தீவிரவாதியின் சதித் திட்டத்தினால் ஏழை பணக்காரரிடையே எதிர்ப்பு வலுத்தது. 1797ல் அச்சதி முறியடிக்கப்பட்டது. 1795ல் ஜகோபியர்களின் 'பாந்தியன் கழகம்' இயக்குனர் அவையின் செயல்பாட்டினை எதிர்த்தது. 'டிரியன்' என்ற தங்களது பத்திரிக்கை மூலம் இயக்குனர் அவையின் செயல்பாடுகளை இச்சங்கத்தினர் விமர்சித்தனர். 'சமத்துவக் குடியரசு' என்ற அமைப்பினை நிறுவி அரசுக்குத் தலைவலியாய் அமைந்தனர்.

இச்சூழ்நிலையின் பிரான்சின் நிதிநிலையிலும் குழப்பம் ஏற்பட்டது. பணவீக்கம் ஏற்பட்டது. ஊழல் மலிந்தது. தேசிய கடனுக்கு வட்டி கட்டுவது கூட இயலாது போயிற்று. இயக்குனர் அவை பணத்தினை விரயப்படுத்தியது. எனவே மக்களின் அதிருப்தி அதிகரித்தது.

இயக்குனர் குழுவிற்கும் சட்டமன்றத்திற்குமிடையே நல்லுறவு நிலவவில்லை. சமயத்துறைச் சிக்கலும் தலை தூக்கியது. கத்தோலிக்கத் திருச்சபை மீண்டும் மக்களிடையே செல்வாக்குப் பெற்றது.

நாட்டை விட்டு வெளியேறியவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டதால் புதிய பிரச்சனைகள் தோன்றின. அத்தோடு 1797ல் பாராளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் ஜகோபியர்கள் வெற்றி பெறவில்லை. மிதவாதிகளே அதிக இடங்களைப் பெற்றனர். இத்தகைய சூழல்கள் இயக்குனர் அவையின் செல்வாக்கினை ஆட்டம் காணச் செய்தன.

இயக்குனர் அவையின் வெளிநாட்டுக் கொள்கை மட்டுமே வெற்றிகரமான ஒன்றாக அமைந்தது. ஆஸ்திரியா, பிரிட்டன், சார்டினியா ஆகிய நாடுகளுடன் தொடர்ந்து நடைபெற்ற போர்களில் இயக்குனர் அவை வெற்றிக் கனியை எட்டியது. ரைன் பகுதிக்கு அனுப்பப்பட்ட படைப்பிரிவிற்கு பிச்குரு, ஜோர்டான், மொரியா ஆகியோரும், இத்தாலிக்கு அனுப்பப்பட்ட படைப் பிரிவிற்கு நெப்போலியன் போனபார்ட்டும் தளபதிகளாய் அனுப்பப்பட்டனர். நெப்போலியனால் சார்டினியா தோற்கடிக்கப்பட்டது. நீஸ், சவாய் ஆகியவை பிரான்சிற்குக் கிடைத்தன. தொடர்ந்து நெப்போலியன் ஆஸ்திரியப் படைகளைத் தாக்கி வெற்றி கண்டார். ஆஸ்திரியா 1797ல் நெப்போலியனுடன் காம்ப போமியா (Campo Formia) உடன்படிக்கையைச் செய்து கொண்டது. அதன்படி, ஆஸ்திரிய நெதர்லாந்தும், அயோனியன் தீவும் பிரான்சிற்குக் கிடைத்தன. இத்தாலியுடனான போரிலும், ஆஸ்திரியாவுடனுமான போரிலும் நெப்போலியன் பெற்ற வெற்றிகள் அவரது புகழை மக்களிடையே உயர்த்தின. எகிப்திற்கு எதிரான படையெடுப்பிற்கும் நெப்போலியன் தளபதியாக நியமிக்கப்பட்டார். எகிப்தைத் தாக்கி வீரதீரச் செயல்களில் ஈடுபட்டார். இராணுவ வீரர்களை ஊக்கப்படுத்த இவர் ஆற்றிய உரை அவரது புகழை மேலும் உயர்த்தின. எகிப்து மக்கள் மகிழும் வகையில் அவர்களது இசுலாமிய மதத்தைப் புகழ்ந்து உரையாற்றினார். இப்படையெடுப்பின் போது தான் இவரது இராணுவ அதிகாரியால் பண்டைய எகிப்திய வரலாற்று உண்மைகளைக் கண்டறியத் துணைபுரிந்த ஆதாரமான ரோசட்டா கல் கண்டறியப்பட்டது. நெப்போலியனின் சிரியா படையெடுப்பு பிரிட்டன் கடற்படைத் தளபதி நெல்சன் பிரபுவின் நைல் நதிப் போரால் முறியடிக்கப் பட்டது. நெப்போலியன் பிரான்ஸ் திரும்பினார். ஏற்கனவே வலுவிழந்து மக்கள் செல்வாக்கினை இழந்து காணப்பட்ட இயக்குனர் சபையைக் கவிழ்த்துவிட அதன் ஒரு உறுப்பினரான அபே சீயெஸ் என்பாருடன் இணைந்து சதி செய்தார். நெப்போலியனின் சொற்பொழிவுகளில் மயங்கிய மக்கள் அவருக்கு ஆதரவாக அணி திரண்டனர். செயிண்ட் கிளவ்டு என்ற இடத்தில் சட்டமன்றக் கூட்டம் நடைபெற்ற போது நெப்போலியன் ஆதரவாளர்கள் அதனைச் சூழ்ந்து கொண்டனர். இராணுவ வலிமை கொண்டு நெப்போலியன் சட்டமன்றத்தின் அதிகாரங்களைச் செயலிழக்கச் செய்தார். தன்னைத் தலைமைத் தளபதியாகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். புதிய அரசியலமைப்பின் படி நெப்போலியன் கான்சல்கள் ஆட்சியை அறிமுகப்படுத்தினார். அவரே முதல் கான்சல் ஆனார். பிரான்சில் இராணுவ வல்லாட்சி ஏற்பட்டது. புரட்சி முடிவடைந்து பிரான்சில் நெப்போலியனின் சகாப்தம் துவங்கியது.

# புரட்சியின் முக்கியத் தலைவர்கள் - ஒரு கண்ணோட்டம்

## மாரட் (Marat)

மருத்துவக் கல்வி கற்றவர் மாரட். இவரது மருத்துவச் சேவைக்கும், இயற்பியலில் இவர் ஆற்றிய பணிக்குமென ஸ்காட்லாந்தின் செயிண்ட் ஆன்ட்ரூ பல்கலைக் கழகத்தின் கௌரவப் பட்டத்தைப் பெற்றார். எஸ்டேட்ஸ் ஜெனரல் கூட்டப்பட்ட நிகழ்ச்சி மாரட்டைப் பொது அரசியலின் பால் ஈர்த்தது. 1789 லிருந்து 1792 வரை அபி டு பியூபில் இவர் மிகச் சிறந்த எழுத்தாளருமாவார். (Amidu Peuple) (மக்களின் நண்பன்) என்ற செய்திப் பத்திரிக்கையின் ஆசிரியராய்ப் பணிபுரிந்தார். தமது எழுத்துக்களால் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பினார். செல்வந்தர்கள் அனுபவித்த சிறப்புச் சலுகைகளைச் சாடினார். தன்னை எந்தக் கட்சியுடனும் இணைத்துக் கொள்ளாமல் உறுதியாகத் தமது கொள்கைகளை அடையப் பாடுபட்டார். மக்களிடையே செல்வாக்குப் பெற்ற தலைவராய்த் திகழ்ந்தார்.

## டான்டன் (Danton)

விவசாயக் குடும்பத்தில் பிறந்த டான்டன் சட்டம் பயின்றார். மிராபுவைப் போன்ற தாராளக் கருத்துக்கள் கொண்டவராயிருந்தார். மிகச் சிறந்த பேச்சாளர். 1790ல் மாரட், டெஸ்மோலின் ஆகியோருடன் சேர்ந்து கார்டிலியர் சங்கத்தை நிறுவினார். அரச குடும்பம், மன்னராட்சி ஆகியவற்றிற்கு எதிரான செயல்பாடுகளில் கார்டிலியர் சங்கம் செயல்படக் காரணமாகயிருந்தவர் இவரே. பாரிஸ் கம்யூனின் செல்வாக்கு மிக்க உறுப்பினரான இவர் குடியரசுக்கு ஆதரவான மக்கள் கருத்தைத் திரட்டுவதில் ஈடுபட்டார். துணிச்சலானவர் என்ற போதிலும் வெறியர் அல்ல.

## ராபஸ்பியர் (Robespierre)

மத்திய தரக் குடும்பத்தில் பிறந்த இவர் சட்டம் பயின்று வழக்கறிஞராகப் பணிபுரிந்தார். அவரது பிறந்த ஊரான அர்ராஸிஸ் (Arras) புகழ் மிக்கவராய் வாழ்ந்தார். ரூசோவின் எழுத்துக்கள் இவரை வெகுவாகக் கவர்ந்தது. 1789ல் கூடிய தேசிய மன்றத்தில் மூன்றாவது பிரிவினரின் பிரதிநிதியாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதல் முக்கிய முப்பது தீவிரவாதிகளுள் இவரும் ஒருவராவார். பின்னர் ஜகோபின் சங்கத்தில் உறுப்பினராகி அதன் தலைமைப் பொறுப்பினையும் பெற்றார். ஜகோபியர் சங்கத்தின் செயல்பாடுகள் அனைத்தும் 1791 லிருந்து இவராலேயே வழிநடத்தப்பட்டன. உழைப்பாளிகளின் உரிமைகளுக்குக் குரல் கொடுத்தார். பயங்கர ஆட்சியை பிரான்சில் கட்டவிழ்த்து விட்டவர் இவரே. நாட்டின் துரோகிகள் கடுமையாகத்



தண்டிக்கப்பட்டனர். நாட்டின் சர்வாதிகாரியாகத்
நியாயமானவை எனக் கருதினார். இவரது
தீவிரவாதிகளாலேயே வெறுக்கப்பட்டதால் ப
அரசியல் நிர்ணய சபையில் பயங்கர ஆட்சி
பேச்சு கலகத்தில் முடிந்தது. ராபஸ்பியரும் அ
என்பவரும் சிறையிலடைக்கப்பட்டனர். முடி
1794 ஜூலை 28ம் நாள் சிரச் சேதம் செய்யப்ப

அவரது பயங்கர ஆட்சியும், கடுமை
அரசியல் நிர்ணய சபையின் எதிர்ப்பும் அ
காரணமாயின.

## மிராபோ (Mirabeau)

பிரெஞ்சுப் புரட்சியின் தொடக்க க
மிராபோ ஆவார். கொடுமையான கு
மிராபோவின் இளமை வாழ்க்கை துன்பம்
கொண்டிருந்த மிராபோ தேசிய மன்றத்தி
அமர்ந்து செயல்பட வேண்டுமென்று
வேண்டுமென்றும் கூறினார். டென்
தலைமையில் எடுக்கப்பட்டது என்பது

ஆங்கிலேய அரசாட்சி முறை
எனவே மன்னரின் ஆதரவாளராய்
ஆனார். தேசிய மன்றத்திற்கும் மன்ன
ஏற்படுத்த இவர் மேற்கொண்ட முயற்
புரட்சியாளர்கள் ஆகிய இருசா
மனமுடைந்த நிலையில் தமது 42வ
இவரது வாழ்க்கை சிக்கலும் குழப்ப
தீய பழக்க வழக்கங்களும் இவரது
இவரை இளவயதில் இழந்தமை பி
என வரலாற்று நோக்கர்கள் கருத்

## செயிண்ட் ஜஸ்ட்

ராபஸ்பியரின் நண்பரா
பங்காற்றினார். பிரெஞ்சு மக்களி
துணைபுரிந்தன. இவரது பேச்சுக்
புரட்சி புதுப் பொலிவினைப் பெ
நாளில் இவரது தலையும் து
நண்பனுடனேயே மாண்டார்

தண்டிக்கப்பட்டனர். நாட்டின் சர்வாதிகாரியாகத் திகழ்ந்தார். தமது செயல்கள் நியாயமானவை எனக் கருதினார். இவரது வன்மையான செயல்கள் தீவிரவாதிகளாலேயே வெறுக்கப்பட்டதால் பகைவர்கள் பெருகினர். தேசிய அரசியல் நிர்ணய சபையில் பயங்கர ஆட்சியை நியாயப்படுத்தி இவர் பேசிய பேச்சு கலகத்தில் முடிந்தது. ராபஸ்பியரும் அவரது நண்பரான செயிண்ட் ஜஸ்ட் என்பவரும் சிறையிலடைக்கப்பட்டனர். முடிவில் விசாரணை எதுவும் இன்றி 1794 ஜூலை 28ம் நாள் சிரச் சேதம் செய்யப்பட்டார்.

அவரது பயங்கர ஆட்சியும், கடுமையான நடவடிக்கைகளும் தேசிய அரசியல் நிர்ணய சபையின் எதிர்ப்பும் அவரது தோல்விக்கும் மரணத்திற்கும் காரணமாயின.

## மிராபோ (Mirabeau)

பிரெஞ்சுப் புரட்சியின் தொடக்க கால நிகழ்ச்சிகளில் தலைமையேற்றவர் மிராபோ ஆவார். கொடுமையான குணம் கொண்ட தந்தைக்குப் பிறந்த மிராபோவின் இளமை வாழ்க்கை துன்பம் நிறைந்த ஒன்றாகும். புரட்சி எண்ணம் கொண்டிருந்த மிராபோ தேசிய மன்றத்தில் மூன்று பிரிவினரும் ஒரே சபையாக அமர்ந்து செயல்பட வேண்டுமென்றும் சமுதாய சமத்துவம் எட்டப்பட வேண்டுமென்றும் கூறினார். டென்னிஸ் மைதான உறுதிமொழி இவரது தலைமையில் எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆங்கிலேய அரசாட்சி முறை பிரான்சிற்கு உகந்த ஒன்றெனக் கூறினார். எனவே மன்னரின் ஆதரவாளராய்த் திகழ்ந்தார். ஜகோபியர்களின் எதிரி ஆனார். தேசிய மன்றத்திற்கும் மன்னருக்குமிடையே இணக்கமான உறவினை ஏற்படுத்த இவர் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. மன்னர் மற்றும் புரட்சியாளர்கள் ஆகிய இருசாராரின் அவநம்பிக்கைக்கு ஆளானார். மனமுடைந்த நிலையில் தமது 42வது வயதில் 1791 ஏப்ரல் 2ம் நாள் இறந்தார். இவரது வாழ்க்கை சிக்கலும் குழப்பமும் நிறைந்த ஒன்றாகும். கடன் சுமையும் தீய பழக்க வழக்கங்களும் இவரது செல்வாக்கு மறையக் காரணமாயிருந்தன. இவரை இளவயதில் இழந்தமை பிரெஞ்சு நாட்டிற்கு மிகப் பெரிய இழப்பாகும் என வரலாற்று நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## செயிண்ட் ஜஸ்ட்

ராபஸ்பியரின் நண்பரான ஜஸ்ட் பயங்கர ஆட்சியின் போது தீவிரமான பங்காற்றினார். பிரெஞ்சு மக்களிடையே தேசிய உணர்வு வளர இவரது பணிகள் துணைபுரிந்தன. இவரது பேச்சுக்களால் இராணுவ வீரர்கள் உத்வேகம் பெற்றனர். புரட்சி புதுப் பொலிவினைப் பெற்றது. ராபஸ்பியர் தலை துண்டிக்கப்பட்ட அதே நாளில் இவரது தலையும் துண்டிக்கப்பட்டது. நண்பனுடன் செயல்பட்டு நண்பனுடனேயே மாண்டார் செயிண்ட் ஜஸ்ட்.

# பிரெஞ்சுப் புரட்சியின் விளைவுகள்

இன்றைய இருபத்து ஒன்றாம் நூற்றாண்டிற்கும் பொருத்தமான தாரகக் கொள்கைகளான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய உயர்ந்த கருத்துக்களை உலகிற்கு வழங்கிய மிகப் பெரும் புரட்சி பிரெஞ்சுப் புரட்சியாகும்.

அதன் முக்கிய விளைவுகளாவன:

1. ஐரோப்பாவில் நிலைபெற்றிருந்த தெய்வீக உரிமைக் கோட்பாடு வரம்பற்ற முடியாட்சி ஆகிய அரசியல் கருத்துக்களை முடிவிற்குக் கொண்டு வந்தது. மக்களாட்சிக் கருத்துக்கள் துளிர்விடத் தொடங்கியது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கருத்தினை வலுப்பெறச் செய்தது. வன்மையான இறைமை மக்களிடம் புதைந்துள்ளது என்பதை இப்புரட்சி உணரச் செய்தது.

2. உலகின் பிற பகுதிகளில் பின்னாளில் நடைபெற்ற ஏனைய பல புரட்சிகளுக்கும் முன்னோடியாய் அமைந்தது இப்புரட்சியே ஆகும்.

3. மக்களின் உரிமைகள் மறுக்கப்பட முடியாதவை என்பதைத் தெளிவுபடுத்தியது.

4. தேசீய எண்ணம் பற்று ஆகியவை பற்றிய ஆழமான தெளிவான கருத்தினை மக்கள் அறிந்து கொள்ள இப்புரட்சி வழி அமைத்தது.

5. மனிதாபிமான அடிப்படையில் பல முற்போக்குச் சீர்திருத்தங்கள் பிரான்சில் அறிமுகப்படுத்தப்பட்டன. நிலமானிய முறை ஒழிக்கப்பட்டது; அடிமை முறை ஒழிக்கப்பட்டது; சிறைச் சாலைகள் சீரமைக்கப்பட்டன; மக்கள் நலன் பேணும் சட்டங்கள் இயற்றப்பட்டன; சமயப் பொறையுடைமை அறிமுகப் படுத்தப்பட்டது; சமயச் சார்பற்ற அரசு அறிமுகமானது; பெண்ணுரிமை பேணப்பட்டது; சமூக நீதி புத்துயிர் பெற்றது; கல்வியின் முக்கியத்துவம் நிலைநாட்டப்பட்டது.

6. கலை, இலக்கியம் புத்துயிர் பெற்றன. இலக்கியப் படைப்புக்களில் புரட்சிக் கருத்துக்களின் தாக்கம் எதிரொலித்தது. விக்டர் ஹியூகோவின் ‘லெஸ் மிசரபிள்ஸ்’ (Les Miserafles) என்ற நூலும், ஷெல்லி, வேர்ட்ஸ் வொர்த், கதே ஆகியோரின் படைப்புக்களிலும் புரட்சியின் தாக்கம் காணப்பட்டது.

7. பார்போன் மன்னர்களின் வல்லாட்சி முடிவடைந்தது. மக்களின் எண்ணம் போல் குடியாட்சி மலர்ந்தது.

8. புரட்சியின் விளைவாய் வணிகர்களின் பொருளாதார வலிமை கூடியது. அரசியலில் பங்குபெற வாய்ப்பினைப் பெற்றனர். அவர்களது சமுதாய அந்தஸ்து கூடியது.

9. விவசாயிகள் நீண்ட காலமாய் அனுபவித்த கட்டுப்பாடுகள் மற்றும் கொடுமைகளிலிருந்து விடுதலை பெற்றனர். சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தலைப்பட்டனர்.

10. மனித உரிமைகள் பேணப்பட வகை செய்தது. அரசை சமயத்துறையை விட மேலான ஒன்றென்பதை உறுதி செய்தது.

11. முற்போக்குக் கருத்துக்கள் தோன்றும் மையமாக பிரான்ஸ் திகழத் தொடங்கியது. அங்கு தோன்றும் புரட்சிக் கனல் ஐரோப்பிய நாடுகளில் பரவுவது தவிர்க்க முடியாத ஒன்றாயிற்று. பிரான்சுக்கு சளி பிடித்தால், ஐரோப்பிய நாடுகள் தும்மலிடும் என்பது உறுதியாயிற்று.

# 2.நெப்போலியன் போனபார்ட்

# (Napoleon Bonaparte)

உலக வரலாற்று ஏடுகளில் இடம் பெற்றுள்ள மாபெரும் வீரர்களில் குறிப்பிடத்தக்கவர் நெப்போலியன் போனபார்ட் ஆவார். கார்சிகா தீவிலுள்ள அஜசியோ (Ajaccio) என்னுமிடத்தில் 1769 ஆகஸ்ட் 15-ல் பிறந்தார். அவரது தந்தையார் சார்லஸ் போனபார்ட், தாயார் லெடிஷியா ரோமலினோ ஆகியோராவர். நெப்போலியன் சிறுவனாயிருந்த போதே தந்தையை இழந்தார். பிரய்ன் (Brienne) பாரிஸ் ஆகிய இடங்களிலுள்ள இராணுவப் பள்ளிகளில் அரசின் சலுகையுடன் கல்வி பெற்றார். கணிதம், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்கள் மீது ஆர்வம் மிகக் கொண்டார். தமது ஏழ்மை நிலையினை வெறுத்தார். செல்வந்தர்களின் குழந்தைகளே இவருடன் பயின்றனர். அவர்கள் இவரை இத்தாலிய நாட்டவன் என்று எள்ளி நகையாடினர். எனவே சிறுவயதிலேயே செல்வந்தர்கள் மீது வெறுப்புணர்வு கொண்டார். தான் பிறந்த நாடான கார்சிகாவை விடுதலை பெறச் செய்ய வேண்டுமென்று சிறு வயதில் விளைந்தார். இளமைக் காலத்தில் பிரான்ஸ் என்ற பெரியதொரு நாட்டின் புரட்சிப் போரில் கலந்து கொண்டார்.

## தொடக்க கால சாதனைகள்

பள்ளிப் படிப்பினை 16 வயதில் முடித்த பின்னர் பிரெஞ்சு துப்பாக்கிப் படைப் பிரிவில் 1785ல் துணை லெப்டினன்ட் பதவியைப் பெற்றார். 1793ல் டூலூன் (Toulon) பகுதியில் துப்பாக்கிப் படைப்பிரிவின் கமாண்டரானார். இதுவே நெப்போலியன் மேற்கொண்ட முதல் இராணுவப் படையெடுப்பாகும். டூலோனில் அவர் பெற்ற வெற்றி அவருக்கு பிரிகேடியர் ஜெனரல் என்ற உயர் பதவியைப் பெற்றுத் தந்தது. 1795ல் அரசியலமைப்புப் பேரவைக்கு முன்னே கூடிய பாரிஸ் நகரக் கலகக்காரர்களை அடக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அதனையும் செம்மையுற நிறைவேற்றினார்.

## புரட்சியும் நெப்போலியனும்

பிரெஞ்சுப் புரட்சி நெப்போலியனின் கவனத்தை ஈர்த்தது. ரூசோ, வால்டேர் ஆகியோரின் படைப்புக்களை நாட்டத்துடன் படித்து ஈர்க்கப்பட்ட நெப்போலியன் புரட்சியாளர்களின் ஆதரவாளரானார். பிரான்சின் பிடியிலிருந்து தான் பிறந்த மண் விடுதலை பெறும் இனிய நாளை ஆர்வத்துடன் எதிர் நோக்கினார். புரட்சி தீவிரமாகப் பரவியது. செப்டம்பர் படுகொலை நடந்தேறின. புரட்சியின் போக்கு, திறமையும், சாதனை படைக்க வேண்டுமென்ற உந்துதலும் கொண்ட இளைஞனான நெப்போலியனின் செயல்பாடுகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது.

## ஜோசப்பைனை மணத்தல் (1796)

1796ல் ஜோசப்பைன் என்ற அழகிய விதவையின் பால் மையல் கொண்டார். வசதியான குடும்பத்தவளான ஜோசப்பைன் அதிகாரிகள் மட்டத்தில் செல்வாக்குடையவராய் இருந்தார். இயற்கையிலேயே திறமையும் ஆற்றலும் மிக்க நங்கையான அவரை நெப்போலியன் மணம் செய்து கொண்டமை அவரது பிற்கால வளர்ச்சிக்கு ஆதாரமாய் அமைந்தது. போர் மற்றும் அரசியல் துறைகளின்பால் நெப்போலியனின் ஈடுபாட்டினைத் தூண்டியதில் ஜோசப்பைனின் பங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## இத்தாலியப் படையெடுப்பு (1796 - 1797)

1796 ஏப்ரல் முதல் 1797 ஏப்ரல் வரை நெப்போலியன் இத்தாலியப் படையெடுப்பில் ஈடுபட்டார். பிரெஞ்சுக் குடியரசுக்கு எதிராக பிரிட்டன், ஆஸ்திரியா, சார்டினியா ஆகிய நாடுகள் கூட்டிணைவினை ஏற்படுத்தின. அதனை முறியடிக்க பிரெஞ்சு குடியரசு முயற்சிகளை மேற்கொண்டது. ஆஸ்திரிய, சார்டினியப் படைகளுக்கு எதிரான போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு நெப்போலியனிடம் ஒப்படைக்கப்பட்டது. தலைமைத் தளபதி பொறுப்பினைத் திறமையுடன் செயல்படுத்தினார்.

ஆஸ்திரிய சார்டினியக் கூட்டுப் படைகளை முறியடித்தார். ஆஸ்திரியப் படைகள் கிழக்கு நோக்கி ஓடின. சார்டினியப் படைகளைத் தொடர்ந்து சென்று தோற்கடித்து சவாய், நீஸ் ஆகிய இடங்களைப் பெற்றார். பின்னர் ஆஸ்திரியப் படைகளை முழுமையாகத் தோற்கடிக்க முற்பட்டார். துணிச்சலுடனும் தீரத்துடனும் 'லோடி' பாலத்தைக் கடந்து மான்வோ கோட்டையை முற்றுகையிட்டார். அர்க்கோலா, ரிவோலி ஆகிய போர்களில் ஆஸ்திரியப் படைகளைத் தோற்றோடச் செய்தார். மிலன் கைப்பற்றப்பட்டது. மிலன் மக்கள் இவரைத் தங்களின் விடுதலையாளர் என வரவேற்றனர். ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டிலிருந்து அது முழுமையாக விடுவிக்கப்பட்டது. இத்தாலியில் சுதந்திரம், சமத்துவம், தேசியம் ஆகியவற்றை நிலைநாட்டப் போவதாக நெப்போலியன் அறிவித்தார். மொடினா, ரெசியோ மற்றும் போலக்னா, பெர்ரா ஆகிய போப்பின் நகரங்களடங்கிய சிறியதோர் பிரதிநிதித்துவக் குடியரசினை உருவாக்கினார்.

நெப்போலியனின் அதிவேகப் படை நடவடிக்கைகள் கண்டு அச்சமுற்ற ஆஸ்திரியா 1797 அக்டோபர் 17ல் காம்பபோமியா உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. ஆஸ்திரியா லம்பார்டியை வழங்கியது. ஜெனோவாவில் செல்வந்தர்கள் ஆட்சிக்கு முடிவு கட்டப்பட்டது. லம்பார்டி வெனிஷியாவின் ஒரு பகுதி, டிரான்ஸ்படேன் (Transpadane) அடங்கிய சிசால்பைன் குடியரசினை நெப்போலியன் உருவாக்கினார். இத்தாலி ஐக்கியத்தின் முதல்படி இதுவெனக் கருதப்படுகிறது. ஜெனோவா குடியரசு லிகூரியன் குடியரசு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இத்தாலியப் படையெடுப்பின் முடிவில் இத்தாலிய நாடுகளின் அரசியல் முறைகளை மாற்றியமைத்தார். மக்களாட்சி நிறுவனங்களை நிறுவினார். அவற்றை பிரெஞ்சு அரசின் கட்டுப்பாட்டில் இயங்கச் செய்தார். பிரான்சுக்கு சுமார் 300 மில்லியன் பிராங்குகள் கிடைத்தன. வரலாற்றுச் சிறப்புமிக்க கலைப் பொக்கிஷங்களுடன் பிரான்ஸ் திரும்பினார் நெப்போலியன். போப்புடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி அவிக்னான் பகுதியைப் பெற்றார். சில அரிய சிலைகளையும், கையெழுத்துப் பிரதிகளையும் போப்பிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்றார். இத்தாலியப் படையெடுப்பு நெப்போலியனின் வீரத்தை வெளிப்படுத்த வாய்ப்பாக அமைந்தது. அவரது உணர்வுபூர்வமான எழுச்சிமிகு பேச்சுக்களும் துரிதமாக முடிவெடுக்கும் பாங்கும் படை வீரர்களை வழி நடத்திய உத்திகளும் நெப்போலியன்பால் வீரர்கள் அன்பும் மதிப்பும் கொள்ளச் செய்தன. 'தி லிட்டில் கார்போரல்' (The Little Corporal) என்று அன்புடன் அழைக்கப்பட்டார்.

## எகிப்தியப் படையெடுப்பு

இங்கிலாந்து மட்டும் கூட்டிணைவில் தனித்து விடப்பட்டிருந்தது. அதனைப் பணிய வைக்கும் பொறுப்பும் நெப்போலியனிடம் ஒப்படைக்கப்பட்டது. இங்கிலாந்து ஏகாதிபத்திய நாடு. கீழை நாடுகளுடனான வணிகத்தால் செல்வம் கொழிக்கும் நாடு. ஆங்கிலக் கால்வாய் என்னும் இயற்கை அகழியால் பாதுகாப்பு மிகுந்து காணப்பட்டது. பிரிட்டனின் வணிகத்திற்கு இடையூறு செய்வதன் மூலம் அதன் வலிமைக்கு மறைமுகச் சவாலை ஏற்படுத்த நெப்போலியன் விழைந்தார். எகிப்தைக் கைப்பற்றுவதன் மூலம் அதனைச் சாதிக்க இயலுமென எண்ணினார். ஆங்கிலேயரின் எதிரியும் மைசூரின் அரச வம்சத்தவரான திப்பு சுல்தான் தனக்கு உதவும் படி பிரெஞ்சு அரசைக் கேட்டுக் கடிதம் எழுதியிருந்தார். இச்சூழ்நிலை எகிப்தியப் படையெடுப்பிற்குச் சரியான தருணமெனக் கருதப்பட்டது. அப்படையெடுப்பின் தலைமைப் பொறுப்பினை நெப்போலியனிடம் இயக்குநர் சபை ஒப்படைத்தது.

எகிப்து நோக்கி நெப்போலியன் படைகள் புறப்பட்டன. எகிப்தில் மாமுலுக்குகளை (Mamelukes) 1798ல் பிரமிட் போரில் நெப்போலியன் தோற்கடித்தார். எகிப்து முழுமையும் இவரிடம் சரணடைந்தது. பின்னர் கெய்ரோவிற்குள் நுழைந்தார். ஐரோப்பாவை முழுமையாகக் கைப்பற்றவும் இந்தியாவில் திப்பு சுல்தானுக்கு உதவி தமது நாட்டுப் பெருமையை நிலைநாட்டவும் நெப்போலியன் திட்டம் தீட்டினார். ஆனால் அவரது அத்திட்டம் இங்கிலாந்து கடற்படைத் தளபதி நெல்சனால் முறியடிக்கப்பட்டது. நைல் நதிப் போரில் நெப்போலியன் படைகள் தோற்கடிக்கப்பட்டன. தோல்வியால் மனம் தளர்ந்து நின்ற வீரர்களை உற்சாகப்படுத்தினார் நெப்போலியன். பிரான்சுடன் போர் அறிவிப்புச் செய்த துருக்கியைப் பழி தீர்க்க சிரியா வழியாகப் பயணப்பட்டார். காசா (Gaza), ஜாஃபா (Jaffa) ஆகிய இடங்களைக் கைப்பற்றினார். துருக்கியை சிட்னி ஸ்மித் தலைமையிலான ஆங்கிலக் கடற்படை பாதுகாத்து நின்றது. துணிந்து முன்னேறிய நெப்போலியன் படைகள் துருக்கிப் படைகளை அபோகிர் (Aboukir) என்னுமிடத்தில் 1799ல் தோற்கடித்தது. இங்கிலாந்துப் படைகளுடனான நேரடி மோதலைத் தவிர்க்க விரும்பிய நெப்போலியன் பிரான்ஸ் திரும்பினார். எகிப்தின் வெற்றியாளர் எனப் புகழப்பட்டார். எகிப்தில் அறிவியல் மற்றும் தொல்பொருள் ஆய்வுகளை மேற்கொண்டார். மெம்பிஸ் ஆலயமும், மோசஸ் கிணறுகளும் கண்டறியப் பட்டன. இத்தகைய சேவை காரணமாக நவீன எகிப்தின் தந்தை எனப் போற்றப்பட்டார்.

## இராணுவப் புரட்சி (The Coup d'etat-Nov.9th, 1799)

எகிப்தியப் படையெடுப்பில் ஈடுபட்டிருந்த காலகட்டத்தில் இயக்குநர் சபையின் நடவடிக்கைகளின் தரம் குறையத் தொடங்கியது. ஊழல்களும்

ஒழுக்கமின்மையும் மலிந்தன. எனவே அது மக்களிடையே படிப்படியாகச் செல்வாக்கினை இழந்து வந்தது. இதனைக் கேள்வியுற்ற நெப்போலியன் இராணுவப் புரட்சியின் மூலம் புதியதோர் நல்லாட்சியை ஏற்படுத்த விரும்பினார்.

1799, நவம்பர் ஒன்பதாம் நாள் நெப்போலியன் தனது நண்பர் அபி சியெஸ் (Abe Siyes), சகோதரர் லூசியன் போனபார்ட் மற்றும் சில உண்மையான ஆதரவாளராயிருந்த இராணுவ வீரர்களின் துணையுடன் இராணுவப் புரட்சியின் மூலம் அதிகாரங்களைக் கைப்பற்றினார். ஐநூற்றுவர் குழுவின் தலைவராயிருந்த இவரது சகோதரர் லூசியன் உதவி இவரது வெற்றியைச் சாத்தியமாக்கிற்று. அன்று மாலை இயக்குநர் அவை ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 1799 ஆம் ஆண்டின் புதிய அரசியலமைப்பின்படி மூன்று கவுன்சிலர்கள் கொண்ட சபையிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. சீயெஸ், டூகோஸ், நெப்போலியன் ஆகியோரே அந்த மூவராவர். குடியரசுக்குப் பற்றுறுதியுடன் இருப்பதாக உறுதிமொழி எடுத்தனர். இந்த இராணுவப் புரட்சி பிரான்சின் புதிய காலண்டர்படி புருமயர் (Brumaire) மாதத்தின் 18 ஆம் நாளில் நடைபெற்றது. எனவே 'புருமயர் புரட்சி' என்றும் அழைக்கப்பட்டது.

## 1799 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு

மூன்று கான்சல்கள் கொண்ட அமைப்பிடம் நிர்வாகப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டன. அவர்களது பதவிக்காலம் 10 ஆண்டுகளாகும். மூன்று கான்சல்களில் முதன்மைக் கான்சல் சிறப்பு அதிகாரங்கள் பெற்றவராவார். சட்டங்கள் இயற்றும் அதிகாரமும் சிவில் மற்றும் இராணுவ அதிகாரிகளை நியமனம் செய்யும் அதிகாரமும் அவருடைய சிறப்பு அதிகாரங்களாகும். கான்சுலர்களால் செனட் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அரசியலமைப்பு தொடர்பான தீர்மானங்களை செனட் மேற்கொண்டது. பொது வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டோரின் பட்டியலிலிருந்து டிரிபியுனேட் மற்றும் சட்டமன்றத்தினை செனட் சபை தேர்ந்தெடுத்தது. டிரிபியுனேட் சட்ட முன் வடிவினை விவாதித்தது. ஆனால் அதன் மீது வாக்கெடுப்பினை நடத்தும் அதிகாரத்தினைப் பெறவில்லை. சட்டமன்றம் வாக்கெடுப்பினை நடத்தியது. ஆனால் சட்ட முன்வடிவினை விவாதிக்க முடியாது. முதன்மைக் கான்சல் மட்டுமே சட்ட முன்வடிவினை முன்மொழியும் அதிகாரத்தினைப் பெற்றிருந்தார். இவ்வரசியலமைப்பு மக்கள் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

## இரண்டாவது இத்தாலியப் படையெடுப்பு (1800 - 1801)

எகிப்தியப் படையெடுப்பில் நெப்போலியன் ஈடுபட்டிருந்த போது இங்கிலாந்து, ஆஸ்திரியா, ரஷ்யா ஆகிய நாடுகள் பிரான்சிற்கு எதிரான இரண்டாவது கூட்டிணைவினை ஏற்படுத்தியிருந்தன. ஆனால் சிறிது

காலத்திலேயே ரஷ்யாவின் சார் பால் தம்மைக் கூட்டிணைவிலிருந்து விலக்கிக் கொண்டார். இயக்குநர் அவையில் நிலவிய குழப்பத்தினை சாதகமாக்கிக் கொண்டு ஆஸ்திரியா, இத்தாலியில் தான் இழந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்றியது. பிரெஞ்சுப் படைகளை அங்கிருந்து விரட்டியடித்தது. எனவே அவற்றை மீண்டும் கைப்பற்றும் முயற்சியாக 1800ல் இரண்டாம் முறையாக இத்தாலி மீது படையெடுப்பினை மேற்கொண்டார். 40,000 வீரர்களுடன் பனி மூடிக் கிடந்த ஆல்ப்ஸ் மலையை விரைந்து கடந்த நெப்போலியன் ஆஸ்திரிப் படைகளை மரங்கோ (Marengo) என்னுமிடத்தில் சந்தித்தார். 1800 ஜூன் மாதம் நடைபெற்ற இப்போரில் டெசிக்ஸ் (Desix) என்ற தளபதியின் தீரமான செயலினால் மாபெரும் வெற்றியைப் பெற்றார். மொரியோ தலைமையிலான மற்றொரு பிரெஞ்சுப் படை தென் ஜெர்மனியிலுள்ள கோஹன்லிண்டன் என்னுமிடத்தில் ஆஸ்திரியப் படைகளைத் தோற்றோடச் செய்தது. முடிவில் ஆஸ்திரியா அமைதிப் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தது. 1801ல் லூனவில் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. அதன்படி முன்னர் செய்து கொள்ளப்பட்ட காம்பபோமியா உடன்படிக்கை உறுதி செய்யப்பட்டது.

## ஆமியன்ஸ் உடன்படிக்கை (Treaty of Amiens) (1802)

கடல் வலிமையில் முதல் தர நாடாகத் திகழ்ந்த பிரிட்டன் பிரான்சுடனான தனது பகைமையின் காரணமாக பிரெஞ்சு சரக்குகளை ஏற்றுச் செல்வதாக சந்தேகத்தின் பேரில் பல ஐரோப்பிய நாட்டுக் கப்பல்களைச் சோதனையிட்டு வந்தது. இதனால் ஆத்திரமடைந்த ஸ்வீடன், டென்மார்க், ரஷ்யா ஆகிய நாடுகள் "ஆயுதமேந்திய வடதிசை நடுநிலை நாடுகள்" (Armed neutrals of the North) என்று ஒன்றிணைந்து இங்கிலாந்தின் தன்னிச்சையான போக்கினைக் கண்டித்தன. இந்நிலையில் நீண்ட காலம் நடைபெற்ற தொடர்ச்சியான போர்களினால் களைப்படைந்த இங்கிலாந்தும் பிரான்சும் 1802ல் ஆமியன்ஸ் சமாதான ஒப்பந்தத்தினைச் செய்து கொண்டன. அதன்படி,

1.சிலோன், டிரினிடாட் தவிர தான் சமீபத்தில் கைப்பற்றிய பிற அனைத்துக் குடியேற்றங்களையும் திருப்பித் தர சம்மதித்தது.

2. பிரான்சின் மீதான தனது கௌரவப் பட்டங்களை விட்டுக் கொடுத்தது.

3. மால்டாவை அதன் உரிமையாளரான நைட்ஸ் ஆப் செயின்ட் ஜான் (Knights of St.John) என்பவரிடம் ஒப்படைத்தது.

5. போப்பின் பகுதிகள் மற்றும் நேப்பிள்சிலிருந்து பிரான்ஸ் விலக வேண்டும்.

இவ்வொப்பந்தம் நெப்போலியனுக்கு அயலுறவுச் சிக்கலிலிருந்து தற்காலிக விடுதலையை அளித்தது. எனவே உள்நாட்டுச் சீர்திருத்தங்களில்

தனது கவனத்தைச் செலுத்த முடிந்தது. பிரிட்டனைப் பொறுத்த அளவில் அனைவரும் மகிழவும் ஆனால் ஒருவரும் பெருமைப்படாதிருக்கும் வகையிலும் அமைந்தது.

## நெப்போலியன் பேரரசராதல்

1799ல் கான்சுலேட் அரசை ஏற்படுத்தி முதன்மைக் கான்சலாகப் பதவியேற்ற நெப்போலியன் சிறிது காலத்திலேயே சிரியஸ், டூகோஸ் ஆகிய பிற இரண்டு கான்சல்களைப் பதவியை விட்டு நீக்கிவிட்டுத் தனது ஆதரவாளர்கள் இருவரை நியமித்தார். வெளிநாட்டுப் போர்களில் அவர் பெற்ற வெற்றிகளும், உள்நாட்டில் அவர் மேற்கொண்ட பல்வேறு சீர்திருத்தங்களும் மக்களிடையே வரவேற்பினைப் பெற்றன. இச்சூழ்நிலையில் 1802ல் கான்சல் பதவியின் பதவிக் காலத்தை 10 ஆண்டுகள் என்பதிலிருந்து ஆயுட்காலம் வரையிலான ஒன்றாக நீட்டிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்தார். இத்தீர்மானம் கூடுதல் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது. இவரது செல்வாக்கினைக் கண்டு பொறாமை கொண்டோர் இவரைத் தீர்த்துக்கட்ட சதித் திட்டங்களைத் தீட்டினர். அத்தகைய சதி முயற்சிகளனைத்தும் இவரது பெயரும் புகழும் உச்சத்தை எட்டக் காரணமாயின. 1804 மே மாதத்தில் செனட் சபை நெப்போலியனை அரசராக்குவதற்கான தீர்மானத்தை விவாதித்தது. பின்னர் அது மக்கள் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. ஐந்து மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் ஆதர்வாகவும் சுமார் இரண்டாயிரம் பேர் எதிராகவும் வாக்களித்தனர். நாட்ர டேம் (Notre Dame) திருச்சபையில் போப் ஏழாம் பயஸ் என்பவரால் 1804 டிசம்பர் 2ல் நெப்போலியன் பிரெஞ்சுப் பேரரசர் என்று முடி சூட்டப்பட்டார்.

## நெப்போலியனின் போர்கள்

ஆமியன்ஸ் உடன்படிக்கை தற்காலிகப் போர் நிறுத்த ஒப்பந்தம் போலாயிற்று. அதன் ஏற்பாடுகளை பிரிட்டனும் பிரான்சும் செயல்படுத்தத் தயங்கின. மால்டாவை இங்கிலாந்து முழுமையாக விட்டுக் கொடுக்க மறுத்தது. பார்போன் வம்ச அரச குடும்பத்தவர்களுக்கு அடைக்கலம் தந்தது. இதனால் நெப்போலியன் இங்கிலாந்து மீது கோபம் கொண்டார். ஆங்கிலக் கால்வாயின் இரு கரைகளிலும் பிரிட்டிஷ், பிரெஞ்சுப் படைகள் எதிரெதிரே 18 மாதங்கள் நின்றன. எனினும் போர் தொடங்கத் தயக்கம் காட்டின. நெல்சனின் தலைமையிலான ஆங்கிலக் கடற்படையை எதிர்க்க நெப்போலியன் தயாராகவில்லை. நெப்போலியன் சுங்க வரிகளை விதித்ததையும், ஆங்கில வணிகத்திற்கு இடையூறுகள் செய்ததையும் பிரிட்டன் வெறுத்தது. அத்தோடு பியட்மான்டை நெப்போலியன் இணைத்துக் கொண்டமையும் ஹாலந்தைக் கைப்பற்றியமையும் பிரிட்டனின் வெறுப்பை அதிகப்படுத்தின. சுவிட்சர்லாந்து நாட்டின் உள்நாட்டு விஷயங்களிலும் நெப்போலியன் மேற்கொண்ட தலையீடுகள் பிரிட்டனால் கண்டிக்கப்பட்டன. எனவே ஆமியன்ஸ்

உடன்படிக்கை செயலற்றதாகியது. 1803ல் இரு நாடுகளுக்குமிடையே மீண்டும் போர் தொடங்கியது.

ஆங்கிலேயரின் பரம்பரைச் சொத்தான ஜெர்மனியிலுள்ள ஹனோவர் நெப்போலியனால் கைப்பற்றப்பட்டது. அதன் துறைமுகங்களை பிரிட்டிஷ் கப்பல்களுக்கு மூடிவிடவும் நெப்போலியன் உத்தரவிட்டார். போலக்னாவை மைய இடமாகக் கொண்டு இங்கிலாந்திற்கு எதிரான கடற்படைப் போருக்கு ஆயத்தங்கள் மேற்கொண்டார். ஆனால் 1805ல் நடைபெற்ற 'டிரபால்கர்' போரில் பிரெஞ்சுப் படைகள் ஆங்கில கடற்படைத் தளபதி நெல்சனால் தோற்கடிக்கப்பட்டன. இத்தோல்வி பிரான்சின் கடற்படையின் திறமையின்மையை வெளிப்படுத்தியது.

இப்போர் நடைபெறுவதற்கு முன்னரே 1804ல் இங்கிலாந்து பிரதம மந்திரி பிட் ஆஸ்திரியா, ரஷ்யா ஆகிய நாடுகளுடன் மூன்றாவது கூட்டிணைவினை ஏற்படுத்தியிருந்தார். ஸ்வீடனும், நேப்பிள்சும் அதன் பிற ஆதரவு நாடுகளாகும். டிராபல்கர் போரில் தோல்வியைத் தழுவிய பின்னர் தனது படை வலிமையை நன்கு உறுதி செய்து கொண்ட பின்னரே இங்கிலாந்துடன் போரிட வேண்டுமென்ற முடிவினை நெப்போலியன் மேற்கொண்டார். கூட்டிணைவின் பிற உறுப்பு நாடுகளை ஒன்றன்பின் ஒன்றாக வீழ்த்தி கூட்டிணைவினைப் பலமிழக்கச் செய்ய வேண்டுமென விவேகமான முடிவிற்கு வந்தார்.

ஆஸ்திரியப் படைகளை உல்ம் (Ulm) என்னுமிடத்தில் நெப்போலியன் படைகள் தோற்கடித்தன. மற்றொரு ஆஸ்திரியப் படை தோற்றோடியது. ஆஸ்திரியப் பேரரசர் வியன்னாவிலிருந்து தப்பி இரஷ்யாவில் தஞ்சம் புகுந்தார். பின்னர் ஆஸ்திரிய ரஷ்யக் கூட்டுப் படைகளை 1805, டிசம்பர் 2-ல் ஆஸ்டர்லிட்ஸ் (Austerlitz) என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகள் தோற்கடித்தன. நெப்போலியனுக்கு எதிரான மூன்றாவது கூட்டிணைவு முறிந்தது. ஆஸ்திரிய மன்னர் இரண்டாம் பிரான்சிஸ் நெப்போலியனுடன் பிரஸ்பர்க் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி,

1. ஆஸ்திரியா வெனிஷியாவை இத்தாலியிடம் ஒப்படைத்தது.

2. நெப்போலியனை பிரான்சின் அரசராக அங்கீகரித்தார்.

3. டைரன், பவேரியாவிற்கு வழங்கப்பட்டது; மேற்கு ஜெர்மனியின் சில பகுதிகள் ஊட்டன்பர்க்கிற்கு வழங்கப்பட்டன.

4. பவேரியாவையும், ஊட்டன்பர்க்கையும் தனி இரண்டு நாடுகளாக ஆஸ்திரியா அங்கீகரித்தது.

இந்த மிகப் பெரிய வெற்றியின் பின்னர் நெப்போலியன் இரஷ்யப் படைகளை பிரீட்லேண்டு (Friedland) போரில் தோற்கடித்தார். சார் மன்னரை

டில்சிட் (Tilsit) என்னுமிடத்தில் சந்தித்தார். பீட்டர்ஸ்பர்க் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. அதன்படி, சில ஜெர்மானிய நாடுகளை பிரான்ஸ் பெற்றது. அவை ரைன் கூட்டிணைவுடன் இணைக்கப்பட்டன.

ஆஸ்டர்லிட்ஸில் நெப்போலியன் பெற்ற வெற்றியும் அதனைத் தொடர்ந்து அவரது செல்வாக்கின் வளர்ச்சியும் இங்கிலாந்து பிரதம மந்திரியான பிட்டை அதிர்ச்சியடையச் செய்தது. "ஐரோப்பிய வரைபடத்தைச் சுருட்டி வையுங்கள்: அடுத்த பத்தாண்டுகளுக்கு அது தேவைப்படாது" என்று அவர் கூறினார்.

ஜெர்மனியில் புதிய இரண்டு நாடுகள் உருவாக்கப்பட்டமை பிரஷ்யாவால் சந்தேகக் கண்கொண்டு நோக்கப்பட்டது. ஐரோப்பா முழுமையும் தன்னடிப்படுத்த எண்ணும் நெப்போலியனின் தீவிர முயற்சியாக அதனை பிரஷ்ய மன்னர் மூன்றாம் பிரடெரிக் வில்லியம் கருதினார். எனவே பிரான்சிற்கு எதிராகப் போர் அறிவிப்பினைச் செய்தார். ஆனால் 1806ல் ஜேனா (Jena) மற்றும் ஆர்ஸ்டாட் (Auerstaot) ஆகிய இடங்களில் நடைபெற்ற போர்களில் பிரஷ்யப் படைகள் தோல்வியைத் தழுவின. பிரெஞ்சுப் படைகள் பெர்லின் நகரில் நுழைந்தன. பிரஷ்யாவின் பெரும்பாலான பகுதிகள் நெப்போலியன் வசமாயின. அவற்றில் இரண்டு புதிய நாடுகளை அவர் உருவாக்கினார். வெஸ்ட்பாலியா நாடு அவரது சகோதரர் ஜெரோமிற்கும், வார்சா சாக்சானியத் தேர்வாளருக்கும் வழங்கப்பட்டது.

மூன்றாவது கூட்டிணைவு சிதறுண்ட நிலையில் நெப்போலியனின் செல்வாக்கு உச்சத்தை எட்டியது. டில்சிட் உடன்படிக்கை அவரது வீரத்திற்கும், தீரத்திற்கும் கிடைத்த மிகப் பெரிய பரிசாக அமைந்தது. ஐரோப்பாவில் நெப்போலியனை எதிர்க்கும் துணிச்சல் கொண்டவர் எவருமில்லை. ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை மாற்றியமைக்கும் முழு உரிமையைப் பெற்றவராய் நெப்போலியன் திகழ்ந்தார். அவர் பல அரசியல ஏற்பாடுகளை மேற்கொண்டார். அவையாவன:

1. பிரான்சின் எல்லை விரிவடைந்தது. தெற்கில் போ (Po)விலிருந்து வடக்கே வடகடல் வரையிலும், மேற்கில் பிரனீசிலிருந்து (Pyrenees) கிழக்கில் போப்பின் நகரங்கள் வரையிலும் பரவிக் கிடந்தது.

2. நெப்போலியனே இத்தாலியின் அரசராகவும் திகழ்ந்தார். அதிலிருந்த வெனிஸ் ஆளுநர் ஒருவர் மூலம் ஆளப்பட வகை செய்யப்பட்டது.

3. நேபிள்ஸ் நெப்போலியனின் சகோதரர் ஜோசப்பால் ஆளப்பட்டது.

4. அவரது மற்றொரு சகோதரர் லூயியும் அவரது மகள் ஹார்டென்சும் முறையே ஹாலந்தின் அரசர், அரசியாக்கப்பட்டனர்.

5. அவரது சகோதரி எலிசா (Elise) லூக்காவின் இளவரசி ஆக்கப்பட்டார்.

6. வெஸ்ட்பாலியா மற்றொரு சகோதரர் ஜெரோமிடம் வழங்கப்பட்டது.

7. ஜெர்மனியில் புரட்சிகரமான மாறுதல்கள் புகுத்தப்பட்டன. அரசியல், சமூகத் துறைகளில் பழைய ஜெர்மானியப் பாரம்பரிய முறைகள் வழக்கொழிந்து போயின.

8. போர்களில் தோள் கொடுத்துத் துணைநின்ற பவேரியா, ஊட்டன்பர்க், சாக்சனி ஆகியவை தனி நாடுகள் என்ற அந்தஸ்தினையும் பேடன் மகா-டச்சி என்ற அந்தஸ்தினையும் பெற்றன.

9. 1806ல் நெப்போலியனின் விருப்பத்தினைப் பூர்த்தி செய்யும் முகமாக, பவேரியா, ஊட்டன்பர்க் நாடுகளின் மன்னர்களும், பேடன், ஹெசி-டாம்ஸ்டாட், பெர்க் ஆகிய பகுதிகளின் டியூக்குகளும், மெயின் பகுதியின் பிஷப்பும், ஒன்பது ஜெர்மானிய சிற்றரசர்களும் புனித ரோமானியப் பேரரசிலிருந்து பிரிந்து வந்தனர். பிரெஞ்சுப் பேரரசரின் பாதுகாப்பின் கீழ் அவை 'ரைன் கூட்டிணைவு' ஒன்றினை ஏற்படுத்தினார். இதனைத் தொடர்ந்து புனித ரோமானியப் பேரரசை அங்கீகரிக்க நெப்போலியன் மறுத்தார். எனவே பல நூற்றாண்டுகளாகத் தனது மூதாதையார் சூட்டி வந்த புனித ரோமானியப் பேரரசின் பெயரளவுத் தலைவர் பதவியைத் துறந்தார்.

10. 1808ல் பார்போன் வம்சத்து ஸ்பானிய அரசர் ஆறாம் சார்லஸைப் பதவி நீக்கம் செய்து விட்டு தனது சகோதரர் ஜோசப்பை அந்நாட்டு மன்னராக்கினார்.

தமது செல்வாக்கும் அரசியல் ஏற்பாடுகளும் நிலைநாட்டப்பட்ட நாடுகள் அனைத்திலும் நிலமானிய முறையினையும், அடிமை முறையையும் அறவே ஒழித்தார். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நிலை நிறுவப்பட்டது. 1799 நவம்பரில் இராணுவப் புரட்சி மூலம் அரசு அதிகாரங்களைக் கைப்பற்றிய நாளிலிருந்து 1808 வரை நெப்போலியனின் புகழும் பெருமையும் வியத்தகு வண்ணம் வளர்ந்தது. அவரே கூறிக் கொண்டது போன்ற அந்த ஒன்பது ஆண்டுகளில் அவர் "புரட்சியின் குழந்தையாய்" உருப்பெற்றார்.

## கண்டத் திட்டம் (Continental System)

நெப்போலியனுக்கு எதிராக ஐரோப்பிய நாடுகள் உருவாக்கிய மூன்று கூட்டிணைவிற்கும் காரணகர்த்தாவாக இருந்தது இங்கிலாந்து. மூன்று கூட்டிணைவுகளின் முதுகெலும்பையும் முறித்து விட்ட போதிலும் நெப்போலியனால் இங்கிலாந்தை முழுமையாக வெற்றி கொள்ள இயலவில்லை.

ஆஸ்திரியப் படைகளை உல்ம் போர்க்களத்திலும், ரஷ்ய-ஆஸ்திரிய கூட்டுப் படைகளை ஆஸ்டர்லிட்ஸ் போர்க்களத்திலும், பிரஷ்யப் படைகளை ஜினாவிலும், இரஷ்யப் படைகளை பிரிட்லாண்டு போர்க்களத்திலும் வெற்றி வாகை சூடி ஐரோப்பா முழுமையிலும் தனது செல்வாக்கினை நெப்போலியன் நிலைநாட்டினார். ஆனால் டிரபால்கர் போர்க்களத்தில் இங்கிலாந்து கடற்படைகளிடம் பெற்ற தோல்வி அவருக்கு மிகப் பெரும் நெருடலாய் நெஞ்சில் நிழலாடியது. இங்கிலாந்தையும் தன்னடிப்படுத்தினால் மட்டுமே தனது வெற்றிகள் முழுமை பெறும் என எண்ணினார். 28 மைல் அகலமுள்ள ஆங்கிலக் கால்வாயைத் தாண்டி பிரிட்டனுடன் போரிடுவது மிகச் சிக்கலான ஒன்றென நன்கு அறிந்திருந்தார். எனவே நேரடிப் போரின் மூலம் அல்லாத ஒருவகையான மறைமுகப் போரே உகந்ததெனக் கருதினார். விளைவாக அவரது சிந்தையில் தோன்றியதே கண்டத் திட்டம் என்னும் பொருளாதார மறுப்புத் திட்டம் என்று அறியப்பட்ட ஒரு புதிய திட்டமாகும். இங்கிலாந்து கடைக்காரர்களின் நாடு. அயல் நாட்டு வணிகத்தை நம்பியுள்ள நாடு. அதனுடைய அயல்நாட்டு வணிகத்தை அழித்துவிட்டால் அந்நாட்டின் இரத்த நாளங்கள் அறுந்து போகக் கூடும் என்பதே அவரது கணிப்பாக இருந்தது.

## கண்டத் திட்டம் செயல்படுத்தப்பட்ட விதம்

## 1. பெர்லின் கட்டளைகள் (Berlin Decrees) 1806 நவம்பர் 21

கண்டத் திட்டத்தின் முதல் நடவடிக்கையாக அமைந்தது பெர்லின் கட்டளைகளாகும். அதன்படி,

1. பிரிட்டிஷ் வணிகக் கப்பல்களை ஐரோப்பியத் துறைமுகங்களில் நுழைய அனுமதிக்கக் கூடாது.

2. பிரான்சும் அதன் நட்பு நாடுகளும் பிரிட்டானியப் பொருட்களை பகிஷ்கரிக்க வேண்டும்.

3. வணிகத்தில் ஈடுபடும் பிரிட்டானியக் கப்பல்கள் பறிமுதல் செய்யப்படும்.

4. இங்கிலாந்து துறைமுகங்களுக்குச் செல்லும் பிற நாட்டுக் கப்பல்கள் பறிமுதல் செய்யப்படும்.

பெர்லின் கட்டளைகளைக் கண்ணும் கருத்துமாய் செயல்படுத்தும் பொறுப்பினை தளபதி ஜூனாட் (Junot) என்பவரிடம் நெப்போலியன் ஒப்படைத்தார்.

## 2. பிரிட்டனின் கவுன்சில் ஆணைகள் (Orders-in-Council) - 1807, ஜனவரி 7

பெர்லின் ஆணைகளுக்குப் பதிலடியாக பிரிட்டானிய அரசு கவுன்சில் ஆணைகளை வெளியிட்டது. அதன்படி, 1.பிரான்ஸ் மற்றும் அதன் நட்பு நாடுகளின் துறைமுகங்கள் முற்றுமையிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. 2.பிற நாடுகள் அந்த நாடுகளுடன் வர்த்தக உறவு கொள்வதைத் தடை செய்வதாகவும் கூறியது.

## 3. வார்சா ஆணைகள் (Decrees at Warsaw) 1807 ஜனவரி, 25

இவ்வாணையின்படி நெப்போலியன் ஹன்சே நகரங்களில் பிரிட்டானியப் பொருட்களின் விற்பனையைத் தடை செய்தான்.

## 4. பிரிட்டனின் ஆணைகள்

பிரிட்டானிய அரசு தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த ஒரு ஆணையை வெளியிட்டது. அதன்படி,

1. பிரிட்டானியப் பொருட்கள் விற்கப்படுவதைத் தடை செய்துள்ள நாட்டு வணிகர்களின் மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

2. பிரான்ஸ் மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு சரக்குகளை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் அனைத்தும் இங்கிலாந்து துறைமுகங்களுக்கு வந்து பதிவு செய்து கொண்ட பின்னரே குறிப்பிட் இலக்குகளுக்குச் செல்ல வேண்டும்.

3. இங்கிலாந்துடன் நட்புறவு கொண்டுள்ள நாடுகளுக்குக் கூடுதல் சலுகைகள் வழங்கப்பட்டன.

## 5.மிலான் ஆணைகள் (Milan Decrees) 1807, டிசம்பர் 17

நெப்போலியனால் வெளியிடப்பட்ட மிலான் ஆணைகளின் படி, பிரிட்டானியத் துறைமுகங்களிலிருந்து பயணப்படும் நடுநிலை நாடுகளின் கப்பல்களும், பிரிட்டானிய இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள துறைமுகங்களிலிருந்து பயணப்படும் கப்பல்களும் பிரெஞ்சு கடற்படையாலும், தனியார் கப்பல்களாலும் பறிமுதல் செய்யப்படும்.

## 6. இங்கிலாந்தின் இரண்டாவது ஆணை (1808)

வர்த்தகப் போரான கண்டத் திட்டத்தின் உச்ச கட்டத்தில் வெளியிடப்பட்ட இவ்வாணை நடுநிலை நாடுகளின் வர்த்தகத்தைப் பாதிக்கும் வகையில் பற்பல கட்டுப்பாடுகளை விதித்தது.

## 7.டிரைனான் வணிகக் கட்டுப்பாடு (1810, ஆகஸ்ட் 5)

நெப்போலியன் வெளியிட்ட இவ்வாணையின்படி, பிரிட்டானியக் குடியேற்றங்களில் விற்கப்படும் கள்ளக் கடத்தல் பொருள்களின் மூலம் கிடைக்கும் மொத்த வருவாயில் 50 சதவிகிதத்தை அக்குடியேற்ற நாடுகள் பிரான்சிற்குச் செலுத்த வேண்டுமெனக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

## 8. பான்டெய்ன்புளு ஆணைகள் (Fontainbleau Decree) 1810, அக்டோபர்

கடல்களில் பயணப்படும் ஆங்கிலக் கப்பல்கள் அனைத்தையும் தீயிட்டுக் கொளுத்த நெப்போலியன் இவ்வாணையினை வெளியிட்டார். பிரான்சின் பிற ஆணைகளை மீறும் வணிகர்களைத் தண்டிக்கவும் இவ்வாணை வகை செய்தது.

## கண்டத் திட்டத்தின் ஆதரவாளர்கள்

டில்சிட் உடன்படிக்கையின் படி ரஷ்ய சார் மன்னரும், பிரஷ்ய மன்னரும் பிரிட்டானியப் பொருட்களைத் தங்கள் நாடுகளில் தடை செய்ய ஒப்புக் கொண்டனர். நெப்போலியனால் ஆட்சி செய்யப்பட்ட பிரான்ஸ், இத்தாலி, ரைன் கூட்டிணைவு, வார்சா மகாடச்சி ஆகிய நாடுகளில் கண்டத் திட்டத்தின் ஆணைகள் செயல்படுத்தப்பட்டன. நேபிள்ஸில் அவரது சகோதரர் ஜோசப்பும், வெஸ்ட்பாலியாவில் சகோதரர் ஜெரோமும், டஸ்கனியில் சகோதரி எலிசாவும், ஹாலந்தில் லூயியும் இதனைத் தீவிரமாகச் செயல்படுத்தினர். 1808ல் ஸ்வீடனுடன் நெப்போலியன் போர் தொடுத்ததுடன், ஸ்கான்டிநேவியத் துறைமுகங்கள் பிரிட்டானியக் கப்பலுக்கு மூடப்பட்டன. கண்டத்திட்டத்தை ஏற்றுச் செயல்பட மறுத்த போப் நெப்போலியனால் சிறைபிடிக்கப்பட்டார். 1809ல் போப்பின் பகுதிகளை பிரான்சுடன் இணைத்தார்.

## பிரிட்டன் - பிரான்ஸ் - வல்லமை ஒப்பீடு

கண்டத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட கால கட்டத்தில் அதன் மூலம் போரில் மோதிக் கொண்ட பிரிட்டனும் பிரான்சும் பெற்றிருந்த வல்லமை நிலையை ஒப்பிட்டுப் பார்த்தல் சுவையான ஒன்று.

பிரிட்டன் தனது கடல் வலிமையின் காரணமாகத் தன்னுடைய கவுன்சில் ஆணைகளை நடைமுறைப்படுத்துவதில் ஓரளவு வெற்றி கண்டது. நெப்போலியனால் தன்னுடைய பெர்லின் மிலான் ஆணைகளுக்கு முழுமையாக பிற நாடுகளை அடிபணிய வைக்க முடியவில்லை.

நடுநிலை நாடுகளுடனான உறவினைப் பொறுத்த அளவில் இரண்டு நாடுகளும் இடர்ப்பாடுகளை சந்தித்தன. டென்மார்க் தன்னுடைய சுதந்திரத் தன்மையை சிறிதும் பாதிப்படையாது காக்கப் போராடியது. பிரிட்டன் டென்மார்க்கிற்கு எதிராக கோபன்ஹேகனில் போரிடவே டென்மார்க் நெப்போலியனின் நட்பு நாடாகியது. வர்த்தக உரிமைகளில் தலையிடுவதை முன்னிறுத்தி அமெரிக்க ஐக்கிய நாடுகளும் பிரிட்டனுடன் பகைமை பாராட்டியது. முடிவில் இப்பிரச்சினை பிரிட்டனுக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குமிடையிலான 1812 ஆம் ஆண்டைய போருக்கான முக்கிய காரணமாயிற்று.

பிரிட்டனில் டோரி ஆட்சிக்கு மக்கள் முழுமையான ஆதரவினைக் கொடுத்தனர். எனவே நெப்போலியனின் வர்த்தகக் கட்டுப்பாடுகளைச் சமாளித்து அதிகம் பாதிப்படையாமல் மக்களை நடத்த முடிந்தது. ஆனால் நெப்போலியன் பல நாடுகளின் வர்த்தகம் பாதிப்படையும் வகையில் ஆணைகளைப் பிறப்பித்ததால், அவை ஒத்துழைப்புத் தரத் தயங்கின. முடிந்த அளவு மீறி நடக்க முயன்றன. எனவே எதிர்பார்த்த பலனைப் பெற இயலவில்லை.

## கண்டத் திட்டம் தோல்வியடையக் காரணங்கள்

1. நெப்போலியனின் பிடிவாதப் போக்கும் அடக்கு முறை முயற்சிகளும் விரைவில் கெடு பலன்களைத் தரத் துவங்கின. முதலில் கண்டத்திட்டத்தினை ஆதரித்த நாடுகளும் கூட சிறிது காலத்தில் வணிகத்தைப் பேணிக் காக்கும் நோக்குடன் ஒத்துழைக்க மறுத்தன.

2. ஹாலந்தை ஆட்சி செய்த நெப்போலியனின் சகோதரர் லூயி கண்டத் திட்டம் தன்னைத் தானே வணிக வறட்சிக்கு நாட்டை இட்டுச் செல்வதாகக் குறை கூறினார். எனவே பதவியை விட்டு விலக்கப்பட்டார். நெப்போலியனின் அத்தகைய அதிரடி நடவடிக்கைகள் நெப்போலியனின் நற்பெயருக்குக் களங்கமாய் அமைந்தது.

3. போப்பை சிறைக் கைதியாக்கியதில் கத்தோலிக்கரின் ஒட்டு மொத்த வெறுப்பினை சம்பாதித்தார்.

4. நெப்போலியனிடம் போதுமான கடற்படை வலிமை இல்லாதிருந்தது. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாக முடியாது என்பது போன்று தனது கடற்படையைச் சீர்திருத்தி வலிமை பெறச் செய்த போதிலும் பிரிட்டனுக்கு இணையானதாக அவரால் உருவாக்க இயலவில்லை. எனவே தனது பெர்லின், மிலான் ஆணைகளை மீறும் கப்பல்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை நெப்போலியனால் மேற்கொள்ள இயலவில்லை.

5. கண்டத் திட்டத்தின் கெடுபிடிகளால் சந்தையில் தேவை அதிகமிருந்த பொருட்கள் இரகசியமாகக் கடத்தப்பட்டன. அத்தகைய கள்ளக் கடத்தலால் பயன் பெற்றவர்கள் அரசோ பொதுமக்களோ அல்ல. இடைத் தரகர்களும் சட்டத்தைப் புறக்கணிப்பவர்களுமே ஆவர். எனவே மக்கள் கருத்து கண்டத் திட்டத்திற்கு எதிராகத் திரும்பியது.

6. பிரெஞ்சுப் படை வீரர்களுக்குத் தேவையான கம்பளி, காலணிகள் போன்றவற்றை பிரிட்டனிலிருந்து இறக்குமதி செய்து கொள்ள வழங்கப்பட்ட சிறப்புச் சலுகை கடுமையாக விமர்சிக்கப்பட்டது. தேசீயத்திற்கு விரோதமானது என கண்டிக்கப்பட்டது.

7. போர்ச்சுக்கல், இரஷ்யா ஆகியவை கண்டத் திட்டத்தைக் கடுமையாக எதிர்க்கத் தலைப்பட்டன. தங்களது வணிக வளர்ச்சிக்குத் தாங்களாகவே முட்டுக் கட்டை போட அவர்கள் விரும்பவில்லை.

8. பண மதிப்பு குறைந்தது; பொருட்களின் விலை ஏறியது. பொது மக்கள் அவதிக்குள்ளாயினர். எனவே கண்டத் திட்டம் மீறப்பட்டது.

இவ்வாறு இரு கூரான முனைகளைக் கொண்ட ஆயுதம் போன்று அமைந்த கண்டத் திட்டம் எதிரிகளைக் காயப்படுத்தியதை விட அதை ஏற்படுத்தியவரையே அதிகம் காயப்படுத்தியது. மக்களிடையே செல்வாக்கு குறைந்தது. பற்பல ஐரோப்பிய நாடுகள் நெப்போலியனின் ஆணைகளை மீறின. பிரிட்டன் எதிர்பார்த்த அளவு பாதிப்படையவில்லை. தனது குடியேற்ற நாடுகள் என்னும் குடையின் கீழ் பிரிட்டன் இளைப்பாறியது. ஹேசன் சொல்வது போல் "கண்டத் திட்டம் நெப்போலியன் சார்பில் செய்யப்பட்ட ஒரு மாபெரும் தவறு" என அமைந்தது. அவனுடைய வீழ்ச்சி என்றும் நாடகத்தின் தொடக்கக் காட்சியாக நெப்போலியனின் கண்டத் திட்டம் அமைந்தது. தீபகற்பப் போர், இரஷ்யாவுடனான போர் ஆகியவற்றிற்கான விஷவித்தினைக் கொண்டிருந்த கண்டத் திட்டம் நெப்போலியனின் தோல்வி என்னும் புதைகுழிக்கான பாதையை வகுத்தது எனலாம்.

## தீபகற்பப் போர் (Peninsular War) (1807 - 1814)

போர்ச்சுக்கல் மற்றும் ஸ்பெயின் நாடுகள் மீது நெப்போலியன் மேற்கொண்ட போர் தீபகற்பப் போர் என்றழைக்கப்படுகிறது.

### காரணங்கள்

1. போர்ச்சுக்கல் நீண்ட காலமாக பிரிட்டனுடன் வணிக உறவினைக் கொண்டிருந்தது. இலாபகரமான வணிகத்தை நெப்போலியனின் கண்டத் திட்டத்தால் இழந்து நின்றது. எனவே அதனை எதிர்க்கத் துணிந்தது. அடக்கு

முறை மற்றும் இராணுவ வலிமை கொண்டு கண்டத் திட்டத்தை செயல்படுத்த முயன்ற நெப்போலியன் போர்ச்சுக்கல் மீது படையெடுத்தார்.

2. போர்ச்சுக்கல் மீதான போருக்கென தனது படைகளை ஸ்பெயின் நிலப்பகுதி வழியாக நெப்போலியன் அனுப்பினார். அன்னிய நாட்டுப் படைகள் தங்கள் பகுதியில் அத்துமீறி இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஸ்பெயின் வன்மையாகக் கண்டித்தது. எனவே அதனையும் தண்டிக்க ஆதிக்க எண்ணம் கொண்ட நெப்போலியன் முடிவு செய்தார்.

## போக்கு

நெப்போலியனின் படைகள் போர்ச்சுகலைத் தாக்கின. அதன் தலைநகர் லிஸ்பன் கைப்பற்றப்பட்டது. அரச குடும்பத்தவர் நாட்டை விட்டு பிரேசில் சென்றனர். போர்ச்சுக்கலின் மீதான போரின் போது ஸ்பானியப் பகுதிகள் வழியாக பிரெஞ்சுப் படைகள் சென்றதைத் தங்கள் தேசியத்திற்கு விடப்பட்ட சவாலாக ஸ்பானிய மக்கள் கருதினர். தங்கள் மன்னனின் திறமையின்மையே காரணமெனக் கூறினர். எனவே ஸ்பெயினில் குழப்பம் ஏற்பட்டது. மன்னர் ஆறாம் சார்லசிற்கும் இளவரசன் பெர்டினன்டிற்குமிடையே கருத்து வேறுபாடு நிலவியது. அவர்களிடையே சமரசம் செய்யப் போவதாகக் கூறி அவர்கள் இருவரையும் நெப்போலியன் பிரான்சிற்கு வரவழைத்தார். மன்னரைப் பதவியிலிருந்து நீக்கினார். இளவரசனைச் சிறைப்படுத்தினார். ஸ்பானிய அரசராகத் தனது மூத்த சகோதரர் ஜோசப் போனார்ட்டை நியமித்தார்.

நெப்போலியனின் தந்திர சாகசமான இச்செயல்கள் ஏற்கனவே கொந்தளித்துப் போயிருந்த ஸ்பானிய மக்களின் தேசிய உணர்வினைத் தூண்டுவதாய் அமைந்தது. ஸ்பானிய மக்களனைவரும் ஓரணியாய் பிரான்சிற்கு எதிராய் எழுச்சி பெற்றனர்.

இந்நிலையில் நெப்போலியனின் எதிரியான இங்கிலாந்து ஸ்பெயினுக்கு உதவ முன்வந்தது. ஆர்தல் வெல்லெஸ்லி தலைமையில் பெரியதோர் படையை ஐபீரியத் தீபகற்பத்திற்கு அனுப்பியது. அப்படை பிரெஞ்சுப் படைகளை விமியரோ (Vimiero) என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் தோற்கடித்தது. ஸ்பானியர்களும் கொரில்லாப் போர் முறையைப் பின்பற்றி பிரெஞ்சுப் படைகளை அச்சப்படுத்தின. நிலைமையைச் சீர்செய்து பிரெஞ்சுப் படைகளை உத்வேகப்படுத்த நெப்போலியன் தானே தலைமையேற்று படையுடன் ஸ்பெயின் நுழைந்தார். ஸ்பெயினின் தலைநகரான மாட்ரிட் கைப்பற்றப்பட்டது. இந்நிலையில் ஜான் மூர் தலைமையில் மற்றொரு பிரெஞ்சுப் படை ஸ்பெயினுக்கு வந்தது. ஆனால் அப்படையையும் நெப்போலியன் தோற்றோடச் செய்தார். 1809ல் தாலவேரா (Talevera) என்னுமிடத்தில் பிரிட்டிஷ் படைகள் மோதின. வெல்லெஸ்லி வெற்றி பெற்றார். 1811-ல் பிரெஞ்சுப் படைகள்

போர்ச்சுக்கல்லிலிருந்து விரட்டடப்பட்டன. தொடர்ந்து நடைபெற்ற சாலமென்கா, விக்டோரியா ஆகிய போர்களிலும் பிரிட்டிஷ் படைகளே மாபெரும் வெற்றியைப் பெற்றன. பிரெஞ்சுப் படைகள் 1813ல் முழுமையுமாக பிரன்னீஸ் மலைகளுக்கு அப்பால் விரட்டி அடிக்கப்பட்டன. தீபகற்பப் போரில் நெப்போலியன் ஈடுபட்டிருந்த போதிலும் ஆஸ்திரியாவும், இரஷ்யாவும் பிரான்சின் மீதான போர் நடவடிக்கைகளை மேற்கொண்டதால் ஸ்பானிய எல்லையை விட்டு நெப்போலியனின் கவனம் திசை திரும்ப வேண்டியதாயிற்று. எனவே தீபகற்பப் போர் நெப்போலியனுக்குச் சாதகமாக முடியவில்லை.

## தோற்றமைக்கான காரணங்கள்

1. கண்டத் திட்டத்தின் மூலம் வணிகக் கட்டுப்பாடுகளை நெப்போலியன் விதித்தமை தீபகற்ப நாடுகளைத் தீவிரமாகப் போரிடத் தூண்டியது. தேசிய எண்ணம் கொண்ட ஸ்பானிய மக்கள் நெப்போலியனுக்கெதிராக எழுச்சிமிகு போரினை நடத்தினர். எனவே நெப்போலியனால் வெற்றி பெற இயலவில்லை.

2. தீபகற்ப நாடுகளுக்கு பிரிட்டன் வழங்கிய உதவி நெப்போலியனின் படைகள் தோற்றோட முக்கிய காரணமாயிற்று.

3. நெப்போலியன் தனது முழு கவனத்தையும் ஸ்பானியப் போரில் மட்டுமே செலுத்துவது இயலாது போயிற்று. சிக்கல்களுக்கிடையே சிக்கித் தவித்த நெப்போலியனால் இராணுவத்தை ஒருங்கிணைத்து வலுவான கரம் கொண்டு ஸ்பெயினுடன் போரிட இயலாது போயிற்று.

ஸ்பானிய குடற்புண் தன்னை அழிவிற்கு இட்டுச் சென்றதென நெப்போலியன் குறிப்பிட்டார்.

## விளைவுகள்

1. தேசிய எழுச்சியின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

2. அடக்கு முறை ஆட்சி நீண்ட காலம் நிலைத்திருக்க இலயாதென்பதைத் தெளிவுபடுத்தியது.

3. தேசிய எண்ணம் கொண்டு போரிடும் மக்கள் படையிடம் இராணுவச் செயல்பாடுகள் செல்லுபடியாகாதென்பது அறியப்பட்டது.

4. கொரில்லா போர்த் தந்திரம் வெற்றி பெற வழி வகுக்கும் என்பதையும் உலகம் உணர்ந்தது.

## ஆஸ்திரியாவுடனான போர் (1809)

ஸ்பெயினில் நெப்போலியன் அடைந்த தோல்வி பிற நாடுகளில் எதிரொலித்தது. நெப்போலியனை எதிர்ப்பதற்கான சந்தர்ப்பத்தினை எதி நோக்கியிருந்த ஆஸ்திரியா போருக்கான ஆயத்தங்களை மேற்கொள்ள தொடங்கியது. ஆஸ்திரிய அரசர் பிரான்சிஸ் போர் நடவடிக்கைகளுக்கா பொறுப்புக்களை ஆர்க்டியூக் சார்லஸ், கவுன்ட் ஸ்டேடியான் ஆகியோரிட ஒப்படைத்தார். அதனைத் தொடர்ந்து இராணுவச் சீர்திருத்தங்க மேற்கொள்ளப்பட்டன. மக்களிடையே தேசிய உணர்வு தூண்டி விடப்பட்டது நெப்போலியனின் கவனம் முழுமையாக ஸ்பானியச் சிக்கலில் திரும்பியிருந் போது 1809ல் ஆஸ்திரியா பிரான்சுடனான போர் அறிவிப்பினைச் செய்தது உடனடியாக ஆர்க்டியூக் சார்லஸ் பவேரியா நோக்கி முன்னேறினார். இதனைக் கேள்வியுற்ற நெப்போலியன் ஸ்பெயினிலிருந்த பிரெஞ்சுப் படைகளை ஆஸ்திரியா நோக்கிச் செலுத்தினார். ஆஸ்திரியப் படைகள் வியன்னாவிற்கு விரட்டியடிக்கப்பட்டன. பின்னர் ஆஸ்பெர்ன் என்ற இடத்தில் மே மாதம் நடைபெற்ற போரில் நெப்போலியன் படைகள் பின்வாங்கின. ஆனால் ஜூலை மாதம் வாக்ரம் (Wagram) என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் நெப்போலியன் ஆஸ்திரியப் படைகளைத் தோற்கடித்தார். முடிவில் 1809 அக்டோபரில் வியன்னா அல்லது ஸ்கான்பிரன் (Schonbrann) உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. அதன்படி, 1.ஆஸ்திரியா வார்சாவிற்கு மேற்கு கலிஷியாவையும், இரஷ்யாவிற்கு கிழக்கு கலிஷியாவையும் வழங்கச் சம்மதித்தது. 2.பிரான்சிற்கு இல்லீரியன் பகுதியை வழங்க வேண்டும். 3.பவேரியாவிற்கு டைரால் பகுதியைத் தர வேண்டும். 4.போர் இழப்பீடு வழங்க வேண்டும். 5.1,50,000 மேற்பட்ட படைவீரர்களை வைத்துக் கொள்ளக் கூடாது. 6.பிரிட்டனுடன் வணிக உறவு வைத்துக் கொள்ளக் கூடாது.

வியன்னா உடன்படிக்கை நெப்போலியனுக்குத் தெம்பூட்டுவதாய் அமைந்தது. அரச வம்சத்தவருடன் திருமண உறவு கொள்வதன் மூலம் தன்னையும் அரச வம்சத்தவராக காட்டிக் கொள்ள முடியுமென்ற அவாவினால் உந்தப்பட்ட நெப்போலியன் ஜோசபினை விவாகரத்து செய்து விட்டு, ஆஸ்திரிய அரசர் இரண்டாம் பிரான்சிசின் மகளான மரியா லூயிசாவை 1810ல் மணந்தார். இத்திருமண உறவின் மூலம் ஆஸ்திரியா பிரான்சுடன் நல்லுறவைப் பேணும் என்பதும், நெப்போலியனின் கணிப்பாயிருந்தது. ஆனால் ஆஸ்திரியா தொடர்ந்து நெப்போலியனுடன் பகைமையுணர்வே பாராட்டியது.

## பிரஷ்யாவில் எதிர்ப்பு அலை

நெப்போலியனின் அடக்கு முறைகளுக்குப் பல நாடுகளிலும் எதிர்ப்பு அலை வீசத் தொடங்கியது. ஜேனா போரில் பிரஷ்யப் படைகள் தோற்றமைக்கு

அரசரின் திறமையின்மையும் பிற்போக்கான கொள்கைகளுமே காரணம் எனக் குற்றம் சாட்டப்பட்டது. 1807 லிருந்து 1813 வரை பல்வேறு சீர்திருத்தங்கள் ஸ்டெயின் (Stein) ஹோர்டன்பர்க் (Hardenburg) ஆகியோரின் முயற்சியால் அறிமுகப்படுத்தப்பட்டன. அடிமை முறை ஒழிக்கப்பட்டது. நிலங்களை விவசாயிகளும் உரிமை கொண்டாட வழி ஏற்பட்டது. இங்கிலாந்து நாட்டில் காணப்படும் உள்ளாட்சி அமைப்பினைப் போன்ற உள்ளாட்சி முறை தொடங்கப்பட்டது. இராணுவம் சீரமைக்கப்பட்டது. நெப்போலியனைப் போன்று கட்டாய இராணுவ சேவையை அறிமுகப்படுத்தினர். மக்களிடையே தேசிய உணர்வு பரவலாகத் தூண்டப்பட்டது. கல்வித் துறைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. பெர்லின் பல்கலைக் கழகம் 1809ல் தொடங்கப்பட்டது. இத்தகைய சீர்திருத்தங்களை நெப்போலியன் கடுமையாக எதிர்த்தார். ஸ்பெயினிலும், ஆஸ்திரியாவிலும் தனது போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததால், பிரஷ்யாவின் தேசிய எழுச்சியை இரும்புக் கரம் கொண்டு அவரால் அடக்க இயலாது போயிற்று. எனவே எதிர்ப்பு அலை தொடர்ந்தது.

## இரஷ்யப் படையெடுப்பு (1812)

1807ல் ரஷ்ய சார் அலெக்சாண்டருக்கும் நெப்போலியனுக்குமிடையே கையெழுத்தான டில்சிட் உடன்படிக்கை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். அதன்படி, ஐரோப்பாவில் இவ்விரு அரசுகளும் தங்கள் செல்வாக்கை நிறைநிறுத்த ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதென முடிவு செய்தனர். ரஷ்யா கிழக்கு ஐரோப்பாவிலும், பிரான்ஸ் மத்திய மற்றும் மேற்கு ஐரோப்பாவிலும் செல்வாக்கு மிக்க நாடுகளாக எழுச்சி பெறக் கனவு கண்டன. ஆனால் காலப்போக்கில் ரஷ்யா தன்னால் கிழக்கு ஐரோப்பாவில் வலிமையை நிலைநாட்ட மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு பிரான்ஸ் முட்டுக்கட்டை போடுவதை உணர்ந்தது. அத்தோடு பிரான்சின் வலிமை வளர்ச்சிக்குத் தனது நாட்டின் ஒத்துழைப்பினை நெப்போலியன் தந்திரமாகப் பயன்படுத்திக் கொள்வதையும் அறிந்தது. அத்தோடு 1807 லிருந்து 1812 வரையிலான காலத்தில் நெப்போலியன் மேற்கொண்ட பல்வேறு செயல்கள் டில்சிட் உடன்படிக்கை உறுதி செய்த நல்லுறவினை முறிவடையச் செய்யும் வகையில் அமைந்தன. அவையாவன:

1. வார்சாவை நெப்போலியன் தனியொரு மகாடச்சியாக உருவாக்கியதை ரஷ்யா விரும்பவில்லை.

2. ஆஸ்திரிய அரச பரம்பரையுடன் நெப்போலியன் செய்து கொண்ட திருமண உறவு ரஷ்ய சார் மன்னரால் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்பட்டது. பிரான்ஸ் ஆஸ்திரியாவுடன் நெருங்கிச் செல்வதாகக் கருதினார்.

அரசரின் திறமையின்மையும் பிற்போக்கான கொள்கைகளுமே காரணம் எனக் குற்றம் சாட்டப்பட்டது. 1807 லிருந்து 1813 வரை பல்வேறு சீர்திருத்தங்கள் ஸ்டெயின் (Stein) ஹேர்டன்பர்க் (Hardenburg) ஆகியோரின் முயற்சியால் அறிமுகப்படுத்தப்பட்டன. அடிமை முறை ஒழிக்கப்பட்டது. நிலங்களை விவசாயிகளும் உரிமை கொண்டாட வழி ஏற்பட்டது. இங்கிலாந்து நாட்டில் காணப்படும் உள்ளாட்சி அமைப்பினைப் போன்ற உள்ளாட்சி முறை தொடங்கப்பட்டது. இராணுவம் சீரமைக்கப்பட்டது. நெப்போலியனைப் போன்று கட்டாய இராணுவ சேவையை அறிமுகப்படுத்தினர். மக்களிடையே தேசிய உணர்வு பரவலாகத் தூண்டப்பட்டது. கல்வித் துறைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. பெர்லின் பல்கலைக் கழகம் 1809ல் தொடங்கப்பட்டது. இத்தகைய சீர்திருத்தங்களை நெப்போலியன் கடுமையாக எதிர்த்தார். ஸ்பெயினிலும், ஆஸ்திரியாவிலும் தனது போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததால், பிரஷ்யாவின் தேசிய எழுச்சியை இரும்புக் கரம் கொண்டு அவரால் அடக்க இயலாது போயிற்று. எனவே எதிர்ப்பு அலை தொடர்ந்தது.

## இரஷ்யப் படையெடுப்பு (1812)

1807ல் ரஷ்ய சார் அலெக்சாண்டருக்கும் நெப்போலியனுக்குமிடையே கையெழுத்தான டில்சிட் உடன்படிக்கை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். அதன்படி, ஐரோப்பாவில் இவ்விரு அரசுகளும் தங்கள் செல்வாக்கை நிைநிறுத்த ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதென முடிவு செய்தனர். ரஷ்யா கிழக்கு ஐரோப்பாவிலும், பிரான்ஸ் மத்திய மற்றும் மேற்கு ஐரோப்பாவிலும் செல்வாக்கு மிக்க நாடுகளாக எழுச்சி பெறக் கனவு கண்டன. ஆனால் காலப்போக்கில் ரஷ்யா தன்னால் கிழக்கு ஐரோப்பாவில் வலிமையை நிலைநாட்ட மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு பிரான்ஸ் முட்டுக்கட்டை போடுவதை உணர்ந்தது. அத்தோடு பிரான்சின் வலிமை வளர்ச்சிக்குத் தனது நாட்டின் ஒத்துழைப்பினை நெப்போலியன் தந்திரமாகப் பயன்படுத்திக் கொள்வதையும் அறிந்தது. அத்தோடு 1807 லிருந்து 1812 வரையிலான காலத்தில் நெப்போலியன் மேற்கொண்ட பல்வேறு செயல்கள் டில்சிட் உடன்படிக்கை உறுதி செய்த நல்லுறவினை முறிவடையச் செய்யும் வகையில் அமைந்தன. அவையாவன:

1. வார்சாவை நெப்போலியன் தனியொரு மகாடச்சியாக உருவாக்கியதை ரஷ்யா விரும்பவில்லை.

2. ஆஸ்திரிய அரச பரம்பரையுடன் நெப்போலியன் செய்து கொண்ட திருமண உறவு ரஷ்ய சார் மன்னரால் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்பட்டது. பிரான்ஸ் ஆஸ்திரியாவுடன் நெருங்கிச் செல்வதாகக் கருதினார்.

3. ஆட்டோமன் துருக்கிய நாட்டுக்கு எதிராக ரஷ்யா மேற்கொ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு பிரான்ஸ் இடையூறுகளைத் தந்தது. புகாரெஸ்ட் உடன்படிக்கை மூலம் ரஷ்யா சலுகைகளைப் பெற்றது. போதிலும் அவ்வுடன்படிக்கை கையெழுத்திடப்பட்டு ரஷ்யாவின் தென் எ பிரத் (Preeth) ஆறு வரை விரிவடையக் காரணமாயிருந்தது பிரிட்ட ஆதரவேயன்றி பிரான்ஸ் வழங்கிய ஆதரவுக் கரம் அல்ல.

4. ஜெர்மானிய டச்சிகளில் ஒன்றும், தனது உறவின ஆளப்பட்டதுமான ஆல்டன்பர்க் டச்சியிலிருந்து தனது உறவினரைப ப நீக்கம் செய்து விட்டு அதனை பிரான்சுடன் நெப்போலியன் இணைத் கொண்டமை சார் மன்னரின் கோபத்தைத் தூண்டுவதாய் அமைந்தது.

5. ஆஸ்திரியாவிற்கு எதிராக நெப்போலியன் போரில் ஈடுபட்டிரு போது சார் மன்னர் காலம் தாழ்த்தியே உதவிப் படையை அனுப்பினார். என நெப்போலியன் அவர் மீது கோபம் கொண்டார்.

6. விவசாயத்தைப் பொருளாதாரத்தின் அடிப்படையாகக் கொண்டிரு நாடு இரஷ்யா. நெப்போலியனின் கண்டத் திட்டத்தால் பிரிட்டனுடனான அத வணிகம் பாதிப்படைந்தது. எனவே உள்நாட்டில் எதிர்ப்பு வலுத்தது. என படிப்படியாக கண்டத் திட்டத்திலிருந்து விலகிக் கொள்ள இரஷ்ய முடிவெடுத்தது. 1810 ஆம் ஆண்டு டிசம்பர் 13 ஆம் நாள் கண்ட திட்டத்திலிருந்து விலகிக் கொண்டதாக இரஷ்யா அறிவித்தது. நடுநிலை நாடுகளின் கப்பல்கள் தங்குவதற்குத் தனது துறைமுகங்களைத் திறந்து விட்டு இங்கிலாந்துடனான வணிக உறவைப் புதுப்பித்தது. இந்நிலையில் தனது கண்ட திட்டத்தைக் காப்பாற்ற அதனை மீறிய இரஷ்யாவுடன் போரிடுவதைத் தவி நெப்போலியனுக்கு வேறு வழி இல்லாது போயிற்று.

## இரஷ்யப் போர்

நெப்போலியன் மாபெரும் போருக்குத் தம்மை ஆயத்தப்படுத்தினா ஆஸ்திரியாவிடமிருந்து 30,000 இராணுவ வீரர்களைப் பெறத் தமது மனைவி மூலம் ஏற்பாடுகளைச் செய்து கொண்டார். பிரஷ்ய மன்னரிடமிருந்து 20,000 வீரர்களைப் பெற்றார். பிரஷ்ய நிலப்பகுதிகள் வழியே படைகள் ரஷ்யா செல்ல அனுமதியும் பெற்றார். 2,50,000 பிரெஞ்சு வீரர்கள், 1,50,00 ஜெர்மானியர், 80,000 இத்தாலியர், 60,000 போலந்து நாட்டவர், டச்சு, சுவிஸ், டேனியர் யூகோஸ்லாவியர் ஆகியோர் அடங்கிய மொத்தம் 6,00,000 இராணுவ வீரர்கள் கொண்ட இரஷ்யப் படை போருக்கு ஆயத்தமானது.

ரஷ்யாவும் போருக்கான ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டது. பிரிட்டனின் தலையீட்டின் மூலம் துருக்கியருடன் சமாதானம் செய்து கொண்டது. ஸ்வீடனின் மன்னராயிருந்த மார்ஷல் பெர்னடோட்டுடன் (நெப்போலியனின்

நம்பிக்கைகுகந்த தளபதியாகச் செயல்பட்டு பின்னாளில் நெப்போலியனால் பதவி நீக்கம் செய்யப்பட்டவர்) உடன்படிக்கை செய்து கொண்டது. அதன்படி ஸ்வீடனின் இராணுவ உதவியை இரஷ்யா பெற்றது. 1,75,000 வீரர்கள் கொண்ட இரஷ்யப் படை போருக்குக் குவிக்கப்பட்டது.

1812 ஜூன் மாதத்தில் நெப்போலியனின் படைகள் நீமென் ஆற்றைக் கடந்து இரஷ்யப் போரைத் தொடங்கின. ரஷ்யப் படைகளை விட எண்ணிக்கையிலும், கட்டுக்கோப்பிலும், ஆயுத இன்னபிற வசதிகளிலும் வலிமையான நிலையில் பிரெஞ்சுப் படைகள் காணப்பட்டன. நேரடித் தாக்குதலில் இரஷ்யப் படைகள் ஈடுபடவில்லை. மாறாக தங்களது நகரங்களையும், கட்டிடங்களையும், விளை நிலங்களையும் நாசம் செய்து கொண்டு பின் வாங்கிச் சென்றனர். மாஸ்கோ நோக்கி முன்னேறிய பிரெஞ்சுப் படைகள் உண்ண உணவின்றி, தங்க இடமின்றி அல்லலுற்றன. செப்டம்பரில் போரோடினோ **(Borodino)** என்ற இடத்தில் மட்டுமே போர் நடைபெற்றது. இரண்டு நாட்டுப் படைகளிலும் ஆட்சேதம் கடுமையானதாயிருந்தது. எனினும் அடுத்த ஒருவார காலத்தில், (செப்டம்பர் 14-ல்) பிரெஞ்சுப் படை மாஸ்கோ சென்றடைந்தது. நெப்போலியனின் ஆணையின் பேரில் மாஸ்கோ தரைமட்ட மாக்கப்பட்டது.

இரஷ்யர்களால் நாசம் செய்யப்பட்டது போக எஞ்சியிருந்தவை பிரெஞ்சு வீரர்களால் நாசம் செய்யப்பட்டன. தானியக் களஞ்சியங்கள் வெறுமையாய்க் காணப்பட்டன. கடுமையான குளிர் வீரர்களைக் கடுமையாய்த் துன்புறுத்தியது. உண்ண உணவின்றி கடுமையான உழைப்பின் முடிவில் குளிரில் பாதிக்கப்பட்டு பலர் உயிர் மாண்டனர். இரஷ்ய மன்னரை சந்தித்து உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டு நாடு திரும்ப வேண்டுமென எண்ணி, நெப்போலியன் ஐந்து வார காலம் மாஸ்கோவில் தங்கியிருந்தார். அதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. ஏமாற்றமடைந்த நெப்போலியன் அக்டோபர் 22 ஆம் நாள் மனவேதனையுடன் மாஸ்கோவிலிருந்து நீமென் ஆறு நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார். மழைக் காலம் இரஷ்யாவில் ஆரம்பித்தது. எனவே தூறல்களும், மழையும் குளிரில் வாடிய இராணுவத்தினரை மேலும் இம்சித்தது. வழியெங்கும் சிதறிய கட்டிடங்கள், கழிவுகள், பனிச் சரிவு, பனி மூடிய ஏரிகள் ஆகியவை மேலும் இராணுவத்தினரின் பயணத்தைத் தொல்லை மிகுந்ததாக்கியது. கடுமையான குளிரால் பலர் உயிரிழந்தனர். அவர்களை இரஷ்ய மண்ணுக்கு இரையாக்கிவிட்டு, எஞ்சியோர் அரைப்பட்டினியுடனும், கிழிந்த உடைகளுடனும் டிசம்பர் 13ல் ஜெர்மனியைச் சென்றடைந்தனர். அரை மில்லியன் வீரர்களை இப்படையெடுப்பால் பிரான்ஸ் இழந்தது. ரஷ்யப் படையெடுப்பு தோல்வியில் முடிந்தது.

## இரஷ்யப் போரில் தோற்றமைக்கான காரணங்கள்

1. ரஷ்யர்களின் கொரில்லா போர் முறை பற்றி நெப்போலியன் அக்கறை காட்டவில்லை. மிதமிஞ்சிய தன்னம்பிக்கையுடன் மாஸ்கோ சென்றடைந்தார்.

2. இரஷ்யாவின் கடும் குளிர் பிரெஞ்சுப் படைக்குத் தொல்லை தருவதாயிருந்தது. காலம் அறிந்து போர் அறிவிப்பினைச் செய்ய நெப்போலியன் தவறினார்.

3. மாஸ்கோவில் தனது நேரத்தை சுமார் 5 வார காலம் வீணடித்தார். எனவே குளிரோடு மழையும் சேர்ந்து கொண்டது. வீரர்கள் பலர் மாண்டனர்.

4. நாட்டுப் பற்றினால் உந்தப்பட்ட இரஷ்யர்களின் ஆவேச எதிர்ப்பு நெப்போலியனுக்குத் தோலவியை ஈட்டித் தந்தது.

5.நெப்போலியனின் ஐரோப்பிய அடக்குமுறை நடவடிக்கைகள் பல நாடுகளில் எதிர்க்கப்பட்டன. அவை நெப்போலியனின் வீழ்ச்சியை எதிர்நோக்கி இருந்தன. எனவே இரஷ்யாவிற்கு மறைமுக ஆதரவை வழங்கின.

6. வரலாறு கற்பித்த பாடத்தைப் புறக்கணித்து நெப்போலியன் விட்டில் பூச்சி போன்று மாஸ்கோ நோக்கி முன்னேறி தமது தோல்விக்குத் தாமே பெரிதும் காரணமானார்.

## நான்காவது கூட்டிணைவு (Fourth Coalition)

நெப்போலியனின் இரஷ்யப் படையெடுப்பு தோல்வியில் முடிவடைந்ததை அறிந்த ஐரோப்பிய நாடுகள் பிரான்சிற்கெதிராக நான்காவது கூட்டிணைவினை ஏற்படுத்தின. பிரிட்டன், இரஷ்யா, பிரஷ்யா, ஸ்வீடன், போர்ச்சுக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகள் இக்கூட்டிணைவில் இணைந்தன.

நெப்போலியன் பிரான்சில் அதிவிரைவாய் புதிய படை ஒன்றினைத் திரட்டினார். 1813, மே 2ஆம் நாள் இரஷ்ய பிரஷ்யக் கூட்டுப் படைகளை லட்சன் என்னுமிடத்தில் தோற்கடித்தார். மே, 20-21ல் பாட்சன் (Bautzen) என்னுமிடத்தில் நடைபெற்ற போரிலும் நெப்போலியன் வெற்றி பெற்றார். ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற டிரஸ்டென் (Dresden) போரிலும் நெப்போலியன் வென்றார். இதுவே இவரது இறுதி வெற்றியாகும். தொடர்ந்து நடைபெற்ற பல போர்களில் பிரெஞ்சுப் படைகள் தோல்வியைத் தழுவின. அக்டோபர் 16 முதல் 19 ஆம் நாள் வரை லெப்சிக் என்னுமிடத்தில் நடைபெற்ற 'நாடுகளின் போரில்' (Battle of the Nations), பிரெஞ்சுப் படைகள் கூட்டிணைவுப் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. இத்தோல்வி நெப்போலியனின் அதிகார வலிமையை முடிவிற்குக் கொண்டு வந்தது. அவரது பேரரசு சீட்டுக் கட்டுக்கள் போல் சரிந்தது. ரைன் கூட்டிணைவு

கலைக்கப்பட்டது. அதன் இளவரசர்களில் ஒருவர் தவிர அனைவரும் நான்காவது கூட்டிணைவில் இணைந்தனர். வெஸ்ட்பாலியாவிலிருந்து ஜெரோம் போனபார்ட் விரட்டியடிக்கப்பட்டார். ஹாலந்து விடுதலையடைந்தது. ஆரஞ்சு வில்லியம் மீண்டும் அதன் அரசரானார். கியெல் (Keil) உடன்படிக்கையின்படி டென்மார்க் சரணடைந்தது. நார்வேயை ஸ்வீடனுக்கு வழங்கச் சம்மதித்தது. அதற்கு ஈடாக ஸ்வீடிஷ் பொமரேனியாவையும் சிறிது பணத்தையும் பெற்றது. ஆஸ்திரியா டைரால், இல்லீயென் மாநிலங்கள், வெனிஷியா, சுவிஸ் ஆகியவற்றைப் பெற்றது. நெப்போலியனின் உறவினரான ஜோசிம் மூரத் (Joachim Murat) நேப்பிள்சைத் தக்க வைத்துக் கொள்ளும் எண்ணத்தில் ஆஸ்திரியாவுடன் சேர்ந்து கொண்டார். வார்சாவும், சாக்சனியும் மட்டுமே நெப்போலியனுடன் தொடர்ந்து நட்பு பாராட்டின.

தோல்வி மேல் தோல்வியை நெப்போலியன் சந்தித்த போதிலும் தொடர்ந்து இராணுவத்தினை வலிமைப்படுத்தினார். கூட்டிணைவு நாடுகளின் சமாதானப் பேச்சுகளுக்கு செவி சாய்க்க மறுத்தார். எனவே பிரான்ஸ் கூட்டிணைவுப் படைகளால் முற்றுகையிடப்பட்டது. 1814 மார்ச் முதல் நாள் இங்கிலாந்து, இரஷ்யா, ஆஸ்திரியா, பிரஷ்யா ஆகிய நான்கு முக்கிய நாடுகள் சௌமான்ட் உடன்படிக்கையைச் (Treaty of Chaumont) செய்து கொண்டன. அதன்படி, அவை அடுத்த 20 ஆண்டுகளுக்கு ஒருங்கிணைந்து செயல்படுவதென்றும், பொது எதிரியான நெப்போலியனைத் தோற்கடிப்பது வரை ஒன்றை ஒன்று கலந்தாலோசிக்காமல் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதில்லையென்றும், போரைத் தொடர்ந்து நடத்துவதென்றும் முடிவெடுத்தன. ஒவ்வொரு உறுப்பு நாடும் 1,50,000 வீரர்களை வழங்கச் சம்மதித்தது. இங்கிலாந்து 5 மில்லியன் பவுண்டை சிறப்பு உதவித் தொகையாக வழங்க முன்வந்தது.

இவ்வுடன்படிக்கை கையெழுத்தாகி ஒரு மாதத்திற்குள் 1814, மார்ச் 31ல் பாரிஸ் சரணடைந்தது. அடுத்த பதின்மூன்று நாட்கள் கழித்து நெப்போலியன் பான்டெய்ன்புளு உடன்படிக்கையை இந்நாடுகளுடன் கையெழுத்திட்டார். அதன்படி, 1.பிரெஞ்சு அரியணையைத் துறந்தார். 2.தனக்கும் தன் குடும்பத்தவர்களுக்கும் பிரான்சில் எந்த உரிமையும் இல்லை என ஒப்புக் கொண்டார். 3.எல்பா தீவு அவருக்கு வழங்கப்பட்டது. 4.2 மில்லியன் பிராங்குகள் ஆண்டு ஓய்வு ஊதியமாக வழங்கப்படும். 5.பார்மா, நெப்போலியனின் மனைவி மரியா லூயிக்கு வழங்கப்பட்டது. நெப்போலியனின் குடும்பத்தவர்களுக்கு 2½ மில்லியன் பிராங்குகள் ஓய்வூதியமாக வழங்க ஏற்பாடாகியது. அடுத்த ஒரு வார காலத்தில் தனது பழைய இராணுவத்திற்கு உருக்கமான பிரிவு உபசாரம் வழங்கிவிட்டு நெப்போலியன் எல்பாவிற்குப் பயணப்பட்டார்.

## நெப்போலியனின் நூறு நாட்கள்

பிரான்சை விட்டு நெப்போலியன் வெளியேறிய பின்னர் அமை திரும்பியது. பார்போன் வம்சத்தவரான பதினெட்டாம் லூயி மன்னராக்க பட்டார். புரட்சியாளர்களின் மூவர்ணக் கொடி புறக்கணிக்கப்பட்டது பார்போ மன்னர்களின் வெள்ளைக் கொடி அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியலமைப்பு சார்ந்த முடியாட்சி நிரந்தரமாக நிறுவப்பட்டது போ தோன்றியது. ஆனால் எல்பா தீவிலிருந்த நெப்போலியன் மனக் குறை மிகுந்தவனாகக் காணப்பட்டான். பத்து மாத காலம் நிம்மதியின்றிக் கழித்தா ஐரோப்பா முழுமையும் சுற்றி வந்த அந்த வீரனுக்கு எல்பா தீவு சிறியதோ களமாகக் காணப்பட்டது. பான்டைன்புளு உடன்படிக்கையின்படி அவனுக் வழங்கப்பட வேண்டிய நிதி வழங்கப்படாமலிருந்தது. தனது மனைவிக்கு மழலைக்கும் அனுப்பிய கடிதங்களுக்குப் பதில் கிடைக்காததால் அவை இலக்கினைச் சென்றடையவில்லை என ஐயமுற்றான். பிரான்சில் தேசியவாதிகள் புதிய ஏற்பாட்டினால் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என்பதையு அறிந்தான். ஐரோப்பிய நாடுகளிடையே வியன்னாவில் நடைபெற்ற அமைதி ஏற்பாடு தொடர்பான கூட்டங்களில் கருத்து வேறுபாடுகள் நிலவியது. எனவே அவை மீண்டும் ஒன்று சேர்ந்து வலிமையான எதிர்ப்பினைக் காட்டாது என கருதினான். மேலும், போர் என்று ஒன்று நடந்தாலும் ரஷ்யா, ஜெர்மனி ஸ்பெயின், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து திரும்பிவரும் பிரெஞ்சு ஸ்கதிகள் தனது படையுடன் இணைந்து தனது கரத்தை வலுப்படுத்துவர் என எதிர்பார்த்தான். எனவே, 1815ல் பிப்ரவரி 26-ம் நாள் 700 பேருடன் எல்பா தீவிலிருந்து தப்பி ஓடினான். மார்ச் 20ல் பாரிஸ் வந்தடைந்தான் நெப்போலியனின் வருகை பிரெஞ்சு மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது மார்ஷல் நே (Marshall Ney) உட்பட பலரும் நெப்போலியனுடன் சேர்ந்தனர் நாட்டை அழிவுச் சக்திகளிலிருந்து காப்பாற்றப் போவதாக நெப்போலியன் அறிவித்தார். 18 ஆம் லூயி தப்பி ஓடினார். பிரான்சில் ஏற்பட்ட இந்த திடீர் மாற்றம் ஐரோப்பிய நாடுகளை நிலைகுலையச் செய்தன. தாங்கள் ஒற்றுமையுடன் ஓரணியில் நின்று பிரான்சை தாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர்.

தாங்கள் செய்து கொண்ட பழைய கூட்டிணைவு ஒப்பந்ததைப் புதுப்பித்துக் கொண்டு போருக்குத் தயாராயின. பிரிட்டிஷ், டச்சு, ஜெர்மானிய, பிரஷ்ய, ஆஸ்திரியப் படைகள் கூட்டணிப் படையில் இடம் பெற்றன. இவர்களைத் தனித்தனியே சந்தித்து வீழ்த்த வேண்டுமென்ற திட்டத்துடன் 1815 ஜூன் 12 ஆம் நாள் நெப்போலியன் பாரிசை விட்டு 1,80,000 படை வீரர்களுடன் புறப்பட்டார். ஜூன் 18 ஆம் நாள் "வாட்டர்லூ" போர் நடைபெற்றது. நெப்போலியன் கலந்து கொண்ட கடைசிப் போர் இதுவாகும். நெப்போலியன் என்ற மாவீரனின் விதியை நிர்ணயித்த போரும் இதுவே. கூட்டணிப் படைகளிடம் பிரெஞ்சுப் படைகள் தோற்றன. தோல்வியில் துவண்ட

நெப்போலியன் ஜூன் 21ல் பாரிஸ் திரும்பினார். ஜூலை 7ல் கூட்டணிப் படைகள் பாரிசைக் கைப்பறறின. ஜூலை 15ல் (பாஸ்டைல் ஆண்டு தினம்) அமெரிக்காவில் தஞ்சம் புகும் நோக்கத்துடன் பாரிசை விட்டுச் சென்றார் நெப்போலியன். ஆனால் பிரிட்டானியர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. முடிவில் தென் அட்லாண்டிக் கடலில் அமைந்துள்ள செயிண்ட் ஹெலினா தீவிற்கு அனுப்பப்பட்டார். சுமார் 6 ஆண்டு காலம் தனது இறுதி நாட்களை நெப்போலியன் அத்தீவில் கழிக்க வேண்டியதாயிற்று. இறுதி வரை புரட்சிக் கருத்துக்களில் பிடிப்பு மிகுந்தவனாகத் திகழ்ந்தார். சீன் (Seine) நதிக் கரையில், பிரெஞ்சு மக்கள் முன்னிலையில் தனது இறுதிச் சடங்கு நடைபெற வேண்டுமென தமது உயிலில் குறிப்பிட்டிருந்தார். மாவீரன் நெப்போலியன், 1821 மே 5 ஆம் நாள் மறைந்தார்.

## நெப்போலியன் தோற்றமைக்கான காரணங்கள் - ஒரு கண்ணோட்டம்

உலகில் தோன்றி மறைந்த மிகச் சில மாவீரர்களில் ஒருவர் நெப்போலியனாவார். புரட்சி எழுச்சி பெற்ற மண்ணில் வாழ்ந்து உலகையே தன்னடிப்படுத்த வேண்டுமென்ற அகண்ட திட்டத்தைக் கொண்டிருந்த நெப்போலியன் முடிவில் பெரும் தோல்வியைச் சந்தித்தார். அதிகாரத்தின் உச்சகட்டத்தில் இருந்த காலத்தில் அவர் சுட்டிய இடங்களில் நாடுகள் உருவாயின; அவரது கடைக்கண் பார்வை கிடைக்கப் பெற்றோர் மன்னர்களாயினர். அத்தகைய புகழின் உச்சியையும் முகர்ந்தறிந்த நெப்போலியன் தான் மிகவும் காதலித்த பிரான்சையும் பிரெஞ்சு மக்களையும் விட்டுப் பிரிந்து தனித்ததொரு தீவில் மாண்டார் என்பது விதியின் வினோதமான விளையாட்டே. அதற்கான காரணங்களாவன:

### 1. பேராசை

சாதாரணக் குடும்பத்தில் பிறந்து அரசின் உதவி பெற்று கல்வி பயின்ற நெப்போலியனின் கனவு அவனது பேராசையின் எல்லையைக் காட்டியது. தனி மனிதனின் ஆற்றலுக்கு எல்லையுண்டு; ஆசைக்கும் எல்லை வகுத்துக் கொள்ள வேண்டுமென அவன் அறியாது போனான்.

### 2. இராணுவத்தின் தன்மை

நெப்போலியனின் படைகளில் இளைஞர்களே அதிகம் இருந்தனர். அத்தோடு இத்தாலியர், ஜெர்மானியர், டச்சுக்காரர்கள், ஸ்பானியர், டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவர், போலந்து நாட்டவர் என்று பல இன மக்களின் சங்கமமாய் அது அமைந்தது. எனவே ஒற்றுமை அங்கு நிலவாது போயிற்று.

## 3. கண்டத் திட்டம்

வணிகக் கட்டுப்பாடுகளை உள்ளடக்கியதாய் அமைந்த கண்டத் திட்டம் வணிக நோக்குடைய ஐரோப்பிய நாடுகளில் எதிர்ப்பினைச் சந்தித்தது. தங்களது பொருளியல் வாழ்வில் தலையிடுவதை பல நாட்டு மக்கள் வெறுத்தனர். எனவே மக்களிடையே அவரது புகழ் சரியத் தொடங்கியது.

## 4. ஸ்பானியப் படையெடுப்பு

கண்டத் திட்டத்தை எதிர்த்தமைக்காக போர்ச்சுக்கல் நாட்டுடன் போரைத் தொடங்கிய நெப்போலியன் ஸ்பானிய மக்களின் ஒட்டு மொத்த எதிர்ப்பையும் சந்திக்க வேண்டியதாயிற்று. தேசிய நோக்குடன் எழுச்சி பெறும் மக்கள் கூட்டத்தின் முன்னர் இராணுவ பலம் பொடிப்பொடியாகும் என்பதை நெப்போலியன் முதலில் அறியாது போனார். பின்னர் உணர நேர்ந்த போது காரியம் கைமீறிப் போயிற்று. அவர் கூறியது போல ஸ்பானியக் குடற்புண் அவரது வீழ்ச்சிக்கு வகை செய்தது.

## 5. ரஷ்யப் படையெடுப்பு

வரலாறு கற்பிக்கும் பாடத்தை ஏற்றுத் திட்டமிடாத எவரும் தோல்வியைத் தழுவுவர் என்பதை மாவீரன் நெப்போலியனின் ரஷ்யப் படையெடுப்பு உறுதி செய்தது. மாஸ்கோவிற்குள் நுழைந்த நெப்போலியன் தனது சரிவின் தொடக்கத்தைக் கண்கூடாகக் கண்டார். இராணுவம் சிதைந்தது.

## 6.குண நலன்கள்

மனிதாபிமானம் மிக்க நெப்போலியன் இளகிய மனம் கொண்டவராய் காணப்பட்டார். உறவுக்கும் நட்புக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பண்பு மிகுந்து காணப்பட்டது. தான் பெற்ற வெற்றியின் பலன்களை அவர்களுக்கும் வழங்கினார். ஆனால், நெப்போலியன் இக்கட்டான நிலையில் சிக்கித் தவித்த போது அவர்கள் நன்றியுணர்வின்றி நடந்து கொண்டனர். அவரது தளபதி பார்னடாட், மைத்துனர் ஆகியோர் நம்பிக்கை துரோகம் செய்தனர்.

## 7.போர் முறையின் குறைபாடுகள்

போர் நடவடிக்கைகளைத் துரிதமாக நடத்திச் செல்லும் திறம் மிக்கவராய் இருந்த போதிலும் எதிரிகளின் திட்டங்களுக்கு எதிர்த் திட்டங்கள் போடத் தவறினார். கொரில்லா போர் முறையை முறியடிக்கும் வழிமுறையைக் கண்டறியத் தவறினார்.

## 8. எதிரிகளின் பலம்

இங்கிலாந்தின் கடற்படை வலிமை நெப்போலியனுக்குப் பெரியதோர் சவாலாக அமைந்தது. வெல்லிங்டன் தளபதியிடம் நெப்போலியனின் இராணுவத் தந்திரங்கள் செலிழந்து போயின. வெலிங்டன், புளூச்சர் போன்ற சிறந்த தளபதிகள் இவரிடம் இல்லை.

## 9. புதிய நாடுகளை உருவாக்கியமை

நெப்போலியன் ஐரோப்பிய வரைபடத்தில் பற்பல மாற்றங்களைச் செய்தார். புதிய நாடுகளை உருவாக்கினார். குடியரசுகளை நிறுவினார். கூட்டமைப்புகளைத் தோற்றுவித்தார். அவ்வாறு அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது அப்பகுதிகளில் வாழ்ந்த மக்களின் தேசியத்தையோ, உள்ளுணர்வையோ கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறினார். எனவே அங்கு வாழ்ந்த மக்கள் அதனைத் தங்கள் மீது திணிக்கப்பட்ட ஏற்பாடாகக் கருதி தூக்கி எறியும் வாய்ப்பினை எதிர் நோக்கினர்.

## 10. பிரெஞ்சு மக்களின் அதிருப்தி

நெப்போலியனுக்கடியில் பிரான்ஸ் பரந்து விரிந்து காணப்பட்டது. சீர்திருத்தங்கள் பலவற்றை வழங்கி நல்லாட்சியினை நெப்போலியன் வழங்கிய போதிலும் அனைத்துப் பகுதிகளிலும் வாழ்ந்த பலதரப்பட்ட மக்களை அவரால் திருப்திப்படுத்த இயலவில்லை. எனவே நாளடைவில் மக்களின் எதிர்ப்பும் தோன்றியது.

## 11. போப் மீதான நடவடிக்கை

கிறித்துவ உலகின் தலைவராகவும், இறைவனின் அம்சமாகவும் கருதப்பட்ட போப்பை நெப்போலியன் அரசியல் நோக்கத்திற்காக சிறையிலடைத்தார். அத்தகைய அராஜகப் போக்கினால் கத்தோலிக்கர்களின் வெறுப்பினை ஈட்டினார்.

## 12. ஐரோப்பியக் கூட்டிணைவுகள்

நெப்போலியன் என்ற தனிமனிதனின் சாகசச் செயல் திட்டங்களால் அச்சமுற்ற ஐரோப்பிய நாடுகள் தங்களிடையே நிலவிய பகைமையை மறந்து ஒன்று திரண்டன. அத்தகைய ஒன்றுபட்ட பெரியதோர் படையின் முன் நெப்போலியனால் வெற்றி பெற இயலவில்லை. பீனிக்ஸ் பறவை போன்று மீண்டு எழுந்து 100 நாட்கள் அரசாட்சி செய்த போதிலும் வாட்டர்லூ போரில் கூட்டிணைவுப் படைகளை முறியடிக்க இயலாது போயிற்று.

ஆண்டவனின் படைப்பில் உன்னதப் படைப்பாகக் கருதப்படு மனிதப் படைப்பின் திறனுக்கும் செயல் வேகத்திற்கும் எல்லை உண்டென்பன நெப்போலியன் உணரவில்லை. சாதிக்க இயலாதவற்றையும் சாதிக்க வேண்டு என்ற உள்ளல் அவரிடையே கனலாய்க் கனன்றது. அந்நெருப்பே முடிவி அவரது தோல்விக்குக் காரணமாயிற்று. இராணுவ வலிமை கொண்டு அர அதிகாரத்தைக் கைப்பற்றிய நெப்போலியன் இராணுவ வலிமையிழந்த போ அவரது அதிகாரமும் மண்கோட்டை போன்று சரிந்தது. பல ஐரோப்பிய நாடுகள குறிப்பாக ஆஸ்திரியா பிற்போக்கான கருத்துக்களின் காவலனா செயல்பட்டதால் பல தொல்லைகளை நெப்போலியனுக்குக் கொடுத்து வந்தத ஒரே நேரத்தில் ஸ்பெயின், ஆஸ்திரியா, பிரஷ்யா, இரஷ்யா, இங்கிலாந்து என்ற பல பலமான எதிரிகளை எதிர்த்து நிற்க வேண்டிய சூழலில் நெப்போலியன் சிக்கினார். அத்தகைய சக்கர வியூகத்திலிருந்து மீண்டு வர வழியின்றி சிக்கித் தோற்றார்.

## நெப்போலியனின் உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்

1799ல் பிரான்சின் கான்சலாகவும், 1802ல் ஆயுட் காலத்திற்குமான முதன்மைக் கான்சலாகவும், 1804ல் அரசராகவும் படிப்படியாய் புகழின் உச்சத்தை எட்டியவர் நெப்போலியன். 1802ல் முதன்மைக் கான்சலாகப் பொறுப்பேற்ற பின்னர் பிரிட்டனுடன் ஆமியன்ஸ் உடன்படிக்கையைச் செய்தார். அதன் மூலம் வெளிநாட்டுப் போர்களிலிருந்து தம்மைத் தற்காலிகமாக விடுவித்துக் கொண்ட நெப்போலியன் உள்நாட்டுச் சீர்திருத்தங்கள் பலவற்றை மேற்கொண்டார். மிகச் சிறந்த இராணுவத் தளபதிக்கான இலக்கணங்களும் மிகச் சிறந்த ஆட்சியாளருக்குமான பண்புகளும் அவரிடம் ஒருங்கே காணப்பட்டன. அவரது இராணுவ வெற்றிகள் காலப்போக்கில் புகழ் மங்கிச் சென்றன என்ற போதிலும் அவரது சீர்திருத்தங்கள் உறுதியான பளிங்கின் மீது எழுப்பப்பட்டவை போன்று நின்று நிலைத்து அவரது புகழைப் பறைசாற்றின.

## நோக்கங்கள்

நெப்போலியனின் சீர்திருத்தங்கள் அனைத்தும் சில குறிப்பிட்ட நோக்கங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது. அவையாவன: 1.வன்முறைக் கலாசாரத்தை முடிவிற்குக் கொண்டு வந்து பொருளாதார, அரசியல் மற்றும் சமுதாய உறுதித் தன்மையை நிலைநாட்டுவது. 2.பழைய நிறுவனங்களை மாற்றிப் புதிய நிறுவனங்களை அமைத்துப் புரட்சியின் பலனை மக்கள் அடையச் செய்வது.

## 1. நிர்வாகத் துறை

பிரான்சின் நிர்வாகத் துறை சீரமைக்கப்பட்டது. அவரது நிர்வாகச் சீர்திருத்தத்தின் மையமாக அமைந்தது அதிகாரத்தினை மையப்படுத்துதலே

## 8. எதிரிகளின் பலம்

இங்கிலாந்தின் கடற்படை வலிமை நெப்போலியனுக்குப் பெரியதோர் சவாலாக அமைந்தது. வெல்லிங்டன் தளபதியிடம் நெப்போலியனின் இராணுவத் தந்திரங்கள் செலிழந்து போயின. வெலிங்டன், புளுச்சர் போன்ற சிறந்த தளபதிகள் இவரிடம் இல்லை.

## 9. புதிய நாடுகளை உருவாக்கியமை

நெப்போலியன் ஐரோப்பிய வரைபடத்தில் பற்பல மாற்றங்களைச் செய்தார். புதிய நாடுகளை உருவாக்கினார். குடியரசுகளை நிறுவினார். கூட்டமைப்புகளைத் தோற்றுவித்தார். அவ்வாறு அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது அப்பகுதிகளில் வாழ்ந்த மக்களின் தேசியத்தையோ, உள்ளுணர்வையோ கணக்கில் எடுத்துக் கொள்ளத் தவறினார். எனவே அங்கு வாழ்ந்த மக்கள் அதனைத் தங்கள் மீது திணிக்கப்பட்ட ஏற்பாடாகக் கருதி தூக்கி எறியும் வாய்ப்பினை எதிர், நோக்கினர்.

## 10. பிரெஞ்சு மக்களின் அதிருப்தி

நெப்போலியனுக்கடியில் பிரான்ஸ் பரந்து விரிந்து காணப்பட்டது. சீர்திருத்தங்கள் பலவற்றை வழங்கி நல்லாட்சியினை நெப்போலியன் வழங்கிய போதிலும் அனைத்துப் பகுதிகளிலும் வாழ்ந்த பலதரப்பட்ட மக்களை அவரால் திருப்திப்படுத்த இயலவில்லை. எனவே நாளடைவில் மக்களின் எதிர்ப்பும் தோன்றியது.

## 11. போப் மீதான நடவடிக்கை

கிறித்துவ உலகின் தலைவராகவும், இறைவனின் அம்சமாகவும் கருதப்பட்ட போப்பை நெப்போலியன் அரசியல் நோக்கத்திற்காக சிறையிலடைத்தார். அத்தகைய அராஜகப் போக்கினால் கத்தோலிக்கர்களின் வெறுப்பினை ஈட்டினார்.

## 12. ஐரோப்பியக் கூட்டிணைவுகள்

நெப்போலியன் என்ற தனிமனிதனின் சாகசச் செயல் திட்டங்களால் அச்சமுற்ற ஐரோப்பிய நாடுகள் தங்களிடையே நிலவிய பகைமையை மறந்து ஒன்று திரண்டன. அத்தகைய ஒன்றுபட்ட பெரியதோர் படையின் முன் நெப்போலியனால் வெற்றி பெற இயலவில்லை. பீனிக்ஸ் பறவை போன்று மீண்டு எழுந்து 100 நாட்கள் அரசாட்சி செய்த போதிலும் வாட்டர்லூ போரில் கூட்டிணைவுப் படைகளை முறியடிக்க இயலாது போயிற்று.

ஆண்டவனின் படைப்பில் உன்னதப் படைப்பாகக் கருதப்படும் மனிதப் படைப்பின் திறனுக்கும் செயல் வேகத்திற்கும் எல்லை உண்டென்பதை நெப்போலியன் உணரவில்லை. சாதிக்க இயலாதவற்றையும் சாதிக்க வேண்டும் என்ற உள்ளல் அவரிடையே கனலாய்க் கனன்றது. அந்நெருப்பே முடிவில் அவரது தோல்விக்குக் காரணமாயிற்று. இராணுவ வலிமை கொண்டு அரச அதிகாரத்தைக் கைப்பற்றிய நெப்போலியன் இராணுவ வலிமையிழந்த போது அவரது அதிகாரமும் மண்கோட்டை போன்று சரிந்தது. பல ஐரோப்பிய நாடுகள் குறிப்பாக ஆஸ்திரியா பிற்போக்கான கருத்துக்களின் காவலனாய் செயல்பட்டதால் பல தொல்லைகளை நெப்போலியனுக்குக் கொடுத்து வந்தது. ஒரே நேரத்தில் ஸ்பெயின், ஆஸ்திரியா, பிரஷ்யா, இரஷ்யா, இங்கிலாந்து என்ற பல பலமான எதிரிகளை எதிர்த்து நிற்க வேண்டிய சூழலில் நெப்போலியன் சிக்கினார். அத்தகைய சக்கர வியூகத்திலிருந்து மீண்டு வர வழியின்றி சிக்கித் தோற்றார்.

## நெப்போலியனின் உள்நாட்டுச் சீர்திருத்தங்கள்

1799ல் பிரான்சின் கான்சலாகவும், 1802ல் ஆயுட் காலத்திற்குமான முதன்மைக் கான்சலாகவும், 1804ல் அரசராகவும் படிப்படியாய் புகழின் உச்சத்தை எட்டியவர் நெப்போலியன். 1802ல் முதன்மைக் கான்சலாகப் பொறுப்பேற்ற பின்னர் பிரிட்டனுடன் ஆமியன்ஸ் உடன்படிக்கையைச் செய்தார். அதன் மூலம் வெளிநாட்டுப் போர்களிலிருந்து தம்மைத் தற்காலிகமாக விடுவித்துக் கொண்ட நெப்போலியன் உள்நாட்டுச் சீர்திருத்தங்கள் பலவற்றை மேற்கொண்டார். மிகச் சிறந்த இராணுவத் தளபதிக்கான இலக்கணங்களும் மிகச் சிறந்த ஆட்சியாளருக்குமான பண்புகளும் அவரிடம் ஒருங்கே காணப்பட்டன. அவரது இராணுவ வெற்றிகள் காலப்போக்கில் புகழ் மங்கிச் சென்றன என்ற போதிலும் அவரது சீர்திருத்தங்கள் உறுதியான பளிங்கின் மீது எழுப்பப்பட்டவை போன்று நின்று நிலைத்து அவரது புகழைப் பறைசாற்றின.

## நோக்கங்கள்

நெப்போலியனின் சீர்திருத்தங்கள் அனைத்தும் சில குறிப்பிட்ட நோக்கங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது. அவையாவன: 1.வன்முறைக் கலாசாரத்தை முடிவிற்குக் கொண்டு வந்து பொருளாதார, அரசியல் மற்றும் சமுதாய உறுதித் தன்மையை நிலைநாட்டுவது. 2.பழைய நிறுவனங்களை மாற்றிப் புதிய நிறுவனங்களை அமைத்துப் புரட்சியின் பலனை மக்கள் அடையச் செய்வது.

## 1. நிர்வாகத் துறை

பிரான்சின் நிர்வாகத் துறை சீரமைக்கப்பட்டது. அவரது நிர்வாகச் சீர்திருத்தத்தின் மையமாக அமைந்தது அதிகாரத்தினை மையப்படுத்துதலே

யாகும். புரட்சியின் விளைவாய் நாட்டில் நிலவிய வன்முறை மற்றும் கலவரம் ஆகியவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வண்ணம் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. நவீன பிரெஞ்சு ஆட்சி முறையின் அடித்தளமாக அவரது தல ஆட்சித் துறைச் சீர்திருத்தங்கள் அமைந்தன.

தல ஆட்சிப் பிரிவுகளாய் இருந்த டிபார்ட்மெண்ட்டுகள் மற்றும் சிறிய மாவட்டங்களான அராண்டிஸ்மென்ட்டுகள் ஆகியவற்றின் நிர்வாகப் பொறுப்புக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளிடமிருந்து விலக்கப்பட்டு முறையே பிரிபெக்ட்டுகள், துணை பிரிபெக்ட்டுகள் என்ற நெப்போலியனால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில்கள் தொடர்ந்து இயங்கின. ஆனால் அவை ஆண்டொன்றிற்கு சுமார் பதினைந்து நாட்கள் மட்டுமே கூடின. வரி மதிப்பீட்டினை மட்டுமே அவை செய்தன. பிரிபெக்ட்டுகள் கவுன்சில்களின் ஆலோசனைகளைக் கேட்டுப் பெறலாம். ஆனால் அவர்களைக் கவுன்சில்கள் கட்டுப்படுத்த முடியாது. நகரங்கள் மற்றும் கிராமங்களின் மேயர்கள் பிரிபெக்ட்டுகளாலோ அல்லது மைய அரசால் நேரடியாகவோ நியமிக்கப் பட்டனர்.

அரசின் தலைமைச் செயலகம் சிறப்பாக அமைக்கப்பட்டது. பல அமைச்சகங்கள் அங்கு அமைந்திருந்தன. அவை நெப்போலியனின் நேரடிக் கண்காணிப்பின் கீழ்ச் செயல்பட்டன. இத்தகைய மையப்படுத்தப்பட்ட நிர்வாக முறையினால் பொதுக் காரியங்களில் முடிவெடுப்பதில் மக்களின் பங்கு மிகக் குறைவாகவே இருந்தது. ஆனால் நாடு முழுமையும் சீராகவும் விரைவாகவும் அரசு ஆணைகள் செயல்படுத்தப்படுவதை அத்தகைய நிர்வாக முறை உறுதி செய்தது. ரிச்செல்யூவால் அறிமுகம் செய்யப்பட்டு 14 ஆம் லூயியின் காலத்தில் செயல்பட்ட நிர்வாக முறையை ஒத்தே நெப்போலியனின் சீர்திருத்தத்தின் முடிவில் நிர்வாக முறை அமைந்திருந்தது. அதன் தரமான செயல்பாடு காவல் துறை, தல இராணுவம், பத்திரிக்கைத் தணிக்கை முறை ஆகியவற்றின் துணையுடன் உறுதி செய்யப்பட்டது.

## 2. நிதித்துறை

நிதி நிலைச் சீர்கேடே, 1789ல் வரம்பற்ற முடியாட்சியின் முடிவிற்கும், 1799ல் இயக்குநர் அவையின் முடிவிற்கும் முக்கியமான காரணமாகும் என்பதை நன்கு அறிந்திருந்தார் நெப்போலியன். எனவே நிதிநிலையைச் சீரானதாக வைத்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தினார். வரி வசூலிக்கும் முறையினைச் சீரமைத்து நாட்டின் வருவாயைப் பெருக்கினார். சிக்கன நடவடிக்கைகள், தவறு செய்யும் அதிகாரிகளின் மீதான கடுமையான தண்டனை போன்ற செயல்களின் மூலம் நாட்டின் செலவினைக் கணிசமாகக் குறைத்தார். நிதிச் சீர்திருத்தங்களில் குறிப்பிடத்தக்கக ஒன்றாக அமைந்தது 1800ல்

நிறுவப்பட்ட பிரெஞ்சு வங்கியாகும். 1796ல் நிறுவப்பட்டிருந்த பழைய வங்கியின் (Bank of Current Accounts) பணிகள் விரிவுபடுத்தப்பட்டு, 1800ல் புது வங்கியாக மலர்ந்தது. அவ்வங்கி கடன்களை வசூலித்தது. பண முதலீடுகளைப் பெற்றது. புதிய வங்கிக் கணக்குகளைத் தொடங்கியது.

## 3. தொழில் துறை

நாட்டின் தொழில் வளத்தினை மேம்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வல்லுநர்களடங்கிய 'தேசிய தொழில் ஊக்குவிப்புக் கழகம்' (The society for encouragement of National Industries) நிறுவப்பட்டது. அக்கழகம் பிரான்சில் தொழில்களை ஊக்குவிக்கப் பற்பல வழிமுறைகளைப் பின்பற்றியது. அவற்றுள் கண்காட்சிகள் அமைத்தல், மாதிரித் தொழிற்கூடங்களை அமைத்தல், சோதனை முயற்சியாகப் புதிய வகைத் தொழில் தொடங்குவோரைப் பரிசுகள் வழங்கி ஊக்குவித்தல் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். சிக்கரி, சர்க்கரை மற்றும் பருத்தித் தொழில்கள் ஊக்குவிக்கப்பட்டன. தொழில் சாலைகளின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தத் தொழிற்சட்டங்கள் இயற்றப்பட்டன.

## 4. பொதுப்பணித் துறை

நாட்டு மக்களின் நலன் கருதி நெப்போலியன் பல்வேறு பொதுப்பணித் துறைச் சேவைகளை மேற்கொண்டார். நாட்டின் பொது நிதியிலிருந்து இதற்கென பணத்தினைச் செலவிடாது போர்க் கைதிகளின் உழைப்பினை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி சிக்கனத்தைக் கடைப்பிடித்தார். தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தச் செய்தார். அதன் மூலம் நாட்டின் வணிக வளர்ச்சி உறுதி செய்யப்பட்டது. [illegible] அகலமான இராணுவச் சாலைகள் நெப்போலியனால் [illegible]. அவற்றுள் முப்பது சாலைகள் பாரிசுடன் பிரெஞ்சு நாட்டின் [illegible] பகுதிகளை இணைக்கும் வண்ணம் [illegible] சாலைகளாகக் கருதப்பட்ட டிரான்ஸ் ஆல்பைன் (Trans Alpaine Roads) பாரிசு நகரை டூரின், மிலான், ரோம், நேப்பிள்ஸ் ஆகிய வணிக மையங்களுடன் இணைத்தது. பாலங்கள் கட்டப்பட்டன. கால்வாய்கள் வெட்டப்பட்டன. பழைய கால்வாய்களும் நீர்வழிகளும் சீரமைக்கப்பட்டன. இராணுவ மற்றும் தொழில் ரீதியான முக்கியத்துவம் பெற்ற முக்கியத் துறைமுகங்கள் விரிவுபடுத்தப்பட்டன. செர்போர்க் (Cherbourg) டூலோன்(Toulon) துறைமுகங்கள் வளமும் விஸ்தரிப்பும் பாதுகாப்பும் கொண்டவையாக உருவாயின. தேசிய மாளிகைகள் அழகுபடுத்தப்பட்டன. நினைவுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாக்க கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. பாரிஸ் நகரம் வனப்புமிக்க நகரமாக மிளிர்ந்தது. டியூலரிஸ் பான்டைன்ப்ளூ ஆகிய நகரங்களும் புதுப்பொலிவு பெற்றன.

லோவ்ரே (Louvre) அருங்காட்சியகம் நெப்போலியனின் இராணுவ வெற்றிக்குச் சான்றாகத் திகழ்ந்தது. இத்தாலி, ஸ்பெயின், நெதர்லாந்து நாடுகளிலிருந்து வெற்றியின் முடிவில் கைப்பற்றப்பட்ட அரும்பொருட்கள் அங்கு காட்சிப் பொருட்களாய் வைக்கப்பட்டன. ஐரோப்பாவின் 'ஆனந்த நகரம்' என்ற அந்தஸ்தினை பாரிஸ் பின்னாளில் பெறுவதற்கான துவக்கமாக நெப்போலியனின் பணிகள் அமைந்தன. அவன் காலத்தில் பாரிசின் மக்கள் தொகை இரட்டிப்பானது என்ற புள்ளிவிபரம் பாரிஸ் நோக்கி மக்கள் ஈர்க்கப்பட்டனர் என்பதற்கான சான்றாகும்.

## 5. சமயத்துறை

புரட்சியின் முடிவில் பிரான்சில் சமயத் துறையினர் அதிருப்தியுடன் காணப்பட்டனர். தமது நிர்வாகத்தை உறுதிப்படுத்திக் கொள்ள சமயத் துறையினருடன் இணங்கிப் போவது அவசியம் என நெப்போலியன் உணர்ந்தார். தனிப்பட்ட முறையில் தன்னை எந்த ஒரு தனித்த சமயப் பிரிவினராகவும் காட்டிக் கொள்ளவில்லை. அனைத்து சமயங்களும் ஒன்றென்ற உயர்ந்த நோக்குடையவராய்த் திகழ்ந்தார். எகிப்தில் நான் ஒரு இசுலாமிர்; பிரான்சில் நான் ஒரு கத்தோலிக்கர்" என்று கூறிக் கொண்டார். அவரது கருத்துப்படி சமயம் என்பது சமுதாயத்தை இணைக்கும் பண்புடையது; ஒது பாதுகாப்பு வடிகால் போன்றது; சமுதாயத்தின் அடிப்படையாய் உள்ள ஒன்று என்பதாகும். அது அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதில் உறுதியுடன் இருந்தார். தனது அரசியல் நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் 1801ல் போப் ஏழாம் பயசுடன் உடன்பாட்டினைச் செய்து கொண்டார். அதன்படி, 1.புரட்சியின் போது திருச்சபையின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டதையும், மடாலயங்கள் அழிக்கப்பட்டதையும் போப் அங்கீகரித்தார். குருமார்களின் ஊதியங்களை அரசு தரவேண்டும் என்ற ஏற்பாடும் ஒப்புக் கொள்ளப்பட்டது. 2.குருமார்களை முதன்மைக் கான்சல் நியமிக்கவும் அவர்களின் பதவிப் பிரமாணத்தைப் போப் நடத்தி வைக்கவும் ஏற்பாடாயிற்று. 3. பாதிரியார்களை மத குருமார்கள் நியமிப்பர். இவ்வாறு கத்தோலிக்க மதம் பிரெஞ்சு தேசிய அரசுடன் அதிகாரப்பூர்வமாக இணைக்கப்பட்டது.

பிரான்ஸ் 50 மேற்றிராணியார்கள் பிரிவாகவும், 10 அதிமேற்றிராணி யார்கள் பிரிவாகவும் பிரிக்கப்பட்டது. போப்புடன் நெப்போலியன் செய்து கொண்ட இந்தச் சமய உடன்பாடு பின்னாளில் அதாவது 1804ல் அவர் அரசராக முடிசூட்டிக் கொண்ட போது போப்பின் உடனடி அங்கீகாரத்தைப் பெற வகை செய்தது.

## 6. கல்வித் துறை

தேசிய அளவில் ஒரே சீரான கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. திருச்சபையிடமிருந்து கல்விப் பணி தனிமைப்படுத்தப்பட்டது. 1802 ஆம் ஆண்டு மே முதல் நாள் இயற்றப்பட்ட சட்டத்தின் படி பிரெஞ்சுக் கல்வி நிறுவனங்கள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன.

1. ஆரம்பப் பள்ளிகள் ஒவ்வொரு கம்யூனிலும், பிரிபெக்ட்டுகள் அல்லது துணை பிரிபெக்ட்டுகளின் கண்காணிப்பில் நிர்வகிக்கப்பட்டன.

2. இடைநிலை (அல்லது) இலக்கணப் பள்ளிகள் பிரெஞ்சு, லத்தீன் மற்றும் அடிப்படை அறிவியலில் சிறப்புப் பயிற்சியினை வழங்கின. அவை அரசு அல்லது தனியார் நிதி ஆதாரத்துடன் இயங்கின. ஆனால் அனைத்தும் தேசிய அரசின் கட்டுப்பாட்டில் செயல்பட்டன.

3. லைசீஸ் (Lycies) அல்லது உயர்நிலைப் பள்ளிகள் ஒவ்வொரு நகரத்திலும் நிறுவப்பட்டன. அரசால் நியமிக்கப்பட்ட இதன் ஆசிரியர்கள் உயர் கல்வியை மக்களுக்கு வழங்கினர்.

4. சிறப்புப் பள்ளிகளான தொழில் நுட்பப் பள்ளிகள், அரசுப் பணிப் பள்ளிகள், இராணுவப் பள்ளிகள் ஆகியவை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கின.

புதிய கல்வித் திட்டம் நாடு தழுவிய அளவில் ஒரே மாதிரியானதாக செயல்படுத்தப்படுவதை ஒருங்கிணைக்கவும் மேற்பார்வையிடவும் பிரான்ஸ் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. அதன் முக்கிய அதிகாரிகள் முதன்மைக் கான்சலால் நியமிக்கப்பட்டனர் புதிய பள்ளிகளை நிறுவுதலோ, பொது மக்களுக்குக் கல்வி போதிப்பதோ பல்கலைக்கழகத்திடமிருந்து உரிமை பெற்ற பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும். அரசுக் கல்வி நிறுவனங்களில் ஆசிரியராய்ப் பணிபுரிபவர்களைத் தேர்ந்தெடுக்க பாரிசில் ஒரு பள்ளி அமைக்கப்பட்டிருந்தது. அனைத்துப் பள்ளிகளிலும் கிறிஸ்துவ மதத்தின் அடிப்படைக் கருத்துக்களும் நன்னடத்தைப் பண்புகளும், அரசிடமான விசுவாசத்தின் அவசியமும் போதிக்கப்பட்டன. நெப்போலியனின் கல்விச் சீர்திருத்தங்கள் உயர்ந்த நோக்குடன் வடிவமைக்கப்பட்டன. ஆனால் போதிய நிதி ஆதாரமின்மையால் அவை செயல்படுத்தப்படுவதில் தடுமாற்றம் காணப்பட்டது.

பெண் கல்விக்கு நெப்போலியன் போதிய முக்கியத்துவம் வழங்கினார். சமயக் கல்வி, கணிதம், பிரெஞ்சு மொழிக் கல்வி, வரலாறு, புவியியல், நடனம், இசை, கை வேலைப்பாடுகள் பற்றிய கல்வி பெண்களுக்கு வழங்கப்பட வகை செய்யப்பட்டது. நல்ல மனைவியாய், பொறுப்பான தாயாய் உருப்பெற கல்வி

பயன்பட வேண்டும் என்ற இலக்குடன் கல்வித் துறைச் சீர்திருத்தங்கள் வடிவமைக்கப்பட்டன.

## சட்டத்துறை

நெப்போலியனின் சீர்திருத்தங்களில் சிகரம் போன்றது அவரது சட்டத் துறைச் சீர்திருத்தங்களாகும். சமயத் துறைச் சீர்திருத்தங்கள் மூலம் சார்லமேனுக்கு இணையாகப் பேசப்படும் இவர் தமது சட்டத்துறைச் சீர்திருத்தங்களால் ஜஸ்டீனியனுக்கு இணையாகப் போற்றப்படுகிறார். இன்றளவும் பல ஐரோப்பிய நாடுகளின் சட்டங்களில் நெப்போலியனின் சட்டத் தொகுப்பின் சாயல்கள் காணக் கிடக்கின்றன. தமது இறுதி நாட்களை செயின்ட் ஹெலினா தீவில் கழித்த போது நெப்போலியன் "தான் பெற்ற நாற்பது வெற்றிகளை விட காலம் கடந்து நிலைத்த புகழைத் தரவல்லது தனது சட்டத் தொகுப்பே" எனக் குறிப்பிட்டார்.

புரட்சிக் காலத்தில் பிரான்சில் நானூறுக்கும் மேற்பட்ட பலவகைச் சட்டங்கள் நிலவின. அவை மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தின. நெப்போலியன் நிர்வாகப் பொறுப்பை மேற்கொண்ட பின்னர் நாடு தழுவிய அளவில் ஒரே சீரான சட்டத் தொகுப்பு நடைமுறைப்படுத்தப்பட முயற்சிகளை மேற்கொண்டார். எனவே சட்டத் தொகுப்பினைத் தயாரிப்பதற்கென சட்ட வல்லுனர்கள் அடங்கிய குழுவினை நியமித்தார். சிவில், கிரிமினல், பீனல், வணிகச் சட்டங்களைத் தயாரிக்கும் பணியில் அது ஈடுபட்டது. நெப்போலியனின் இம்முயற்சியை சாவிக்னி ஆஸ்ட்ரியன் என்ற சட்ட வல்லுனர்கள் குறைகூறிய போதிலும் அதனை மிகச் சிறந்த ஆக்கபூர்வமான முயற்சி என பலரும் பாராட்டினர்.

## சிவில் சட்டம்

சிவில் சட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:

1. சமய சகிப்புத் தன்மையையும், சமத்துவத்தையும் வலியுறுத்தியது.

2. குடும்பத்தின் தலைவன் தந்தை. அவரே முதன்மை அதிகாரம் பெற்றவர். அவரது வழிகாட்டுதலின்படி குடும்பம் செயல்பட வேண்டும். குழந்தைகள் தவறு செய்தால் அவர்களைத் தந்தை தண்டிக்கலாம். தந்தையின் அனுமதியுடனேயே மகனோ, மகளோ திருமணம் செய்து கொள்ளலாம்.

3. 18 வயது நிரம்பும் வரை தந்தையின் வருவாயை அனுபவிக்கலாம்.

4. பெண்களுக்குக் குடும்பத்தில் சம அந்தஸ்து வழங்கப்படவில்லை. கணவனுக்குக் கட்டுப்பட்டே நடக்க வேண்டும். கணவனின் அனுமதியுடன் தான் சொத்துக்களை வாங்கலாம் அல்லது விற்கலாம்.

5. மணவிலக்கு அனுமதிக்கப்பட்டது. ஒழுக்கமின்மை, கொடூரச் செயல்கள் ஆகியவற்றின் காரணமாக இருதரப்பு இசைவுடன் மணவிலக்கு அனுமதிக்கப்படும்.

6. வட்டியின் அளவு சட்டத்தின்படி நிர்ணயிக்கப்படும்.

7. தனிமனிதன் தனது சொத்தில் பாதிக்கு மேல் விற்கவோ பிறருக்கு எழுதி வைக்கவோ முடியாது.

8. சிவில் வழக்குகளை நீதிமன்றங்களுக்கு வெளியில் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ளும் முறையும் அனுமதிக்கப்பட்டது. ஆனால் செலவும், காலதாமதமும் இம்முறையின் மிகப்பெரும் குறைகளாய்க் காணப்பட்டன.

## கிரிமினல் சட்டங்கள் (1808), தண்டனைச் சட்டம் (1810)

1. மரண தண்டனை, சிறையிலடைத்தல், சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் ஆகியவை கடுமையான தண்டனைகளாகும்.

2. குற்றங்களின் தரத்தின் அடிப்படையில் அதிகப்படியான மற்றும் குறைந்த அளவு தண்டனை விபரப் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

3. நடமாடும் நீதிமன்றங்கள் கிராமங்களில் செயல்பட்டன.

4. பொதுமக்கள் முன்னிலையில் விசாரிக்கும் முறை அறிமுகமானது.

5. ஜூரி முறை பின்பற்றப்பட்டது.

6. குற்றவாளிகள் தங்கள் நிலைபற்றிய விளக்கத்தினை ஆலோசகர்கள் உதவியுடனும், சாட்சிகளை விசாரித்தறிந்தும் வெளிக் கொணரலாம்.

7. ஹேபியஸ் கார்பஸ் என்னும் ஆள் கொணர் ஆணை அனுமதிக்கப் படவில்லை.

## வணிகச் சட்டங்கள்

1. வணிகர்களுக்குப் பல சலுகைகளை வழங்கும் வண்ணம் அமைந்தன.

2. வணிகச் செயல்பாடுகளான கடன் முறைகள், திவாலாகும் முறை ஆகியவற்றை வரையறுத்தன.

3. வணிக வளர்ச்சிக்கு இடையூறாக உள்ள அம்சங்களை நீக்க வகை செய்தன.

## சட்டத்துறைச் சீர்திருத்தங்கள் பற்றிய மதிப்பீடு

நெப்போலியனின் சட்டத் தொகுப்பு எளிமையானதாகவும், புரிந்து கொள்ளத்தக்கனவாகவும் அமைந்தது. புரட்சியின் மாபெரும் சமுதாய வெற்றிக் கோட்பாடுகளான சிவில் சமத்துவம், சமயப் பொறை, சொத்துரிமை சமத்துவம், அடிமை முறை ஒழிப்பு, நிலமானிய மற்றும் சிறப்புரிமை ஒழிப்பு ஆகியவை உரிய முக்கியத்துவத்தினைப் பெற்றன. பெண்கள் சமத்துவம் பேணப்படாமை, கடுமையான தண்டனைகள் ஒழிக்கப்படாமை போன்ற கரும்புள்ளிகள் காணப்பட்டாலும், நெப்போலியனின் சட்டத்தொகுப்பு அவரது மிகச் சிறந்த பணியாகப் பலராலும் போற்றப்படுகிறது.

## 8. குடியேற்றக் கொள்கை

முதன்மைக் கான்சலாகப் பணிபுரிந்த காலத்தில் நெப்போலியன் பிரான்சின் குடியேற்றங்களை மேலும் வலுப்படுத்த தீவிர நோக்குக் கொண்டவராய் இருந்தார். எனவே 1800ல் ஸ்பெயினிடமிருந்து வளமான லூசியானாவைப் பெற்றார். தனது மைத்துனன் தளபதி லெக்லெர்க் (Leclerc) தலைமையில் ஹெய்டியில் (Haiti) பிரான்சின் ஆதிக்க நிலையை உறுதிப்படுத்தப் படைப்பிரிவினை அனுப்பினார். அங்கு வாழ்ந்த நீக்ரோக்களின் எதிர்ப்பினையும், இங்கிலாந்தின் எதிர்ப்பினையும் லெக்லெர்க் சமாளிக்க இயலாது தோற்றுத் திரும்பினார். முடிவில் லூசியானாவையும் பிரிட்டனிடம் இழந்து விடுவோமோ என்ற அச்சத்தின் காரணமாகத் தமது ஏகாதிபத்திய ஆசையை விடுத்து 1803ல் அதனை அமெரிக்க ஐக்கிய நாடுகளிடம் விற்றார். அவரது ஏகாதிபத்தியக் கனவு தோல்வியடைந்தது.

## 9. உயர் மதிப்புக் குழுமம் (Legion of Honour)

1802 மே மாதம் உயர் மதிப்புக் குழுமம் என்ற அமைப்பு நெப்போலியனால் நிறுவப்பட்டது. பிறப்பு, தரம் மற்றும் சமய வேறுபாடுகளின்றி தேசத்திற்கு மதிப்பு மிக்க சேவை புரிந்தோருக்கு விருதுகளை இக்குழுமம் வழங்கியது. விருதுகளுக்கு தகுதியானவர்களை நெப்போலியன் தலைமையிலான குழு முடிவு செய்தது. அவரது அதிகாரத்தை மேலும் வலிமையுறச் செய்ய இவ்வமைப்பு துணைபுரிந்தது. நெப்போலியனின் ஆட்சிக் காலத்தின் பின்னரும் கூட பிரான்சில் இக்குழுமம் நிலைத்து நின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## 10. தப்பியோடிய பிரபுக்களுடனான கொள்கை

சமரசப் போக்குடையவரான நெப்போலியன் புரட்சிக் காலத்தில் பிரான்சை விட்டுத் தப்பியோடிய பிரபுக்களை மீண்டும் வந்து குடியேறும்படி அழைப்பு விடுத்தார். அவர்கள் சொத்துக்களைத் திரும்பப் பெற வகை செய்தார்.

அரசுப் பதவிகளைக் கொடுத்து அவர்களையும் தனது ஆதரவாளர்களாக மாற்றினார். அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட்டனர். அவர்களும் நெப்போலியனின் ஆதரவாளர்களாயினர்.

## 11. அரசியல் எதிரிகளை அடக்குதல்

தனது ஆட்சிக்கு எதிராகச் சதி வேலைகளில் ஈடுபட்டோரைக் கடுமையாகத் தண்டித்தார். தூக்கிலிடுதல், நாடு கடத்தல் போன்ற தண்டனைகள் மூலம் எதிரிகளை ஒழித்தார். எதிர்க்கத் துணிந்தவர்களுக்கும் அது எச்சரிக்கையாக அமைந்தது. எனவே எதிர்ப்புக்கள் படிப்படியாகக் குறைந்து சீர்திருத்தப்பணிகளில் முழுமையாய் கவனம் செலுத்த ஏதுவாயிற்று.

## 12. பத்திரிக்கைத் தணிக்கை

புரட்சி முடிந்து நிலையான அரசு ஏற்பட சிறிது காலம் பிடித்தது. மக்கள் கருத்தினை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கும் பத்திரிக்கைகளைத் தணிக்கை செய்வதன் மூலம் தனக்குச் சாதகமான மக்கள் கருத்தை உருவாக்க இயலுமென நம்பினார். எனவே பத்திரிக்கைத் தணிக்கை முறை அறிமுகப் படுத்தப்பட்டது. அரசின் ஒப்புதலின்றி செய்திகள் வெளியிடப்படுவது தடைசெய்யப்பட்டது. 1805ல் நெப்போலியன் டிரபால்கர் போரில் அடைந்த தோல்வி பிரான்ஸ் நாளிதழ்களில் வெளியிடப்படவில்லை. தனது புகழ் பேசும் செய்திகளை மட்டுமே வழங்கும் ஆயுதமாகப் பத்திரிக்கைகளை நெப்போலியன் பயன்படுத்தினார்.

## 13. நாணயங்கள்

புதிய நாணயங்கள் அச்சிடப்பட்டன. 'பிரெஞ்சுக் குடியரசு', 'பேரரசர் நெப்போலியன்' என்ற சொற்றொடர்கள் பொறிக்கப்பட்ட நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன.

## 14. பிற சீர்திருத்தங்கள்

1. புரட்சிக் காலத்து மூவர்ணக் கொடி தேசியக் கொடியாக அங்கீகரிக்கப் பட்டது. மார்சேல்ஸ் என்ற புரட்சிப் பாடல் தேசிய கீதமென அங்கீகாரம் பெற்றது.

2. விவசாயத் துறையில் சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. சதுப்பு நிலங்கள் விளை நிலங்களாக மாற்றப்பட்டன. பயிற் சுழற்சி முறை அறிமுகப் படுத்தப்பட்டது.

நெப்போலியன் மிகச் சிறந்த நிர்வாகி. புரட்சிக் கருத்துக்களுக்குச் செயல்வடிவம் கொடுத்த புதுமையான அரசர். நீதிக்குக் குரல் கொடுத்துச் சட்டத் தொகுப்பினை வழங்கிய பெருமைக்குரியவர். கல்வியே தேசத்தின் வளர்ச்சிக்கான வலுவான அடித்தளம் என்பதை உணர்ந்து கல்வித் துறையைச்

சீர்படுத்திய பண்பாளர். தொழில் மற்றும் விவசாய மேம்பாட்டிற்குத் தமது கவனத்தைத் திருப்பிய பொருளியல் நிபுணர். வங்கி முறையை மேம்படுத்தி நிதி நிலையை நிலைப்பாடுடையதாக மாற்றிய வங்கி முறை வல்லுனர். பாராட்டுக்கள் மனிதனை வளர்க்கும் என்ற பொருளுரையை அறிந்து செயல்பட்டு, மக்களின் பாராட்டு என்ற விருதினைப் பெற்றவர். தேசிய அருங்காட்சியகம் அமைத்துத் தமது இராணுவ வெற்றிகளுக்கு நிரந்தரச் சான்றினை நிறுவிய தொலைநோக்கர். சமுதாயத்தின் இணைப்புப் பாலமாய் உள்ள சமயத் துறையுடன் இணக்க உறவு கொள்வதே தனது அரசியல் கனவுகளை நனவாக்க எளிய வழி என்பதை உணர்ந்து நடைமுறைப்படுத்திய மிகச் சிறந்த அரசியல் தந்திரம் மிக்கவர். இன்று வரை நெப்போலியன் புகழ் பேசுபவை அவரது சீர்திருத்தங்களே அன்றி இராணுவ சாகசங்களும் வெற்றிகளும் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

## 'பிரெஞ்சுப் புரட்சியின் குழந்தை நெப்போலியன்' ஒரு கண்ணோட்டம்

போர் வீரனாக வாழ்வைத் தொடங்கிய நெப்போலியன் பிரெஞ்சுப் புரட்சி ஏற்படுத்திய மாறுபட்ட சூழலைத் தனது தனிப்பட்ட திறமையின் மூலம் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு பிரான்சின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். 1799 லிருந்து 1814 வரையிலான காலக்கட்டத்தில் பிரான்சின் தலைவிதியை மட்டுமல்லாது ஐரோப்பாவின் தலைவிதியையும் நிர்ணயிக்கும் மேலான அதிகாரத்தையும் பெற்றிருந்தார். மாவீரன் நெப்போலியன் என்று வரலாற்று ஏடுகளில் குறிக்கப்படும் அவர் நிர்வாகத்தைச் செம்மையுறச் செய்து தனது நிர்வாகத் திறனையும் வெளிப்படுத்தினார். புரட்சியின் விளைவாய் எழுச்சி பெற்ற மாபெரும் சக்தி மட்டுமல்ல நெப்போலியன். குழந்தை தனது பெற்றோரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவது எத்தனை இயற்கையானதொரு செயலோ அதேபோன்று புரட்சிக் கருத்துக்களுக்கு செயல்வடிவம் கொடுத்து புரட்சியின் குழந்தை என்ற கூற்றிற்கு இலக்கணமாய்த் திகழ்ந்தார்.

பண்டைய அரசியல் நிறுவனங்களை ஒழித்தார். புதிய புரட்சிகரமான நிறுவனங்களை நிறுவினார். சமுதாய சமத்துவம் என்ற புரட்சிக் கருத்தின் அடிப்படையில் பதவிகளைப் பெறும் உரிமை திறமையின் அடிப்படையில் அனைத்துப் பிரிவினருக்கும் திறந்து விடப்பட்டது.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கொள்கைக்கு உண்மையான செயலாக்கம் கொடுக்கப்பட்டது. சட்டங்கள் தொகுக்கப்பட்டன. எளிமையானதாகவும், புரிந்து கொள்ளக் கூடியதாகவும் அவை அமைந்தன. நியாயமான நீதி மக்களுக்கு உறுதி செய்யப்பட்டது.

இத்தகைய சில அம்சங்கள் நெப்போலியனைப் புரட்சியின் குழந்தை என்று கருதும் வகையில் உள்ளது. ஆனால் அவரது சீர்திருத்தங்கள் பலவும்,

செயல்பாடுகள் சிலவும் அவரைத் தாயைக் கொன்ற குழந்தை என்றும் விமர்சனம் செய்ய வைக்கின்றன.

சமத்துவம் என்ற புரட்சிக் கருத்திற்கு அளித்த முக்கியத்துவத்தினை ஏனைய இரண்டு கொள்கைகளான சுதந்திரம், சகோதரத்துவம் ஆகியவற்றிற்கு அவர் வழங்கவில்லை. மக்களின் பேச்சுரிமை, அரசியல் உரிமை, எழுத்துரிமை ஆகியவை பெரும்பாலும் முடக்கப்பட்டன. பத்திரிக்கைத் தணிக்கை முறையைப் பின்பற்றினார். பண்டைய முடியாட்சியை மீண்டும் புதுப்பித்து தானே வல்லாட்சியாளராய்த் திகழ்ந்தார். அவன் மேற்கொண்ட பெரும்பாலான சீர்திருத்தங்கள் மக்கள் மீது திணிக்கப்பட்டவையாகும். கட்டாய இராணுவ சேவையைக் கடுமையாக்கினார். தனது இராணுவ வெற்றிக் கனவுகளை எட்ட பிரெஞ்சு மக்களைப் பகடைக் காய்களாக்கினார். முடியாட்சிப் பண்புகள் மாய்க்கப்பட்டன. பிரதிநிதித்துவ அமைப்புக்கள் பெயரளவு அதிகாரங்களை மட்டுமே பெற்றிருந்தன. திருச்சபையின் ஆதிக்கம் முடக்கப்பட்டது. சமூக, அரசியல், சமய, இராணுவ, பொருளாதாரத் துறைகள் சார்ந்த அனைத்து அதிகாரங்களும் மைய அரசிடம் குவிக்கப்பட்டன. 1804லிருந்து தனிமனித ஆட்சியே நடைபெற்றது. புரட்சி வேண்டிய தாராளக் கொள்கையை மக்கள் சுவைக்கவில்லை. மக்கள் இறைமை என்ற கோட்பாடு மறுக்கப்பட்டது.

கிரான்ட்டும் டெம்பர்லியும் "நெப்போலியன் புரட்சியின் குழந்தையாவார். ஆனால் அதன் நோக்கங்களை மாற்றியமைத்தார்" என்கின்றனர். பிளன்லே (Flenley) என்பவர் "நெப்போலியன் புரட்சியின் குழந்தையும் வாரிசும் ஆவார். அவர் சுதந்திரத்தை அழித்தார். ஆனால் சமத்துவததைப் பாதுகாத்தார்" என்கிறார். நெப்போலியன் புரட்சிக் கால்த்தை அடுத்து நிலையானதொரு நல்லாட்சியை வழங்கிய பெருமைக்குரியவராவார்.

## நெப்போலியன் - ஒரு மதிப்பீடு

இணையற்ற தளபதி; சிறந்த நிர்வாகி. அருமையான பேச்சாற்றல் மிக்கவர். இராணுவ வீரர்களுக்கு உத்வேகம் அளிப்பதில் நிகரற்றவர். அன்பிற்குத் தலைவணங்கும் பண்பினர். நட்பிற்கும், உறவிற்கும் அவர் அளித்த சிறப்புரிமைகள் அவனது மனித நேயத்தை உணர்த்துகின்றன. ஐரோப்பியப் புவியியல் பற்றிய தெளிவான அறிவு கொண்டிருந்தார். வியத்தகு நினைவாற்றல் அவரிடம் இயற்கையாய் அமைந்திருந்தது. திறமையை மதிக்கும் பண்பு அவரிடம் மிகுந்து காணப்பட்டது. கடுமையான உழைப்பாளி. எண்ணியதை எண்ணியாங்கு எய்தும் திண்மை பெற்றிருந்தார். ஐரோப்பியக் கூட்டிணைவு மட்டுமே அவரைத் தோற்கடிக்க முடிந்தது. ஜெர்மானிய, இத்தாலிய ஐக்கியத்திற்கு உந்துதலாக அமைந்த தேசிய உணர்வினை அந்நாடுகளில் துளிர்விடச் செய்த பெருமைக்குரியவர் நெப்போலியனே. வல்லாட்சியாளராய் வலம் வந்த போதிலும் நல்லாட்சியை வழங்கியவராவார்.